நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

அற்பரல்ல நாங்கள் அறி!

எச்சில் இலையதற்கும் எலும்புத் துண்டதற்கும்
இச்சைகொண்டோர் அல்லவடா எம்மவர்கள்! - கச்சையது
விழுந்தாலும் கைகொண்டு பொத்துவதைப் பொத்தி வீரம்
ஒழுங்காகக் காப்பவர்நாம்! ஓம்!!

- ஈழமோகம்

இதழ் 49 ஜூன் 16 - ஜூன் 29 1994 விலை 7/=

# "அற்ப சலுகைகளை வெறுக்கிறோம்"
# "தியாகங்களை மதிக்கிறோம்"
# "பாராளுமன்றத்தை விரும்புகிறோம்"

## வவுனியாவில் கூட்டணித் தலைவர்கள்

'இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எப்போதும் இலங்கைத் தமிழர்களுக்காக நிற்கப் போவது இந்தியா மட்டுமே! நாம் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே வடமராட்சி தாக்குதலை அடுத்து இந்தியா நேரடியாக தமிழ் மக்களுக்கு உதவிபுரிய முன்வந்தது. தமிழ் மக்களுக்கு உறுதுணையாகத் திகழ்ந்த அன்னை இந்திரா இறந்தது போலவே எமக்கு ஆதரவளித்த ராஜீவ் காந்தியும் மறைந்தது எமது துரதிஷ்டமாகும். நாம் எமது போராட்ட நிலைமைகளையும், தீர்வு கிடைப்பதற்கான பல சந்தர்ப்பங்களை நாம் இழந்துவிட்டதையும் நினைவு கூர்வது எதிர்காலத்தில் செய்ய வேண்டிய விடயங்களை தீர்மானிக்க மிகவும் உதவியாக இருக்கும். நாம் இளைஞர்களின் தியாகங்களை மதிக்கிறோம்; தமிழ் மக்களின் இன்னல்களுக்குத் தீர்க்கமான முடிவு காணப்பட வேண்டும் என்பதற்காகவே செயற்படுகிறோம்.'

இவ்வாறு கடந்த 12.6.94 ஞாயிறன்று வவுனியாவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் பேசும் போது த.வி.கூ தலைவர் சிவசிதம்பரம் தெரிவித்தார்.

வவுனியா புதிய கிளைக்கான நிர்வாகக் குழுத்தெரிவினை சனியன்று முடித்துக் கொண்ட கூட்டணி இக்கூட்டத்தினை ஞாயிறன்று ஒழுங்கு செய்திருந்தது. இக் கூட்டத்தில் தலைவர் சிவசிதம்பரம், நிர்வாகச் செயலாளர் தங்கத்துரை, மாவை சேனாதிராசா ஆகியோரும் உரையாற்றினர்.

### மாறுவேடத்தில் அமிர்

கூட்டணித் தலைவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது: "1983இல் இனக் கலவரம் வெடித்த போது எமது அன்றைய தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் மாறுவேடமணிந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார். அங்கே அவர் இந்தியத் தலைவர்கட்கும், அரசுக்கும் இங்குள்ள தமிழர்களின் அவல நிலை பற்றி எடுத்துக் கூறி உதவி செய்யும்படி கோரினார்.

1977இல் தனிநாடு கோரி, அதற்கான ஆணையை தமிழ் மக்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் அதற்கான மாற்றுத் திட்டம் எதனையும் இலங்கை அரசு வழங்கத் தயாராக இருக்கவில்லை.

### அற்ப சலுகைகள் எமது நோக்கமல்ல

நாம் எமது விடுதலை நோக்கத்திற்கு பாதகமான நடவடிக்கைகளில் இறங்க மாட்டோம். உள்ளூராட்சித் தேர்தல் போன்ற தேர்தல்களில் போட்டியிட்டு அற்ப சலுகைகளைப் பெறுவதால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. இதனால்தான் நாம் இத் தேர்தலில் போட்டியிடவில்லை. எமது இலட்சியத்தோடு இணைந்த பரந்த நோக்கத்திற்கு எது உதவியாக உள்ளதோ அதில் தான் நாம் கவனம் செலுத்தி வருகிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்

→15

## இந்திய அமைதிப்படைக்கு விற்கப்பட்ட சிலை?



1000 ஆண்டுகள் பழமையான ஐம்பொன்னாலான அழகிய சந்திரசேகரர் சிலை கோவிலில் இருந்து காணாமற் போயுள்ளது. மேலேயுள்ள படத்திலுள்ள இந்தச் சிலை காணாமல் போனதுபற்றி கோவில் நிர்வாகம், குறிப்பாக தர்மகர்த்தா திரு.மு.கோ.செல்வராஜா மௌனம் சாதித்து வருகிறார்.

இதனை இந்திய அமைதிகாக்கும் படைக்கு தர்மகர்த்தா சபையினர் விற்றுவிட்டதாகப் பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

## தேர்தல் முஸ்தீபு: மட்டக்களப்பு மக்கள் ஏமாளிகளா?

மட்டக்களப்பில் தேர்தல் நடவடிக்கைகள் படிப்படியாகச் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க த.வி.கூட்டணி ஏனைய தமிழ்க் குழுக்கள் என்பன கச்சை கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளன. சிங்களக் கட்சிகள் முஸ்லீம் மக்கள் மத்தியில் தான் ஆரம்பத்தில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தன். ஐ.தே.கட்சி தனது செல்வாக்கை தமிழ்ப்பகுதிகளில் நிலைநாட்ட முற்பட்டு அண்மையில் நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் மூக்குடைபட்டிருந்தது. கீழே விழுந்தாலும் மண்படவில்லை என்ற தோரணையில் ஏறாவூர் ஓட்டமாவடி பிரதேசங்களில் தமக்குத் தான் செல்வாக்குண்டு என அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது. மு.காங்கரஸும் காத்தான்குடியை மட்டும் கைப்பற்றிக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லீம்களின் செல்வாக்கு தனக்குத் தான் உள்ளது எனக் கூறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் தேர்தலைச் சந்திக்கும் முஸ்லீம் மக்கள் தமது தனித்துவத்தை இழந்து போய்க் காணப்படுகிறார்கள்.

ஆளும் கட்சியான ஐ.தே.க பரவலான முறையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இக்கட்சியின் புதிய செயலாளர் காமினி விஜேயசேகரா அண்மையில் மட்டக்களப்பிற்கு சூறாவளிப் பயணத்தை மேற் கொண்டிருந்தார்.

இவரின் இவ்விஜயத்தின் போது பிரதமருக்கும் கொடுக்கப்பட்டிராத பாதுகாப்பு ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டிருந்தன. இவர் பயணம் செய்யும் பாதைகள் மக்கள் போக்குவரத்துக்குத் தடைசெய்யப் பட்டிருந்தது. இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடு வேறு கட்சிச் செயலாளர்களுக்கு செய்யப்படுமா என்ற கேள்வி ஒரு புறமிருக்க இம்மாதிரிப் படையணிகளுடனும், பாதுகாப்புடனும் வந்து 'மக்கள் எம் பக்கம், நாம் மக்கள் பக்கம்' என்று இவர்கள் விடும் அறிக்கையை மக்கள் நம்பிவிடுவார்கள் என்றும் இவர்கள் நம்புவதை என்னவென்பது.

இவரின் விஜயத்தை அடுத்து ஐ.தே.க நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஈஸ்வரன் ஏற்கனவே இழந்து போன தமது செல்வாக்கை மீளவும் நிலை நாட்டுவதில் படாதபாடு படுவதை அவதானிக்

→2

## நாணயக்கயிறு அவர்களிடம்!

காமினி திசாநாயக்கா பாரிய எதிர்ப்பையும் மீறி அரசாங்கத்துக்குள் நுழைந்து கொண்டாலும் இன்னமும் அரசாங்கத்துள் காமினி விரோத சக்திகளே பலம் வாய்ந்ததாக உள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் லஞ்ச ஊழல் விசாரணைக்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விஷேட ஆணைக்குழுவிடம் அகப்படாது காமினியைப் பற்றிய அறிக்கைகள் ஆதாரத்தை அகற்றும் வேலையில் காமினி குழுவினர் ஈடுபட்டிருந்த போதும் அக்கடிதங்கள் அனைத்தினதும் பிரதிகள் காமினி எதிர்ப்புக்குழுவிடம் கிடைத்து விட்டதாக தெரியவருகிறது.

காமினி திசாநாயக்காவுக்கு எதிரான முறைப்பாடுகள் அடங்கிய கடிதங்களில் SPC 399/86, SPC 450/86, SPC 832/836 மற்றும் SPC 3703/86 இலக்கங்களைக் கொண்ட கடிதங்களை மேற்படி காமினி எதிர்ப்புக்குழு பாதுகாத்து வருவதாக தெரியவருகிறது.

காமினி திசாநாயக்காவின் முன்னைய

→2

## இராணுவத்தினர் பெயரும் வாக்காளர் இடாப்பில்!

வருடாந்தம் ஜூன் மாதம் முதலாம் திகதி வாக்காளர் பதிவுகள் புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வவுனியா பிரதேசத்தின் இராணுவ தளங்களில் உள்ள இராணுவ வீரர்களது பெயர்களும் வவுனியா மாவட்டத்தின் வாக்காளர் பட்டியலில், பதியப்படுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

இப்பகுதியில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் பெயர்ப்பட்டியல்கள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் தயார் செய்யப்பட்டு வாக்காளர் பதிவுகளில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சுமார் 10 ஆயிரம் பெயர்களைக் கொண்ட பட்டியல்கள் இரு மொழிகளிலும் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு

→2

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழ் இனி

## ஊதாவிலிருந்து

## இரு குறிப்புகள்

பேர்லினிலிருந்து காலாண்டிதழாக வெளிவரும் ஒரு சஞ்சிகை 'ஊதா'. வாசகர்களிடமிருந்து ஆரோக்கியமான, நேர்மையான விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கும் இப் பெண்ணிய சஞ்சிகையின் (முகவரி: UVTHA, BAZ-GRENZENLOS, ORANIEN STR 159, 10969,BERLIN, GERMANY) 3வது இதழில் 'அகதி' என்ற தலைப்பில் சப்தா என்பவர் எழுதியுள்ள குறிப்புகள் கீழே வருகின்றன.

மெல்லத்தமிழினி வாசகர்களுக்காக அவற்றை அப்படியே தருகிறேன்: 'ஊதா'வினர்க்கும் சப்தாவுக்கும் நன்றிகள்:

*

''இருபத்தியொரு வயதுடைய இளைஞன் ஒருவன் அவனது சொந்த நாடாகிய அங்கோலாவிற்கு அவனைத் திருப்பி அனுப்புவதற்காக சிறையில் வைத்திருந்த போது தற்கொலை செய்துகொண்டான்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் மூன்று மாதங்களுக்கும் மேலாக சிறைக்குள் இருந்து கொண்டு தனது விடுதலை நாளை எண்ணிக் கொண்டிருக்கும் எனது தமிழ் நண்பன்தான் கண்ணுக்குள் வந்தான்.

அகதி வாழ்வில் எமது இருப்பைப்பற்றி அடிக்கடி கேள்வியெழுப்பும் அந்த நண்பன் கடைசியாக எழுதிய மடலில் இப்படி எழுதியிருந்தான்:

சாகசம்

அசாதாரணம்

சூனியம்

இதில் எது இருத்தலை உணர்த்தும்? நினைவா? நிழற்படமா? அது தான் இறந்துவிடப் போகிறோமே! இருத்தலின் உணர்தலை நாங்கள் எப்படி கண்டுகொள்ளப் போகிறோம்? அது எங்களுக்கில்லையா?

*

சென்றவருடம் செப்ரம்பர் மாதத்தில் சுஜித்தா என்கிற இலங்கைத் தமிழ்ச் சிறுமி கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட நிலையில் காட்டுக்குள் கண்டெடுக்கப்பட்டார். கொலைக்கான காரணமும், கொலை செய்தவர் பற்றிய ஊகங்களும் பலவிதமாகப் பேசப்பட்டது.

ஆனால் உண்மை இன்னும் இருட்டில்தான். சுஜித்தா காணாமற்போன இரண்டு கிழமைகளும் அலட்சியமாகவிருந்த இனவாதப் பொலிஸ் இப்போதுமட்டும் உண்மைகளைத் தேடியா கண்டுபிடிக்கப் போகிறது?

இந்தச் சம்பவம் நடந்த சில கிழமைகளுக்குப்பின் ஒரு செத்த வீட்டிற்குப் போயிருந்தேன்.

அங்கு வந்திருந்தவர் கேட்டார், 'சுஜித்தாவின்ர செத்தவீட்டுக்கு ஊர்வலம் வைச்சினமே. அதைப்பற்றி என்ன நினைக்கிறியள்?' என்று.

''அது புலியள் தங்கட பிரச்சாரத்திற்காகத்தான் வைச்சவையெண்டு அப்பட்டமாகத் தெரியும்தானே.'' என்றேன்.

''உங்களுக்கு விசரே. பாவம் சின்னப்பிள்ளை அநியாயமாக செத்துப் போச்செண்ட அனுதாபத்திலையெல்லோ அவங்கள் ஊர்வலம் வைச்சவங்கள்.''

''எத்தின சனங்கள் நாசியள் கொளுத்திச் செத்துப் போச்சுதுகள். 'மொல்லனில்' செத்ததும் பத்தும் பதின்னாலும் வயதுப் பிள்ளையள் தானே. 'லம்பர்கைமில' இலங்கை முஸ்லீம் குடும்பமொன்று நாசிக்காறங்களால எரிச்சுச் செத்தது.

அப்பவெல்லாம் உந்த மனிதாபிமானிகள் எங்க போனவையள்?''

''முஸ்லீம் எங்களுக்கு எதிரியள். அவங்கள் செத்தா நாங்கள் ஏன் ஊர்வலம் வைக்கவேணும்? சுஜித்தா புலியளுக்காகப் பாடுபட்ட பிள்ளை.''

முஸ்லீம் மக்கள் எங்களுக்கு எப்படி எதிரிகளாக முடியும்? இந்தக் கேள்விக்குத்தான் இன்னும் என்னால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை.

சுஜித்தாவின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட புலிகளில் முக்கியமான ஒருவர் பேசுகையில், தாங்கள் (புலியள்) இலங்கையரசின் வன்முறையைத் தாங்க முடியாமற்தான் ஆயுதங்களை ஏந்தியதாகச் சொன்னார்.

''முஸ்லீம் மக்கள் எந்த வன்முறையைச் செய்தார்கள் என்பதற்காக அவர்களுக்கெதிராக ஆயுதங்களை நீட்டினீர்கள்'' என்று அவரைத் திருப்பிக் கேட்டிருந்தால் அவரால் நிட்சயமாகப் பதில் சொல்லியிருக்க முடியாது.

சென்ற கிழமை மீண்டும் அகதிகள் வாழ்ந்த விடுதி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டு ஏழு வெளிநாட்டவர் இறந்து போனார்கள். திடீர் திடீரென கட்டடங்கள் தீயிடப்படுவதும், அதில் வெளிநாட்டவர் மட்டுமே பலியாகிப்போவதும், அதற்கான காரணங்கள் 'தெரியாமல்' இருப்பதும் அல்லது அது 'விபத்து'க்களாகவிருப்பதும் கடந்த காலங்களில் ஜெர்மனியில் நடக்கும் அதிசயங்கள்.

* * *

## இது

## தேசியப் பட்டியல் அல்ல!

முதலில் ஆமிற்.

பிறகு சிறிசேன.

அதன் பிறகு அலர்ட் றொபேர்ட்சன்

எப்படியோ விஜேதுங்க தான் விரும்பியபடி காமினி, காமினி விஜேவிக்கிரம, றொனிடிமெல் ஆகியோரை எம்.பிக்கள் ஆக்கிவிட்டார்.

கடைசி நிமிடம் தீவிரமாக மறுத்துக் கொண்டிருந்த இந்த தேசியப் பட்டியல் எம்.பிக்கள் திடீரென பதவி விலகி வழி விட்டுக் கொடுத்த விசித்திரம் எப்படி நடந்தது?

எல்லோரும் மூக்கில் விரலை வைக்கிற கேள்வி இது. ஆறுமில்லியன் ரூபா வரை பேரம் பேசப்பட்ட போதும் கூட அசைந்து கொடுக்காத இவர்கள் இப்போது இறங்கிவந்து விட்டார்கள்.

விலகிய தேசியப் பட்டியல் எம்.பிகட்கு இப்போது அரச கூட்டுத்தாபனங்களில் உயர்பதவி வழங்கப்படவுள்ளதாம்! ரூபா 25,000 க்கு மேல் சம்பளம்.

எம்.பிப்பதவியால் வந்த பென்சன் வேறு. இவர்களுக்கு கிடைக்கும்! விலகிய எம்.பிக்கள் உண்மையான பௌத்தர்கள் என்ற புகழாரத்தையும் கூடவே ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

ஒருவர் உண்மையான பௌத்தராக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஜனாதிபதி இவ்வளவு வெளிப்படையாக தெரிவித்த பின்னும், மற்றைய தேசியப்பட்டியல் எம்.பிக்கள் இன்னமும் ஏன் விலகவில்லை என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை.

கூடவே இன்னும் சில கேள்விகளும் கேட்கப்படுகின்றன.

விலகுபவர்கள் சிறந்த பௌத்தர்கள் ஆயின், உள்ளே நுழைபவர்கள் யார்?

யூ.என்.பி. எம்.பி பதவிகளிலிருந்து சிறந்த பௌத்தர்களை வெளியேற்றுவதுதான் ஜனாதிபதியின் திட்டமோ?

இவைதான் அந்தக் கேள்விகள்.

இந்தக் கேள்விகளுடன் எனக்கு 'எழும் இன்னொரு சந்தேகத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பதவியிலிருந்து முதலில் விலகிய 'ஆமிற்' அவர்களைப்பற்றி ஏன் ஜனாதிபதி ஒன்றும் சொல்லவில்லை?

யூ.என்.பியிடம் இருப்பது தேசியப் பட்டியல் அல்ல; 'வேசியர்' பட்டியல் என்கிறார் எனது சிங்கள நண்பர் ஒருவர்.

றொனியின் வருகைக்குப் பின்னும் இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

## தேர்தல்....

...கக் கூடியதாக இருக்கிறது. நகர் முற்றாக பச்சை மயமாகவே காட்சியளிக்கிறது. ஐ.தே.க செயலாளரின் கூட்டத்துக்கு பொதுமக்களையும், பெண்களையும் அதிகமாக அழைத்து வந்து மட்டக்களப்பில் தமக்குத் தான் அதிக செல்வாக்கு இருக்கிறது என்று காட்ட மிகவும் சிரமப்பட்டார் ஈஸ்வரன்.

மட்டக்களப்பில் செல்வாக்கற்ற பிரமுகர்களை ஐ.தே.கவிலிருந்து கழட்டி விடலாம் என எதிர்பார்ப்பதால் ஈஸ்வரன் உட்பட ஐ.தே.க பிரமுகர்கள் பலரும் பயந்த வண்ணமேயுள்ளனர்.

இதேவேளை இங்கு வந்த ஐ.தே.க செயலாளர் மட்டக்களப்பின் அரச திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்கள் எல்லாம் ஐ.தே.கவுக்கு வெற்றி தரும் வகையில் தான் நிரப்பப்பட வேண்டும் என அரச அதிபருக்கு ஆணையிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆனால் இவர் ஆணையிட முன்னரே அரச அதிபர் மோனகுருசாமி இதைத் தான் செய்து வருகிறார் என்பது உலகறிந்த ரகசியம். அரசாங்கத்தின் ஏஜெண்ட் என்பதை விட அவர் ஐ.தே.கவின் ஏஜெண்ட் என்பதே சாலப் பொருந்தும்.

ஸ்ரீ.ல.சு.கட்சி நேரடியாகத் தேர்தல் வேலையில் ஈடுபடாவிட்டாலும் இங்குள்ள தமிழ்க் குழுக்களை தமக்குச் சார்பாகத் திருப்புவதில் அதிக முனைப்புடன் செயல்படுகிறது. எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கான வெற்றி வாய்ப்பைக் கணக்கில் கொண்டு அதனுடன் சேர்வதில் தமிழ்க்குழுக்கள் ஒன்றை ஒன்று முந்திச் சென்று சுதந்திரக் கட்சியின் கதவைத் தட்டுகின்றன. இப்போது யாரை சேர்த்துக் கொள்வது யாரை வெளியில் விடுவது என்பது தெரியாமல் சுதந்திரக் கட்சி தடுமாறுகிறது.

இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலே சென்று கூட்டணியினர் தாங்கள் தான் தமிழ் மக்களின் அவதார புருஷர் என்று கூறிக் கொண்டு திடீரென்று நித்திரையிலிருந்து எழுந்தவர்கள் போல மட்டக்களப்பில் வந்து குதித்துள்ளார்கள்.

தங்களுடைய தலைமைத்துவத்தின் கீழ் மாத்திரம் தான் தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று கதை விடுகின்றனர். 1977இல் நடந்த பொதுத்தேர்தலில் மக்கள் இவர்களை நம்பி வாக்களித்ததையும் கூட்டணியினர் அதை தமது சுய நலன்களுக்காகப் பாவித்ததையும் தமிழ் மக்கள் மறந்து விட்டார்கள் என்று இவர்கள் நினைத்துக் கொண்டு செயற்படுவது போல் தெரிகிறது.

கட்சிக் கூட்டமும், கட்சிப் புனரமைப்பும் என்று ஜோசப் எம்.பியின் வீடு அல்லோலகல்லோலப்படுகிறது.

மறுபக்கத்தில் மட்டக்களப்பிலுள்ள அனைத்துத் தமிழ்க் குழுக்களும் தங்களிடையே ஒரு கூட்டணி அமைத்துக் கொள்ள முடியாமல் ஒருவர் மற்றவரைக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர். அதே வேளை தாங்கள் தான் மற்றவரை விட செல்வாக்கும் படைத்தவர் என்றும் காட்ட முயன்று வருகின்றனர்.

ரெலோவினர்பிரதேச சபைத் தேர்தலில் கிடைத்த வெற்றியை வைத்துக் கொண்டு தாம் தான் தமிழ் மக்களின் சார்பில் பாராளுமன்றம் செல்வோம் என்ற கனவிலிருக்கிறார்கள்.

கூட்டணியினரும், ஈ.பி.ஆர்.எல்.எப்பினரும் தங்களுடைய ஆணைப்படி தான் தமிழ் மக்கள் பிரதேச சபைத் தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள் என்று கூறிக் கொண்டு வாக்களிக்காத தமிழ் மக்களுக்கு உரிமை கோரியுள்ளனர்.

இது தவிர ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் தேர்தல் வேலைகளுக்கென தமிழ் நாட்டின் முகாம்களிலிருந்த தமது தொண்டர்களையும் கொண்டு வந்து இறக்கியுள்ளனர். வாகனங்கள் 'தேர்தல் ஓட்டம்' ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஈரோஸினர் கடந்த பிரதேச சபைத் தேர்தலில் தமது முகமூடி கிழிந்ததால் விழி பிதுங்கி நிற்கின்றனர்.

புளொட்டினரும் தனித்துப் போட்டியிட்டு வவுனியாவில் பிரதேச சபைகளைக் கைப்பற்றியது போல பாராளுமன்றத் தேர்தலிலும் யாருடனும் கூட்டுச் சேராமல் தனித்துப் போட்டியிட்டால் 'தாம் பாராளுமன்றத்திற்குப் போய் விடலாம்' என்கிற கணக்குப் போடலில் உள்ளனர்.

ஆக, ஒட்டுமொத்தமாக தமிழ், முஸ்லீம் மக்களின் விடுதலை என்பது பாராளுமன்றத்தில் கதிரை பிடிக்கும் விடயமாகப் 'பரிமாணம்' பெற்றுள்ளது என்பது தான் உண்மை.

தமது கதிரை பிடிக்கும் விடயத்தை பூசி மறைக்க இவர்களுக்கு 'மக்கள்', 'விடுதலை', 'எமது நிலம் என்ற சொற்கள் பயன்படும். இவர்களது வேசத்தை தமிழ், முஸ்லீம் மக்கள் நம்பி விடுவார்கள் என்பது இவர்களது நினைப்பு.

ஆனால் மக்கள் தாங்கள் ஏமாளிகள் ல்ல என்பதை நிரூபிப்பார்கள்.

இது வரலாறு.

## நீதிமன்றத்தின் கும்பகர்ணத் தூக்கம்

நீதிபதிகள் மகாநாடுகளிலும், சட்டத்தரணிகள் மகாநாடுகளிலும், பத்திரிகைகளிலும் வழக்குகள் நீதிமன்றங்களில் தூங்கிக் கிடப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல! இவையெல்லாம் சாதாரண சம்பிரதாயமாக மாறிவிட்டது. ஆனால் 45 வருடங்களாகவும் ஒரு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படாமல் தூங்கிக்கிடக்கும் என்பதை நம்பமுடியுமா?

திருகோணமலை நீதிமன்றத்தில் இப்படித் தூங்கி வழியும் வழக்கு ஒன்றைப் பற்றிய செய்தி திகைக்க வைக்கிறது. எம்.ஐ.ஏ.ரசூல் என்பவர் மரணசாதனமின்றி இறந்த பின்னர் அவரது விதவை திருகோணமலை நீதிமன்றத்தில் அவரது சொத்துக்களுக்கு உரிமை கோரி 1948 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ம் திகதி தத்துவ வழக்குத் தாக்கல் செய்தார். 45 ஆண்டுகள் ஆகியும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. இது இலங்கை நீதிமன்ற வரலாற்றில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. இந்த வழக்கு இல: 304/ரீ

இதுபற்றிக் கொழும்பு சட்டத்துறை வட்டாரங்களுக்கும் செய்திகள் எட்டியுள்ளன. வழக்கு விசாரிக்கப்பட முன்னரே இதில் அடங்கும் சில சொத்துக்கள் நயவஞ்சகமாக இந்த விதவைக்குத் தெரியாமல் விற்கப்பட்டு விட்டனவாம். மொத்தம் 200 சொத்துக்களில் 145 அசையாத சொத்துக்கள். இந்த வழக்கைத் துரிதப்படுத்த விதவை முயன்றும் பணவசதி இல்லாமல் கஷ்டப் படுகிறார்.

## நாணயக்......

...மற்றும் இந்நாளைய சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஒரு கடிதக் கட்டிலிலும் கொத்மலை செலவுகள் அது தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் இன்னொரு கடிதக் கட்டாகவும் டொக்டர், ஆர்.எல்.ஸ்பிட்டில் என்பவரிடமிருந்து பழம் பெரும் பெறுமதிமிக்க கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள இன்று 'விச்சர்லி சர்வதேச பாடசாலை' இயங்கி வருகின்ற வீட்டை கொள்வனவு செய்தது தொடர்பான கடிதங்களும் உள்ளடங்கியுள்ளன எனத் தெரிய வருகிறது.

**கட்சிக்குள் வந்தாலும் நாணயக்கயிறு இன்னமும் எதிர்த்தரப்பினரிடமே உள்ளது.**

## இராணுவத்தினர்..


...விட்டதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல்களில் இந்த இராணுவ வீரர்களும் வவுனியா மாவட்டத்தின் வாக்காளர்களாக வாக்களிப்பதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாக நம்பப்படுகின்றது. தமிழர்கள் கூடுதலாக வாழ்ந்த போதிலும் இராணுவத்தால் மீட்கப்பட்டுள்ள பகுதியில் வசிக்கும் சட்டரீதியான தமிழ் வாக்காளர்களது எண்ணிக்கையை மிஞ்சியதாக சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சூழ்ச்சி இது என்று அந்த வட்டாரங்கள் விளக்கின.

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமான் - அஷ்ரஃப் திட்டம்



வடக்கு கிழக்கின் தமிழ்த் தேசியக் கோரிக்கையுடன் முஸ்லீம் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பான பல்வேறு திட்டங்கள் காலத்துக்குக் காலம் தமிழ் மிதவாத அமைப்புக்களாலும், பின்னர் வந்த இயக்கங்களாலும் முன்வைக்கப்பட்டு வந்தன. இவற்றில் பெரும்பான்மையானவை முஸ்லீம்களது பங்குபற்றுதலன்றி ஒருதலைப் பட்சமாக முன்வைக்கப்பட்டவை, என்பது ஒரு உண்மை. இப்போது இ.தொ.கா.தலைவர் தொண்டமானும், முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப்பும் சேர்ந்து ஒரு திட்டத்தை முன்வைத்திருக்கிறார்கள். இது தொடர்பாக கட்டுரையாளர் எஸ்.சுந்தரலிங்கம் தமது அபிப்பிராயங்களை முன்வைக்கிறார். வாசகர்களும் எழுதலாம்.

ஆ-ர்.

## எஸ்.சுந்தரலிங்கம்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இப்போது இ.தொ.க, முஸ்லீம் காங்கிரஸும் கூட்டாக ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளன.

இந்தத் திட்டம் தமிழ்க் குழுக்களும் முஸ்லீம் கட்சிகளும் சேர்ந்து வைத்த ஒரு திட்டமாகவே முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இப்போது அக்குழுக்களுடன் எந்த உடன்பாட்டுக்கும் வராதமையினால் இது இ.தொ.கா. - மு,கா, திட்டமாகவே கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல குறைபாடுகளைக் கொண்டிருந்த போதும் வடக்கு - கிழக்கை மையமாக வைத்து இயங்கும் முஸ்லீம் மக்களின் தலைமையாக முஸ்லீம் காங்கிரஸ் உருவாகியுள்ளது. காலம் கடந்தாவது வடக்கு - கிழக்கின் உண்மை அரசியல் நிலைமையை அது புரிந்து கொண்டுள்ளது. தமிழ் மக்களின் விடுதலையிலேயே முஸ்லீம் மக்களின் விடுதலையும் அடங்கியுள்ளது என்பதனை அது தெரிந்து வைத்துள்ளது. இதனாலேயே அண்மையில் நடைபெற்ற முஸ்லீம் காங்கிரஸின் கல்முனை மாநாட்டில் அதன் தலைவர் அஷ்ரஃப் ''தமிழ் மக்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையென்றால் முஸ்லீம் மக்களுக்கும் எதுவும் கிடைக்காது'' என்பதை அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டுள்ளார். அதோடு மட்டும் நிற்காமல் இரு இனங்களின் விடுதலையையும் வென்றெடுப்பதற்கு பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து போராட வருமாறு தமிழ் அமைப்புகளுக்கு அறைகூவல் விடுத்தார். தொடர்ந்து சில மாதங்களுக்குள் ஒன்றுபட்டு போராட வருமாறு புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு பகிரங்க கடிதம் அனுப்பினார்.

இத்திட்டத்தை தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்திற்கான ஒரு ஆரம்பம் என்ற வகையில் அனைவரும் அங்கீகரிக்க வேண்டும். இதனை அடிப்படையாக கொண்டு இரு தேசிய இனங்களினதும் சுதந்திரத்தையும் சுய நிர்ணய உரிமையையும் வளர்த்தெடுக்கும் வகையில் திட்டத்தை செழுமையுறச் செய்ய வேண்டும். இத்திட்டத்தை எவ்வாறு இன்னும் செழுமையுறச் செய்யலாம் என்பதைக் கூறுவதற்கு முன் திட்டத்திலுள்ள முக்கிய விடயங்களைப் பார்ப்போம்.

இத்திட்டத்தின்படி வடக்கு -கிழக்கு இணைந்த பிராந்திய சபையை உருவாக்க வேண்டும். அப்பிராந்திய சபைக்குள் வடக்கு -கிழக்கில் உள்ள முஸ்லீம் பிரதேச சபைகளை இணைத்து ஒரு உபபிராந்திய சபையை உருவாக்க வேண்டும். பிராந்திய சபையின் பதில் முதலமைச்சராக முஸ்லீம் ஒருவர் இருப்பதோடு பிராந்திய மந்திரி சபையிலும் இரு முஸ்லீம்கள் இருத்தல் வேண்டும். பிராந்திய சபை முஸ்லீம்களின் மதம், கலாசாரம் தொடர்பான சட்டங்களை இயற்றுதல் கூடாது. அவ்வாறு இயற்றுவதாக இருந்தால் உபபிராந்திய சபையின் அனுமதியைப் பெறுதல் வேண்டும்

தற்போதைய அம்பாறை மாவட்டம் அம்பாறை, கல்முனை என இரு மாவட்டங்களாக பிரிக்கப்பட வேண்டும். பிராந்திய மந்திரி சபையில் சிங்கள மக்களின் பிரதிநிதி ஒருவருக்கும் இடம் கொடுக்க வேண்டும்.

இத்திட்டம் இதுவரை வைக்கப்பட்ட திட்டங்களை விட முற்போக்கானதாக இருந்த போதும் இரு தேசிய இனங்களினதும், அதிகபட்ச சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, ஜனநாயகத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் பார்க்கின்ற போது போதாத தன்மையைக் கொண்டுள்ளது என்றே கருதுகின்றேன். இந்த வகையில் இத்திட்டத்தை இன்னும் செழுமையுறச் செய்வதற்கு பின்வரும் விடயங்களையும் உள்ளடக்குவது அவசியம் எனக் கருதுகின்றேன்.

1) பிராந்திய சபையில் பதில் முதலமைச்சராக மட்டுமன்றி முதலமைச்சராக இருக்கும் உரிமையும் முஸ்லீம் பிரதிநிதிக்கு வழங்குதல் வேண்டும். இதற்கு முதல் அமைச்சரின் பதவிக்காலம் ஆறுவருடமாக மாற்றப்பட்டு 3 வருடம் தமிழரும், 3 வருடம் முஸ்லீமும் முதலமைச்சராக இருப்பதற்கு ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். ஒரு இனத்தவர் முதலமைச்சராக இருக்கும் போது மற்றைய இனத்தவர் பதில் முதல் அமைச்சராக இருக்கலாம். இது போன்ற முறை சுவிஸ் அரசியல் அமைப்பிலும் உள்ளது.

2) வடக்கு - கிழக்கில் முஸ்லீம்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிராந்திய மந்திரிசபையில் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும்.

3) பிராந்திய சபையுடன் இணைந்திருக்க முடியாது என்று கருதுகின்ற பட்சத்தில் பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமை உபபிராந்திய சபைக்கு வழங்குதல் வேண்டும்.

4) உபபிராந்திய சபைக்கு உள்ளூர் விடயங்களில் முழுமையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

5) முஸ்லீம் பிராந்திய சபைக்குள் சிறிய எண்ணிக்கையில் இருக்கும் தமிழ் மக்களுக்கும், முஸ்லீம் பிராந்திய சபைக்குள் வராத பகுதிக்குள் சிறிய எண்ணிக்கையில் இருக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இரு சபைகளுக்குள்ளும் சிறிய அளவில் இருக்கும் சிங்கள மக்களுக்கும் சிறுபான்மையோர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

6) ஒரு பிரதேசத்தில் கணிசமானளவு ஒரு இனத்தைச் சேர்ந்த மக்கள் இருப்பின் அவை பிரதேச சபைகளாக மாற்றப்பட்டு பிராந்திய சபைக்குள்ளோ, உபபிராந்திய சபைக்குள்ளோ சேர்க்கப்பட வேண்டும்.

7) இரு இனங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் வரும்போது இரு இனங்களையும் சம அளவில் கொண்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆணைக் குழு மூலம் அதனைத் தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அவற்றாலும் தீர்க்கமுடியாது எனின் சர்வதேச மத்தியஸ்தைக் கொண்டு தீர்க்க முன்வர வேண்டும்.


8) சிங்கள மக்களின் பிரதேசங்கள் பிராந்திய சபைக்குள் உள்ளடக்கப்பட வேண்டுமா? என்பது அப்பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு உட்பட்ட விடயமாகும். அவர்களின் பிரதேசங்கள் அருகிலுள்ள சிங்களப் பிரதேசங்களுடன் இணைப்பதே அவர்களின் நலன்களுக்கு உகந்ததாக இருக்கும் எனினும் இது தொடர்பாக எவ்வித கட்டாயத்தையும் பிரயோகிக்க முடியாது. அவர்கள் பிராந்தியசபைக்குள் வசிக்கவிரும்பின் அவர்களுக்கான அதிகார அலகு பற்றியும் தீர்மானிக்க வேண்டும்.

### திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரும் முயற்சியில் இறங்கும் போது இருதரப்பினர் பிரச்சினைக்குரியவர்களாக இருப்பார்கள். ஒன்று அரசும், தென்னிலங்கைக் கட்சிகளும், மற்றையது புலிகள் அரசையும் தென்னிலங்கைக் கட்சிகளையும் பொறுத்தவரை பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் திட்டத்தை ஏற்கவில்லையென்றால் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் சேர்ந்து தனிநாட்டுப் போராட்டத்தை நடாத்த வேண்டியதுதான். ஏற்கனவே வடக்கில் அரசு தனது செயற்பாட்டை இழந்துள்ளது. முஸ்லீம் மக்களும் தமிழ் மக்களும் ஐக்கியப்பட்டு போராட்டத்தை நடாத்துவார்களாக இருந்தால் குறுகிய காலத்தில் கிழக்கிலும் அரசின் செயற்பாடுகளை ஸ்தம்பிதமடையச் செய்து அதிகாரத்தை கைப்பற்றலாம். இருதரப்பினரும் இணைந்து போராட்டத்தை நடாத்தும் போது சர்வதேச சமூகத்தின் அங்கீகாரமும் சுலபமாகக் கிடைக்கும்.

புலிகள் இத்திட்டத்தை ஏற்காமல் விடுவதற்கு அவர்கள் தரப்பில் காரணங்கள் இருப்பதாக தெரியவில்லை. முஸ்லீம் மக்களுடன் அதிகாரத்தை பங்கிடும் முயற்சிக்கு அவர்கள் தடையாக இருப்பார்களானால் அவர்களுடைய இனவாதம் சிங்கள இனவாதத்திற்கு குறைந்தது அல்ல என்பதை அவர்கள் ஏற்க வேண்டிவரும். இது இனவாதிகள் என்ற முத்திரையை அவர்கள் சுமக்கும் நிலையை உருவாக்கும். இம்முத்திரையை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்றே நினைக்கின்றேன். இதையும் மீறி அவர்கள் எதிர்ப்பார்களானால் அவர்கள் மீது நிர்ப்பந்தத்தை உருவாக்க வேண்டியதுதான். தமிழ் மக்கள் மூலமாகவும், சர்வதேச சமூகம் மூலமாகவும் இந் நிர்ப்பந்தத்தை உருவாக்கலாம்.

இறுதியாக இத்திட்டம் யாரால் முன்வைக்கப்பட்டாலும் இதன் வெளிப்பாடுகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. நீண்டகாலமாக புரையோடிப் போயிருக்கும் தமிழ் - முஸ்லீம் உறவை சீர் செய்யும் முயற்சிக்கு ஆரம்



பமாக இருப்பவை. இதனாலேயே இவை மிக கவனத்தில் கொள்ள வேண்டியவையாக உள்ளன. முஸ்லீம் - தமிழ் ஐக்கியத்திலேயே தேசியப் போராட்டத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. தமிழ் மக்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் முஸ்லீம் மக்களுக்கும் ஒன்றும் கிடைக்காது என்ற உண்மையை அஷ்ரஃப் கூறினார். ஆனால் அதிலும் மேலான ஒரு உண்மையும் உள்ளது. ''தமிழ் - முஸ்லீம் ஐக்கியம் இல்லையென்றால் இரு தரப்புக்கும் எதுவும் கிடையாது'' என்ற உண்மையை இரு தேசிய இனங்களும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

# கிழக்கில் தூர்ந்துபோகும் நீர்ப்பாசனமும் அருகிப்போகும் விவசாயமும்

இலங்கையின் தானியக் களஞ்சியமாக விளங்கிய கிழக்கு, இன்று வெறும் சுடுகாடாய் தூர்ந்து போய்க்கிடக்கின்றது. அனேகமாக வயல் வெளிகள் வெறும் வெளிகளாய் காட்சியளிக்கின்றன.

அதையும் மீறி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபடுவோர் சொல்லொணாத் துயரங்களில் வாட வேண்டியுள்ளது. வயல்களில் வேலை செய்து கொண்டிருக்கும் போதே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள். இரவுகளில் வயல்களில் தங்கியிருக்க முடியாது. அப்படி யாராவது தங்க நேரிட்டால் அவர்கள் புலிகள் எனப் பிடித்துச் செல்லப்படுவார்கள். இரவு நேரங்களில் காவல் காக்காவிட்டால் காட்டு யானைகள் திடீரெனப் புகுந்து எல்லாவற்றையும் துவம்சம் செய்து விடுகின்றன.

ஒழுங்காக யூரியாக் கிடைப்பதில்லை. அரசாங்க அதிபரிலிருந்து ஆமிக்காரர் வரை நாயாய் அலைந்து திரிய வேணும். அதுவும் இராணுவமுகாம் இருக்கும் இடங்களில் மூன்று மைல்கள் சுற்றுவட்டாரத்துக்கே யூரியா வழங்கப்படுகிறது.

எல்லாம் முடிய உற்பத்தி செய்யப்படும் நெல் படாதபாடுபடுகிறது. புலிகளுக்கு கப்பமாக ஒரு குறிப்பிட்ட வீதம் நெல்லோ அல்லது பணமோ கொடுக்க வேணும். இல்லையேல் வயலிருந்து நகர முடியாது. கொண்டு வரும் நெல்லை வீடுகளில் வைத்திருக்க பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனாவிடம் அனுமதி பெற வேண்டும் கூடுதலாகவும் வைத்திருக்க முடியாது. விளைச்சல் கூடுதலாக இருந்தால் குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட நெல் புலிகளினுடையதா எனக் கேட்கிறார்கள்.

பன்னெடுங்காலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களுக்கு பாசனம் வழங்கிய உள்ளிச்சை, நவகிரி, புளுகுநரிக்குளம், புனானை, வாகனேரி போன்ற பெரிய குளங்களும் பல சிறிய குளங்களும் அழிந்து போகின்ற ஒரு நிலைமை தோன்றியுள்ளது.

இந் நீர்ப்பாசனக் குளங்களை புனரமைத்து உரிய முறையில் செப்பனிடக் கூடிய வகையில் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இக்குளக்கட்டுகள் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் உடைந்து சிதைந்த அதே நிலைமையில் தான் இன்னமும் இருக்கின்றன. காலப் போக்கில் இக்குளங்கள் அழிந்து சிதைந்து இல்லாமல் போக இந்த அரசு வழி செய்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

அதையும் விட இக்குளங்களின் வெடிப்புக்களில் வெள்ளப்பெருக்கின் போது வெளியேறிய நீரை விட இப்போது அதிகமான நீர் அயலிலுள்ள இராணுவ முகாம்களின் தேவைகளுக்காக எந்நேரமும் திறந்து விடப்பட்டு வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு நீர் வீண்விரயமாவதால் இவ்வருடத்தின் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களுக்கு நீர் வழங்க முடியாமல் போகவுள்ளது.

தமிழர்களுக்கு சொந்தமான பலநூறு ஏக்கர் வயல் அறுவடைக்காக காத்திருந்த போது படுவான்கரையில் ரெலோ, ஆமியால் எரித்து நாசமாக்கப்பட்டது. அதேபோல் இலுப்படிச் சேனை, கரடியாறு போன்ற இடங்களிலுள்ள முஸ்லீம்களின் வயல்களுக்கு புலிகளுக்கு பயந்து போக முடியாமலுள்ளது.

ஒருகாலத்தில் விவசாயத்தில் தன்னிறைவு பெற்று விளங்கிய கிழக்கின் வயல்கள் இன்று காய்ந்து வெறுமை பிடித்துப் போய்க் கிடக்கிறது. பொட்டியானும் பனையாள் மீனும் துள்ளி எழும்பி நீர்ததும்பிய குளங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன.

துப்பாக்கி ஏந்திய அடக்குமுறையாளர்களின் கொடூரங்கள் மனிதர்களை மட்டுமா? விளைநிலங்களையும் அல்லவா விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

-இராசையா

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
4, ஜெயரட்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 5
தொலைபேசி 584380

# தேசிய வாதத்தின் எல்லைகள் -1

இலங்கையில், பொஸ்னியாவில், சேர்பியாவில் மட்டுமல்லாது உலகப் பரப்பின் பல்வேறு இடங்களிலும் தேசியவாதத்தின் எழுச்சி தீவிரமாக உள்ளது என்பது இன்று விவாதத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நிலையாகும். இந்தத் தேசியவாத எழுச்சி அல்லது சமூகவியல் அறிஞர் ஒருவர் குறிப்பிடுவது போல ''இனத்துவத்தின் மீள் வருகை'' என்பது பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்த நாடுகள், பின்தங்கிய நாடுகள் என்ற வேறுபாடுகளற்று எல்லாவகையான நாடுகளிலும் மேலெழுந்துள்ளது. வளம் பெற்ற நாடான கனடாவின் பிரஞ்சு மொழி மேலாதிக்கம் பெற்ற ''கெபெக்'' மாநிலம் பிரிவினையை முன் வைக்கிறது. ''தனித்துவமான மக்கள்'' வேறுபட்ட தேசியம் என்பதன் அடிப்படையிலேயே இந்தத் தேசியவாத எழுச்சிகளும் மீள் எழுச்சிகளும் மேலோங்குகின்றன.

சோவியத் யூனியனின் உடைவுக்குப் பிற்பாடு கிழக்கு ஐரோப்பா எங்கணும் இனத்துவ அரசுகள் மேலோங்கிகளாக எழுந்துள்ளன. இனத்துவமும் அதிலிருந்து ஊற்றெடுக்கும் தேசியவாதமுமே ஆட்சி பெற்ற அரசியல் கருத்து நிலையாகத் தீர்மானம் பெற்றுள்ளது என்னும் நடைமுறை யதார்த்தத்திலிருந்து விலகி ஓடுவது இப்போது எவருக்கும் சாத்தியமில்லை.

எனினும் இந்த நிகழ்காலப் போக்கை அடியொற்றி எல்லாவகையான பிரச்சினைகளுக்கும் இனத்துவத் தீர்வை அல்லது தேசிய்வாதம் முன் மொழியும் தீர்வுகளைக் கண் மூடித்தனமாகப் பின்பற்றுவதிலும் ஏற்றுக் கொள்வதிலும் மனிதகுலத்துக்கு நிறைந்த தயக்கம் இருக்க வேண்டும் என்ற ஒரு எச்சரிப்புக் குரலை நாம் எழுப்ப விரும்புகிறோம். இத்தகைய எச்சரிப்புக் குரலை - ஏன், எதிர்ப்புக்குரல் என்று கூடச் சொல்லலாம்- நாம் எழுப்புவதற்கு முக்கியமான காரணங்கள் பல உள்ளன.

முதலாவதாக, இனத்துவ மற்றும் தேசியவாத எழுச்சிகளின் ஊடாகப் புதிய தேசங்கள் உருவாகிற அதே நேரம் ஏற்கனவே இருக்கும் தேசிய அரசுகள் பல தமது நல்லிணக்கப் பேணக் கூட்டமைப்புகள், பிரதேசக் கூட்டாட்சிகள் போன்ற தேசியத்துக்கு அப்பாலான அரசியல், சமூக உருவாக்கங்களை நாடிச் செல்கின்றன. உதாரணமாக ஐரோப்பிய ஒன்றியம் (EEC) ஆசியான் (ASEAN) வட அமெரிக்கக் கட்டற்ற வியாபார ஒன்றிணைப்பு (NAFTA) போன்றவை வளம் பெற்ற மேலைநாடுகள் தமக்கிடையே தேசிய எல்லைகளின் நீக்கத்தை நடைமுறைப்படுத்துகிற அதே நேரம், அபிவிருத்தியடையாத கொலனித்துவத்துக்குப் பின்னான நாடுகளில் இத்தகைய தேசிய எழுச்சிகளையும் மீள் - எழுச்சிகளையும் தமது நலன் கருதி ஊக்குவிக்கின்றன, என்பதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும்.


இரண்டாவதாக, தேசியவாதம் என்பது பலரும் நினைப்பது போல ஒரு சர்வரோக நிவாரணியும் அல்ல. எந்தத் தேசியவாதத்திற்கும் அது மேலெழுந்த/ மேலெழுகிற சமூக, அரசியல் வரலாற்றுச் சூழலை ஒட்டித் தனித்தன்மையான குணாம்சங்கள் இருக்க நேரிடுகின்றன. இந்தக் குணாம்சங்களின் அடிப்படையில் தான் எந்தவொரு தேசியவாதத்தினதும் போக்கு வடிவமைக்கப்படுகிறது. விரல் விட்டெண்ணக் கூடிய சில சந்தர்ப்பங்களில் மட்டுமே தேசியவாதம் மானுடவிடுதலை என்ற உயர்ந்த அர்த்தத்தில் தேசிய விடுதலையாகப் பரிணாமம் பெற முடிந்திருக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேசியவாதம் ஆக்கிரமிப்பாகவும், நாஸிஸமாகவும் பாசிஸமாகவும் சீரழிந்துள்ளது.

தேசியவாதத்தின் பொதுவானதும் குறிப்பானதுமான வரலாற்றுப் பாடங்கள் சுட்டுவது என்னவென்றால் தேசியவாதம் மற்றவர்களை அல்லது ''வெளியார்கள்'' என்று தான் உருவகிப்பவர்களை விரட்டுகிறது அல்லது கொல்கிறது; யார் இந்த ''வெளியார்கள்'' என்பது காலத்துக்கும், அரசியல், சமூக வரலாற்றுத் தேவைகளுக்கேற்பவும் உருவகித்துக் கொள்ளப்படுவது வழக்கம் சிங்கள-பௌத்த தேசியவாதத்திற்கு தமிழர்கள், முஸ்லீம்கள், மலையாளிகள் அனைவரும் 'வெளியார்'. இந்துத் தேசியவாதிகளுக்கு முஸ்லீம்கள் வெளியார்; ஈழத் தமிழ்த் தேசியவாதத்திற்கு (இப்போதைக்கு) முஸ்லீம்கள் வெளியார். ஹிற்லருடைய ஆரிய- ஜேர்மன் தேசியவாதத்துக்கு நீலக் கண்களும் ஆரியர்களுமல்லாத மற்றைய அனைவருமே வெளியார்கள்.

இத்தகைய வெளியார் என்ற உருவகிப்பும் வெளியார் நீக்கமும் தேசிய வாதங்களுக்கு அடிப்படையிலேயே ஒரு ஜனநாயக மற்ற இயல்பைத் தருகின்றன.
இன்னொரு தளத்தில், தன்னுடைய இருப்பையும் உன்னதத்தையும் வலியுறுத்த எல்லாத் தேசிய வாதங்களும் கடந்து போன ''பொற்காலங்களுக்கும்'' வரலாற்று, இலக்கிய, கலாசார மேன்மைகளிலிருந்து தமக்குத் தேவையான தமது இன்றைய அரசியலுக்குச் சாதகமான விவரங்களையும் அம்சங்களையும் மட்டுமே பொறுக்கி எடுத்துத் தமது அடையாளத்தை நிறுவுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய தேசியவாதங்கள் ஒரு மேலாதிக்கத்துக்கு எதிராக இன்னொரு மேலாதிக்கத்தையே முன் வைக்கின்றன. உதாரணமாக சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் மேலாதிக்கத்தை எதிர்க்கிற தமிழர்களின் தேசியவாதப் போராட்டம் சோழர் காலத்தையும் சோழச் சிந்தனைகளையுமே இப்போது வலியுறுத்துகிறது. சோழர்கள் எவ்வளவு தூரம் மேலாதிக்க வாதிகளாகவும் நெறிமுறையற்ற அரசியல் நிகழ்த்தியோர் என்பதையும் இந்தத் தேசியவாதம் ஒன்றில் கணக்கிலெடுக்காது: அல்லது நியாயப்படுத்திவிடும். இதுபோலவே சேர்பியர்களின் ''அகண்ட சேர்பியா'' பூமி என்கிற கனவும், இஸ்ரேலின் வாக்களிக்கப்பட்ட பூமி என்கிற விஸ்தரிப்பும். இவை ஒரு சில உதாரணங்கள்தான் எனினும், எல்லாத் தேசிய வாதங்களிலிருந்தும் இத்தகைய போக்குகளுக்கு உதாரணம் காட்ட முடியும்.

தேசியவாதங்களின் முக்கியமான இன்னொரு எல்லைப்பாடு, அது பன்மைத்தன்மையை ஒருபோதுமே ஊக்குவிப்பதில்லை என்பதாகும். உதாரணமாக மதத்தால் இஸ்லாமியராக இருக்கும் ஒருவர் இன்றைய தமிழ்த் தேசிய வாதத்துள் அடங்கமாட்டார்; அனுமதிக்கப்படவும் மாட்டார். இதுபோலவே போர்த்துக்கீசர் காலத்தில் சங்கிலியனது எதிர்ப்புப் போராட்டத்தின் போது கத்தோலிக்கர்களாக மதம் மாறிய 500 தமிழர்களை மன்னாரில் சங்கிலியன் வெட்டிக் கொன்ற போது அந்த நேரத்து எதிர்ப்புத் தேசியவாதம் 'தமிழ் சைவ' மாகவே இருந்தது. கத்தோலிக்கர்களுக்கு அந்தத் தேசிய வரையறையுள் இடமிருக்கவில்லை. காலத்துக்குக் காலம் இத்தகைய தேசிய வாதங்கள் தமது ''தேசிய மூலகங்களை'' மீள வரையறை செய்கின்றன; சில புதிதாய்ச் சேரும் பல அழியும். எனவே ''மாறற்ற ஒரே மூலகங்கொண்ட தேசியம் ஒன்று'' என்னும் அடியிலிருந்து தேசியவாதங்களுக்கு நியாயம் கற்பிக்க முடியாது.

இன்னொரு வழியில் சொல்வதானால், எந்தத் தேசிய அடையாளமும் ஒரேமாதிரியானதாக- மாறற்ற ஒன்றாக இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. 'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்களுக்கோர் குணமுண்டு'' என்று சும்மா பாடிவிட்டுப் போனாலும் இந்தக் ''குணம்''காலங் காலமாக மாறியே வந்துள்ளது.




# சத்தியமாக நானில்லை

கடந்த மே19 - யூன் 01 சரிநிகர் இதழில் 6ம் பக்கத்தில் வெளியான 'கல்லடி ஐஸ்கட்டித் தொழிற்சாலையைத் திறப்பார் இல்லை' என்ற உப தலைப்பில் வெளியான செய்தியைப் பற்றிய சரியான விளக்கத்தை இங்கே தருகின்றேன்.

கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் கீழ் மட்டக்களப்பில் மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் அலுவலகம் (கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்டப் பிரிவு) கடற்றொழில் கூட்டுத்தாபனம், கடற்றொழில் பயிற்சி நிலையம் ஆகிய மூன்று பிரிவுகள் செயற்படுகின்றன. கல்லடியில் அமைந்துள்ள ஐஸ்கட்டி உற்பத்தி தொழிற்சாலை, மீனைப் பாதுகாத்து வைக்கும் குளிரூட்டி அறைகள் கொண்ட தொகுதி, கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வருகின்றது. இது கடற்றொழில் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படவில்லை என்பதை தங்களுக்கு அறியத் தருகிறேன்.

எமது கடற்றொழில் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் வராத மேற்படி ஐஸ் கட்டித் தொழிற்சாலை பற்றி கட்டுரையாளரிடம் மேற்படி விடயம் சம்பந்தமாக எச்சந்தர்ப்பத்திலும் நான் கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

**எஸ்.ரி.ஜோர்ஜ்**
**மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல்**
**உத்தியோகத்தர், மட்டக்களப்பு.**

# வாக்குகளைக் கொள்ளையடிக்க வந்தவர்களல்ல நாம்!

## புவிநாத்திற்கு பு.ஜ.கட்சி பதில்

**(சரிநிகர் இதழ் 47இல் புவிநாத் என்பவர் எழுதிய கடிதத்திற்கு புதிய ஜனநாயகக் கட்சி நீண்ட பதிலொன்றை அனுப்பியிருந்தது. அதிலிருந்து மிகமுக்கியமான பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.)**

'சரிநிகர் இதழ் 47இல் 14ம் பக்கத்தில் நேர்மை துணிவுண்டோ என்ற தலைப்பில் 'புவிநாத்' என்ற பெயரில் எழுதப்பட்ட கடிதத்தில், புதிய ஜனநாயக கட்சியைப் பற்றியும் அதன் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா பற்றியும் குறிப்பிட்டுள்ள பொய்யான தகவல்களைப் பற்றியும், பொறுப்பற்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் பற்றியும் மட்டுமே இங்கு பதிலளிக்கப்படுகின்றது.

மலையக மக்கள் முன்னணி அமைக்கப்பட முன்னர் 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் சந்திரசேகரம் போட்டியிட்டார். அவரது குழுவை ஆதரித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது) வேலை செய்ய வேண்டும் என அவரின் பிரதிநிதிகள் கட்சி தலைமையிடம் வேண்டுகோள் விடுத்தனர். அந்த வேண்டுகோளை அடுத்து மலையகத்தில் இ.தொ.கா விற்கு மாறான அரசியலை ஊக்குவிப்பது என்ற அடிப்படையில் சந்திரசேகரன் தலைமையிலான குழுவை ஆதரித்து அந்தப் பொதுத்தேர்தலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது)யின் மலைய்க கமிட்டி தோழர்கள் வேலை செய்தனர்.

இ.தொ.காவுக்கு மாறான அரசியற் போக்கை ஊக்குவித்து முன்னெடுப்பதன் அடிப்படையிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யின் மலையக கமிட்டி சந்திரசேசரனை ஆதரித்ததேயன்றி, சந்திரசேகரன் அரசியலையோ, தலைமையையோ ஏற்றுக் கொண்டல்ல என்பது தெளிவுற வேண்டும். அக்காலக்கட்டத்தில் கட்சியின் மலையக கமிட்டியின் செயலாளராகவிருந்த தோழர் இ.தம்பையா, மலையகத்தில் மட்டுமன்றி மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் வாழும் மலையக மக்கள் மத்தியிலும் வேலைகளை முன்னெடுத்தார். இதைத்தவிர மலையக மக்கள் முன்னணி அமைக்கப்பட்ட பின்னர் அவ்வமைப்பு கலந்து கொண்ட எந்தவொரு தேர்தலிலும் அவர்களை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) (புதிய -ஜனநாயக கட்சி) ஆதரித்து வேலை செய்யவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

எனவே, தோழர் தம்பையா மலையக மக்கள் முன்னணியுடன் சேர்ந்திருக்கவும் இல்லை. அவர் தனிப்பட சந்திரசேகரனை ஆதரிக்கவுமில்லை.

பின்னர் கடந்த மாகாணசபை தேர்தலின் போதும் மலையக அமைப்புகள் யாவும் ஒரு பொது வேல்லத்திட்டத்தின் அடிப்படையிலேயே ஐக்கியப்பட வேண்டுழ் என்பதை புதிய - ஜனநாயக கட்சி வலியுறுத்தியது (தேர்தலுக்காக மட்டுமன்றி நீண்டகால நோக்கில் மலையக அமைப்புகள் பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டுமென நீண்டகாலமாக கோரிவருகின்றது) அதுபற்றி மலையக அமைப்புகளுடன் புதிய - ஜனநாயக கட்சி பேச்சு வார்த்தைகளையும் நடத்தியது.

ஆனால் மலையகத்தில் ஒரு அமைப்புக்கூட பொதுவேலைத்திட்டத்தின் அடிப்படையில் வேலை செய்யவோ, மாகாணசபையில் போட்டியிடவோ முன்வரவில்லை.

மலையக மக்கள் முன்னணியை சேர்ந்த ஏ.லோரன்ஸ், சரத் அத்துக்கோரல ஆகியோர் எவ்வித பொதுவேலைத் திட்டமுமின்றி சட்டத்தரணி இ.தம்பையாவை அவர்களது சுயேட்சை பட்டியலில் கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடக் கோரினர்.

பொது வேலைத்திட்டம் இல்லாதபடியாலும் கட்சிக்கும் முன்னணிக்குமிடையேயான உறவு சரியாக அணுகப்படாதபடியாலும் புதிய ஜனநாயக கட்சியின் முடிவின்படி தோழர் தம்பையா அக்கோரிக்கையை நிராகரித்தார்.

அதேவேளை பொதுவேலைத்திட்டத்தின் அடிப்படையில் மலையக அமைப்புகள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட புதிய - ஜனநாயக கட்சி முன்வந்தது. (புதிய - ஜனநாயக கட்சி ஏன் மாகாணசபையில் போட்டியிடுகின்றது? என்ற பிரசுரத்தை பார்க்க.) தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு ஒரு நாளுக்கு முன்னதாகவும் சட்டத்தரணி தம்பையாவை அவர்களது பட்டியலில் இணைந்து போட்டியிடும்படி மலையக மக்கள் முன்னணியில் சிலர் கோரினர். அப்போதும் அவர்களிடம் பொதுவேலைத்திட்டம் எதுவும் இருக்கவில்லை என்பதுடன் புதிய - ஜனநாய்க கட்சி தனித்து போட்டியிட இறுதி ஏற்பாடுகள் நடந்தேறி இருந்தன. நியமனப்பத்திரத்தை மலையக மக்கள் முன்னணிக்கு முன்பதாகவே புதிய - ஜனநாயக கட்சி தாக்கல் செய்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட இடம் கொடுக்காத நிலையில் அதில் இருந்து பிரிந்து விட்டார் என்று எழுதியிருப்பது உண்மைக்கு மாறானது.

புதிய - ஜனநாயக கட்சி இராகலையில் மேதினக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததின் மூலம் அது தேர்தலுக்கு தயாராவதாக குற்றம் சாட்டியிருந்தார் புவிநாத். புதிய ஜனநாயக கட்சிக்கு எவ்வாறு அரசியல் புதியதல்லவோ அதே போல் மே தினமும் அதற்கு புதிதல்ல. மலையக மக்கள் முன்னணி தோன்றுவதற்கு முன்பே புதிய - ஜனநாயக கட்சி (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது) பல புரட்சிகர மே தினங்களை வருடா வருடம் மலையகத்திலும் வடக்கிலும், கொழும்பிலும் நடத்தி வந்திருக்கின்றது. அந்தக் கூட்டங்கள் யாவும் நடந்து முடிந்த தேர்தலுக்கு எவ்வாறு தயாரிப்பாக அமையாது தொழிலாள வர்க்க எழுச்சியை வேண்டி நின்றதோ அதே போன்றே இராகலை மேதினக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (இராகலை மே தினக் கூட்ட கோரிக்கைகளை படிக்கவும்).

அடுத்ததாக புதிய - ஜனநாயக கட்சிகு மக்கள் நலன் சார்ந்த ஒரு நீண்டகால வரலாறு இருப்பதை அறியாமல் அல்லது அறிந்தும் அறியாதது போல் 'இவை எல்லாம் மக்களை ஏமாற்றும் கூட்டம் தான்' என்று ஆதாரமற்ற ஒரு கண்டுபிடிப்பை முன் வைத்துள்ளார் 'புவிநாத்'.'

புதிய - ஜனநாயக கட்சியின் அரசியல் பாதை மக்களை ஏமாற்றும் மலர் படுக்கை மீதான பயணமாக இருக்கவில்லை. மலையகத்தில் மட்டுமன்றி முழுநாட்டு அரசியல் நடவடிக்கையிலும் இக்கட்டான அரசியல் சூழ்நிலைகளில் கூட நேர்மையாக அது செயற்பட்டுள்ளது. இதற்கு அதன் அரசியல் நடவடிக்கைகள் சான்று.

**ந.சின்னத்துரை**
**தகவற்பிரிவு**
**புதிய ஜனநாயகக் கட்சி**

நன்றி - நூலகத்திட்டம்



## சரிநிகர் செய்தியால் ஆத்திரம்!

## உண்மையை மறைக்க பழிவாங்கல்!

கூட்டுறவு திருத்தச் சட்டம் 72-1992 இல் கூட்டுறவு அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட சுற்று நிருபப்படி ஒரு அரசியல் அமைப்பாளர், அரசியல்வாதி, கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாது.

மட்/ப.நோ.கூ.சங்கத்திற்கு மட்டும் இந்தச் சட்டம் செல்லுபடி ஆகாது என்று தற்போதைய தலைவர் மை.பத்மநாதன் கூறிக் கொள்கிறார் போலிருக்கிறது. இவர் ஐ.தே.க சார்பாக மட்டக்களப்பு உள்ளூராட்சி தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிட்டு 01.03.94 இல் மாநகரசபை உறுப்பினராக அங்கம் வகித்துள்ளார். இதே நேரத்தில் மட்/ப.நோ.கூ சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். இன்று வரையும் சங்கத்தில் தலைமை வகிக்கிறார். இரண்டு சபையிலும் தான் ஆட்சி செலுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுகிறார். அரசினால் வழங்கப்பட்ட ஆயுதம் தாங்கிய இரு மெய்க்காப்பாளருடனும் அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்.

அண்மையில் கூட்டுறவு சங்க பணியாளரை சந்திக்கக் கூடிய கூட்டத்தில் கீழ் குறிப்பிடும் சில ஆணவமான பேச்சுக்களை உணர்ச்சி வசத்துடன் பேசிக் கொண்டார். அவை "நான் ஐ.தே.க அமைப்பாளர். எனது கையில் பாதுகாப்பு படையினர், இராணுவம் அமைச்சர்கள். கூட்டுறவு அமைச்சர் கூட என்கை ஆள். இந்த கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரையும் அமர்த்தி பதவி வழங்கியது எனது அமைச்சர் தான். நான் நினைத்தால் அவரைக் கூட தூக்கி எறிந்து விடுவேன். இங்கிருக்கும் சிலர் சரிநிகர் பத்திரிகைக்கு தகவல் கொடுக்கும் சூத்திரதாரிகளாக இருக்கின்றனர். இவர்களை இரகசிய பொலிஸாரைக் கொண்டு விசாரித்து கூண்டுக்குள் தள்ளவும் என்னால் முடியும். இந்த பத்திரிகையை 10 லட்சம் ருபாவிற்கு மானநஷ்டம் கோரி நீதி மன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்துள்ளேன்" என்று14.05.94 அன்று மு.ப.9.00மணிக்கும் 11.00மணிக்கும் இடையில் நடை பெற்ற பணியாளர் சந்திப்பில் ஆணவமாகப் பேசிக் கொண்டார்.

இப்படியான வார்த்தைகளை இந்த மாவட்டத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ ஏன் இந்நாட்டின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களோ பேசியதாக என்னால் குறிப்பிட முடியாது.

இப்படியான ஒரு ஐ.தே.க அமைப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராகவோ ஒரு உறுப்பினராகவோ சபையில் அங்கம் வகிக்க முடியாது என்பதை மேற்படி குறிப்பிட்ட கூட்டுறவு திருத்தச் சட்டம் கூறுகிறது. ஐ.தே.க அரசினால் 1992ம் ஆண்டு நாட்டின் பல கூட்டுறவு அமைப்பிற்கும் அனுப்பி வைக்கப்பட்ட இச் சுற்று நிருபம் மூலம் (இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) இந்த அரசியல்வாதிக்கும் அவரது ஆணவமான பேச்சுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வைக்க முடியுமா?

வே.குறிஞ்சித்தம்பி
மட்டக்களப்பு

## ஐ.தே.க அமைப்பாளரின் ஆணவம்

தங்களது 18/05/94 பத்திரிகையில் வெளியான "உண்மையைச் சொல்லி என்னைக் காப்பாற்றுங்கள்" என்ற தலைப்பில் வெளிவந்த செய்திக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி செய்தி வெளிவரு முன்பே தலைவர் மை.பத்மநாதன் என்னை பழிவாங்கும் நோக்குடன் 14/05/94 அன்று நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்ய சில நொண்டிச் சாட்டுக்களை வைத்து குற்றம் சுமத்தி, தனது திட்டத்தை நிறைவேற்ற தன்னால் இயன்ற முயற்சிகளை எடுத்தார். ஆனால் நீதி நியாயமும், மனிதாபிமானமும் படைத்த ஏனைய இயக்குனர்களும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தரும் பொது முகாமையாளரும், இந்த நடவடிக்கைக்கு இடமளியாது இவருடைய திட்டத்திற்கு எதிராக நின்று, இடைநிறுத்தத்திலிருந்து என்னை காப்பாற்றினர். இருந்தும், தான் தலைவர் என்ற அதிகாரத்தை வைத்து என்னை கொள்வனவுக்கு அனுப்பக்கூடாதென்றும், சில விசாரணைகள் செய்ய வேண்டுமென்றும் தடுத்து வைத்துள்ளார்.

தனக்கு வேண்டிய சில உத்தியோகஸ்தர்களை தன்னுடன் கொள்வனவுக்காக கொழும்பு கொண்டு செல்ல முயன்றும் சபையினர் ஏற்றுக்கொள்ளாததினால், பொது முகாமையாளருடன் 17.05.94ல் கொழும்பு சென்று கொள்வனவு செய்து திரும்பியுள்ளார்.

இந்நடவடிக்கை தனிப்பட்ட தலைவருடைய பழிவாங்கல் என்பதை அறியத் தருவதுடன், ஏனைய சபையினருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர் செய்த கொள்வனவு சம்பந்தமாக தங்களால் பிரசுரமான செய்தியின் பின்னணியில் எனக்கு இழைக்கப்படும் அநீதிகளை தொடர்ந்தும் தங்களது வெளியீடுகளில் பிரசுரிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ்.அருளானந்தம்
(வர்த்தக முகாமையாளர்)
மட்/ப. நா.கூ.சங்கம்

## சூர்ய துவம்சம்

'சூர்யாவின் கடிதம் தொடர்பாகச் சில வரிகள் எழுத விரும்புகின்றேன்.

1) சரிநிகருக்கு எழுதும் போது கோபப்பட்டேனோ என நினைவில்லை. நிச்சயமாகப் பரவசப்பட்டு எழுதவில்லை. ஒரு பத்திரிகைக்கு ஒரு வாசகர் கடிதம் எழுதும் போது அதைப் பிரசுரிக்கும் முறை பற்றிய சில நல்ல மரபுகள் உள்ளன. ஒரு கடிதம் ஆசிரியருக்கு எழுதப்படும் போது அது ஒரு எழுத்தாளரின் பத்திக்குள் போவது (அப்பத்தி, ஆசிரியர் தனது புனைபேர் ஒன்றில் எழுதும் ஒன்றாகவோ, சொந்தப்பேரில் எழுதுவதாகவோ, அல்லது ஆசிரியரது நம்பிக்கைக்குரிய அவரது பத்தியாகவோ இருப்பினும்) அம் மரபுகளை மீறுகிறது. இங்கே உள்நோக்கமல்ல பிரச்சினை. பத்திரிகை நடத்தை நெறியே பிரச்சினை. வாசகர் கடிதம் பற்றிய தனது கருத்துக்களையும் பத்திக்காரர் பத்திக்குள் எழுதும் போது இந்தப் பிரச்சினை மேலும் மோசமாகிறது.

2) பத்திரிகையில் ஒழுங்காகப் பத்தியில் எழுதும் ஒருவர் அதே பத்திரிகை மூலம் ஒரு வாசகருக்குப் பகிரங்கக் கடிதம் எழுதுவது அவ்வளவு பண்பட்ட செயல் அல்ல. அவைகளிற் போன்று நடுவராக உள்ளவரை (ஆசிரியரை) விளித்துக் கருத்துரைப்பது அவசியமற்ற தனிப்பட்ட மோதல்களைத் தவிர்க்க உதவும்.

3) பிழையை மறைமுகமாகச் சுட்டிக் காட்டியே கடிதத்தை எழுதினேன். சூர்யா கடிதத்தைப் பத்திக்குள் எடுத்தாண்டிராவிடின் அதுபற்றி மீண்டும்' எழுதும் தேவை ஏற்பட்டிராது. கணேஷின் மாஓ சேதுங் கவிதை மொழிபெயர்ப்பு நூல் பற்றிய குறிப்பின் தவற்றைச் சாடையாகச் சுட்டிக்காட்டவே அவர் மொழி பெயர்த்து நூலாக வந்தவை எவை என்ற தகவலுடன் நிறுத்தி விட்டேன். இதை முதலிலேயே சூர்யா புரிந்து கொண்டிருப்பார் என எதிர்பார்த்தேன். இன்னமும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

4) 1970களுக்குள்ளும் முன்பும் நடந்தவை பற்றிய நாட்டமில்லாத புதிய பரம்பரை உள்ளதாலேயே பத்தி எழுத்தாளர்களும் விமர்சகர்களும் தகவல்கள் பற்றிய கவனம் எடுப்பது அவசியமென எழுதினேன். தெரிவிக்கப்பட்ட ஆட்சேபம் அவர்கள் அவ்வாறு இருப்பது பற்றியதல்ல. அவர்கள் அவ்வாறு இருக்கிற சூழலில் தகவல்கள் பற்றிக் கூடிய கவனம் காட்டப்படாமை பற்றியது. சிறிது முயற்சியுடன் தகவல்களைச் செம்மையாகத் தரமுடியும். தெரியாததைத் தெரியாது என்று சொல்வது பாராட்டுக்குரியது. என்முறைப்பாடு அது பற்றியதல்ல.

5) பாலஸ்தீனக் கவிதைபற்றி நான் குறிப்பிட்டதை இன்னமும் சூர்யா புரிந்து கொள்ள முடியாதிருப்பது ஏமாற்றமளிக்கிறது. பாலஸ்தீனக் கவிதைகளின் கவித்துவம் அதன் பாதிப்புக்குட்பட்டதாகக் கூறப்படும் அன்றைய படைப்புகளின் போதியளவுக்குத் தன் தாக்கத்தை வெளிப்படுத்தவில்லை என்பதே என் கருத்து. அந்தக் கவிதைகள் பற்றி நான் எங்கே குறை கூறினேன்? என் வாக்கியத்தை மிகவும் சிரமப்பட்டு இவ்வாறு புரிந்து கொண்டிருக்கிறார். என்ன செய்வது!

6) ஜெயபாலனை 'உலகம் சுற்றும் வாலிபர்', அவரும் மனைவியும் மகனும் வெவ்வேறிடங்களில் இருப்பது எவ்வாறு சாத்தியம் என்றெல்லாம் நிந்தித்து எழுதியதைக் கண்டித்து நானும் ஜெயபாலனும் எழுதினோம். ஒல்லாந்திற், சென்ற வருடம் நடந்த இலக்கியச் சந்திப்பில், சூர்யாவின் குறிப்புகள் ஏகோபித்த கண்டனத்துக்கு உள்ளாயினது பற்றி அவர் அறியாதிருக்கலாம். தவறு சுட்டிக்காட்டப்பட்ட பின்பும் அதுபற்றி வருத்தம் தெரிவிப்பதற்கு மாறாக தான் தனிப்பட்ட முறையில் தாக்கி இன்னொரு பரிமாணத்தில் எழுதியதை நியாயப்படுத்த முற்படுகிறார். மஞ்சள் பத்திரிகைகளும் 'வேறு பரிமாணங்களில்' எழுதுவது உண்மை. விழல் அரட்டை எழுத்தாளர்களும் அவ்வாறே செய்கிறார்கள். சரிநிகரில் அதிலும் வித்தியாசமாக எதிர்பார்ப்பதிற் தவறில்லை என்றே நம்புகின்றேன்.

7) விமர்சிக்கப்பட வேண்டியது சிவரமணியின் சூழல் என்றே எழுதினேன். ஒரு மனிதரைப் பொறுத்தளவில் சூழல் எனப்படுவது முற்றிலுமே புறமானதே. இதில் அகச் சூழல் ஏது? புறச் சூழல் ஏது? இதை என்றால் என்னால் புரிந்து கொள்வது கடினமாகவே உள்ளது.

சி.சிவசேகரம்
லண்டன்

## மானைப்பிடித்து புலியிடம் கொடுத்த கதையா?

தமிழினத்தின் விடுதலைக்காகவென தொடங்கப்பட்ட விடுதலைப் போராட்டம் இன்று மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. இப்போராட்டம் மக்களினின்றும் விலகி இலக்கற்றுச் செல்லக்கூடிய மிகப்பெரிய அபாயகரமான நிலையையும் தோற்றுவிக்குமாப் போலுள்ளது. மொத்த சிறுபான்மை இனங்களுக்கான விடுதலையை நோக்காகக் கொண்டு ஆரம்பித்த இப்போராட்டம் குறுகிய இனவாத சுவர்களுக்குள் அடைக்கப்பட்டு இன்று குறித்த ஒரு பகுதியினரின் தனியான ஆயுத மோதலாக உருவாகி வருகின்றதென்பதும் நாம் உணரத் தொடங்கியுள்ள கசப்பான உண்மைகள், வெளிச்சங்கள்!

இனவாதச் சேற்றுக்குள் புதையுண்டு போவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறது இப்போராட்டம். பல்நூற்றாண்டுகளாக தமிழர்களுடன் தமிழ் இஸ்லாமியர்களாக அன்னியோன்னியமாக வாழ்ந்த ஒரு சமூகம் இன்று நம்பிக்கை வைத்தவர்களாலேயே நாடற்றவர்களாக, நாதியற்றவர்களாக நாய்களைப் போல் விரட்டப்பட்டது. பலிக்களத்திற்குச் செல்லும் செம்மறியாடு போல் தான்பிறந்து வளர்ந்த, தன் உயிரினும் மேலாக நேசித்த தன் சொந்த மண்ணிலிருந்து தாய் தேசத்திலிருந்து வேற்று நாட்டவர்கள் போல் விரட்டப்பட்டது. பள்ளிவாசல்களுக்குள்ளும், கிராமங்களுக்குள்ளும் புகுந்து ஈவுஇரக்கமின்றி வேட்டையாடப்பட்டது. இத்தனைக்கும் முஸ்லீம்கள் செய்த தவறுதான் என்ன? தமிழீழ விடுதலையை தமதினத்தினதும் விடுதலை என்று கருதி உதவிக்கரம் நீட்டினார்களே. அது தவறா? வியர்வை சிந்தி உழைத்த பணத்தை தாராளமாக "எங்கட பொடியன்களுக்குத் தானே" என்று கூறி தாள்ரவார்த்தார்களே. அது தவறா? அல்லது இந்தியப்படை புலிகளை வேட்டையாடிய காலத்தில் புகலிடம் அளித்தார்களே. அதுதான் தவறா? பின் எது தவறு?

பேரினவாதத்திற்கு எதிராகப் போராடும் ஒரு சிறுபான்மையினம் தன்னிலும் சிறுபான்மையான ஒரு இனத்தின் சுதந்திர உணர்வுகளை, அரசியல் அபிலாஷைகளை அடக்கி, ஒடுக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயமானது? எப்படி சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக தமிழர்கள் போராட ஆரம்பித்தார்களோ, பின் அதே காரணத்துக்காக முஸ்லீம் இனத்தை அடக்க நினைப்பது நியாயமாகுமா? அரசபயங்கரவாதத்தால் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டார்கள் என்று கூக்குரலிடும் தமிழ் இனவாதிகள் முஸ்லீம் மக்களை அதே பயங்கரவாத ரீதியில் அகதிகளாக்கியிருப்பது கேலிக்குரியதல்லவா?

பேரினவாத அரசபயங்கரவாதத்தினால் ஆயுதம் தூக்க உந்தப்பட்ட தமிழர்கள் தனிநாடு கோருவது நியாயமானது என்றால், சிங்கள மற்றும் தமிழ்ப் பேரினவாதங்களுக்கெதிராக தமது உரிமைகளை அரசியல் அபிலாஷைகளை நிலையான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக முஸ்லீம்கள் தமக்கும் ஒரு தனியான பிரதேசம் கோருவது எந்தவிதத்திலும் தவறாகாது. தமிழீழம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம், அவ்வாறான ஒரு நிலையில் முஸ்லீம்களின் பாதுகாப்புக்கு இன்றைய தமிழ்த் தலைமைகள் உத்தரவாதம் தர முடியுமா? இது மானைப்பிடித்து புலியிடம் கொடுத்த கதையாகாதா?

முஸ்லீம்களுக்குத் தனியான பிரதேசமொன்றை ஒதுக்கிக் கொடுக்க மறுக்கும் தமிழினம் இன்று தான் தனது பாரம்பரிய பிரதேசம் என்று கூறிக் கொள்ளும் வடக்கும் கிழக்கும் பேரினவாதத்தினால் திட்டமிடப்பட்டு சூறையாடப்படுவதை கைகட்டிப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது. பேரினவாதிகள் இரு சிறுபான்மை இனங்களையும் பிரித்தாளும் தந்திரத்தை கையாளுகிறார்கள் என்று அதிகமாக அலட்டிக் கொள்ளும் தமிழினம் முஸ்லீம்களை மீண்டும் தமது சொந்தப் பிரதேசங்களில் வந்து குடியமர, கருத்து வேறுபாடுகளை நீக்க ஏதாவது ஒரு ஆக்கபூர்வமான செயலைத்தானும் இதுவரையிலும் மேற்கொண்டதா? இவற்றுக்கெல்லாம் மேலாக தமிழர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஒரே தாய்மொழியை கொண்ட தமிழினம், முஸ்லீம் இனத்துக்கெதிராக செய்த மிலேச்சத்தனமான படுகொலைகளைப் போலவோ, அக்கிரமங்களைப் போலவோ வேற்றினமான சிங்கள இனம் இதுவரைகாலமும் ஏதும் செய்யவில்லை என்பது தான் அது. இது கசப்பான ஆனால் மறுக்கமுடியாத ஒரு உண்மை.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சில முஸ்லீம் பிரிவினரால் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அசம்பாவிதங்களுக்காக முழு முஸ்லீம் சமூகத்தையே புலிகள் பகைத்துக் கொண்டார்கள். உடுத்த உடையுடன் அநாதைகளாக யாழ் முஸ்லீம்களை விரட்டினார்கள். காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப் பொத்தனை, பொலன்னறுவை போன்ற முஸ்லீம் கிராமங்களுட் புகுந்து தூக்கத்தில் இருந்த பெண்களையும், சிறுகுழந்தைகளையும் ஈவு இரக்கமின்றி வெட்டியும், கொத்தியும் கொன்று குவித்தார்கள். தமிழர்களே சற்றுச் சிந்தியுங்கள்! இஸ்ரேலினால் ஆயுத உதவிபெற்று தென் லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிமுகாம் மீது கிறிஸ்தவ போராளிகள், 1986ம் ஆண்டு நடத்திய வெறியாட்டத்தில் இருந்து புலிகள் எந்தவகையில் வேறுபட்டவர்கள்? நிகழ்கால நிதர்சனமான பொஸ்னியாவில் சேர்பியப் பயங்கரவாதிகளின் அப்பட்டமான கொலைவெறித்தாண்டவத்தில் இருந்து புலிகளின் செயல் எந்த வகையில் வேறுபட்டது? வேறுபாடு இல்லை என்றால் எங்கே எங்கள் போராட்டம் சென்று கொண்டிருக்கிறது? எமக்கு நாமே புதைகுழி தோண்டுவதற்காகவா இவ்வளவு காலமும் இரத்தம் சிந்தினோம். ஆயிரக்கணக்கான இளைஞர்களைச் சாகடித்தோம்? அப்படியானால் நாங்கள் "தியாகங்கள்" என்று கூறிக் கொள்வதெல்லாம் வெறும் மாயைதானா?

இன்னும் காலம் கெட்டுவிடவில்லை. புலிகள் தாம் செய்த தவறுகளை உணர்ந்து நியாயமானதை சிந்திக்க முன்வர வேண்டும். எமக்குள் பலவீனப்பட்டுப் போயிருக்கும் இன ஒற்றுமையை மீண்டும் புனரமைப்பதன் மூலம் போராட்டத்தின் பாதையை திசைதிருப்ப வேண்டும். மக்களினின்றும் விலகிப் போகுமாப் போல் தோன்றும் போராட்டம் மக்கள் போராட்டமாக மாற்றப்பட வேண்டும். எவையெல்லாவற்றையெல்லாம் தமிழர்களின் உரிமைகள், கோரிக்கைகள் என்று புலிகள் கருதுகிறார்களோ, அவை யாவும் முஸ்லீம் சமூகத்திற்கும் உரியவை என்ற யதார்த்தத்தை உணர வேண்டும். இல்லையென்றால் இன்றைய பொஸ்னியாவில் இரத்த வாடை ஓயுமுன்னர் இங்குமொரு பொஸ்னியா உருவாவதை தடுக்கமுடியாதவர்களாக வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

தேவதாசன் தேவராஜ்
கொழும்பு -05

நன்றி - நூலகத்திட்டம்



## எதிலிருந்து தொடங்குவது? 7

# சோறா, சுதந்திரமா?



நம்க்கென்றொரு நாடு கிடைத் ததோ, இல்லையோ அதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள். தமிழ், தமிழன் உரிமை என்றே எங்கும் பேச்சு நடந் தது.

நம்மூரில் அழகான மதில்கள் யாவும், தாரினால் எழுதப்பட்டது. அழகாக ஆணித்தரமாக, வரிவரியாக அழுத்த மாக எழுதப்பட்டிருந்தது. எழுதின கைகள் யாருடையவை? தெரியாது. ஆனால் அவ்வாக்கியங்கள் மனசில் நிலைத்து நின்றன.

''ஆண்ட தமிழினம்
மீண்டுமொருமுறை
ஆள நினைப்பதில் என்ன தவறு?''

தவறு என்று யார் சொன்னவன்? சொன்னவன் நாக்கை வெட்டு.
நாம் முன்னர் ஆண்டிருந்தோம். கங்கை கொண்டோம். கடாரம் வென் றோம். இமயமலை உச்சியில் கொடி பதித்தோம். அப்போது யாருக்கு அடிபணிந்தோம்? ஒருவர்க் குமல்ல. எந்த நாட்டில் நம்கொடி பறக்க வில்லை? எந்தத் தேசத்தை நம் கால் தொடவில்லை? எந்தப் பரப்பை நம் கை கட்டி ஆளவில்லை?

எல்லா ஊரிலும் நம் கொடி! எல்லாத் தேசத்திலும் நம் ஆட்சி!!

யார் நினைத்தார் இதனை? நம் தமிழன் பரணி பாடுகிறான். நம் தமிழன் தரணி ஆளுகிறான்.
உலகில் எந்த இனத்தால் இதனைக் கனவு காணக் கூட முடியுமாக இருந் தது? அவனவன் கோழைகள், தன் தாய் நாட்டைக் கூட காப்பாற்ற வக்கில் லாதவன். அதுவும் சிங்களவர்; கேட் கவே வேண்டாம். மோட்டுச் சிங்கள வர். நாம் தமிழர்; நாம் வீரர்; நாம் மற வர்.
என்ன மாதிரி காசி ஆனந்தன் சொல் லியிருக்கிறார்!
''மறவர் படைதான் தமிழ்ப்படை-
குல
மானம் என்றுதான் அடிப்படை
வெறிகொள் தமிழர் புலிப்படை-
அவர்
வெல்வர் என்பது வெளிப்படை.''

நம் காசி ஆனந்தன் சும்மாவா சொன் னார்? நாம் மறவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.
அதனைப் புரியாத எதிரிகள் நம்மைக் கிள்ளுக் கீரையாக நினைக்கிறார்கள்.
இன்னொரு வாக்கியமும் நம் வீதி மதில்களில் தெளிவாகத் தெரிந்தது. அவ்வாக்கியத்தை கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். எவ்வளவு மகா உண்மையை அவ்வாக்கியம் கூறி விட் டுச் சென்றது.

'''நாமில்லா நாடுமில்லை
நமக்கென்றோர் நாடுமில்லை''

அதுமெத்தச்சரி, தமிழன் எங்கு தான் வாழவில்லை. ஐந்து கண்டங்களிலும் தேடிப் பார்த்தாலும் தமிழன் அகப்படு வான். அந்தந்த நாட்டிற்கு அவன் ஓயாது உழைத்தான். உழைத்து நாட் டின் வளத்தைப் பெருக்கினான்.

ஆனால் அவன் தன் மக்களுக்காக உழைப்பதற்கு ஒரு நாடு இல்லை. தன் நிலத்தை வளம் பொழிக்க வைப்பதற்கு வழியில்லை. அவன் தனக்கென ஒரு நாடு இல்லாதிருக்கிறான். ஆனால் எல்லா நாடுகளிலும் பரந்திருக்கிறான். தன் நிலம் என்று சொல்ல, தன் மக்கள் என்று உணர, தன் நாடு என்று புளகிக்க ஒரு நாடு அவனிடம் இல்லை. ஆனால் எல்லா நாடுகளிலும் பரந்திருக்கிறான். ஒவ்வொரு நாட்டையும் தன் நாடாக வளப்படுத்துகிறான்.

இப்படித்தான் நம் நினைப்பு அப்போது.

இது நமக்கு சோறு போட்டதா? இல்லை. ஆனால் காசி ஆனந்தன் கேட்டு விட்டார் ''சோறா சுதந்திரமா? '' சோற்றுத் தமிழன் என்று அப்போது மேடைகளில் தமிழ் எம்.பிக்கள் பேசி னார்கள். அதுவும் சரிதான். சோற்றை மாத்திரம் சிந்தித்தால் ஆயிற்றா? சுதந் திரம் யார் தருவான்?

ஆனால் அப்போது சோற்றுக்கே அல் லல்பட வேண்டி இருந்தது.

அரசாங்கம், அமைச்சர்கள் யாவரும் சோஷலிசம் பேசினார்கள். பூந்தொட்டி களில் பூங்கன்று வைக்க வேண்டாம். கத்தரிச்செடி நடுங்கள் என்று அமைச் சர் குமாரசூரியர் பேசினார்.

எல்லாம் சரிதான். ஆனால் சாப்பிடுவ தற்கு அரிசி கிடைக்கவில்லை. தேநீர் குடிப்பதற்கு சீனி இல்லை. பிட்டு அவிக்க மா கிடையாது. குழந்தைக்குப் பால்மா இல்லை. தாய்ப்பாலே கதி.

பலசரக்குக் கடைகளில் ஒன்றும் கிடை யாது. பெட்டிகள் வெறுமையாகிக் கிடந்தன.கண்ணாடி அலுமாரிகளில் ஒன்றும் அடுக்கி வைக்கப்படவில்லை. சிவமண்ணை கடையை இழுத்துப் பூட்டி விட்டு தோட்டம் கொத்தப் போய் விட்டார். அழகரண்ணை- ஆளையே காணோம். கடையினுள்ளி ருந்த ஆனந்த நடராஜர் உருவத்திற்கு விளக்கேற்ற ஒருவருமில்லை. நடேசு கடையில் கறுவா வாங்கலாம். ஒரு சதக் குத்தியில் நிறுத்து கறுவா தருவார். நடேசு கடையில் இப்போது நாய் படுத் திருக்கிறது. பொயிலை வாங்க மணி யண்ணை கடை கிடையாது. எந்தக் கடை என்று சொல்ல?

ஆனால் சங்கக்கடை சனத்தால் நிரம்பி வழிந்தது. எந்த் நேரம் என்றில்லை. என்ன சாமான் என்றில்லை. சங்கக்க டையில் தான் வாங்க முடியும். அட, பல்லிமுட்டை இனிப்புக் கூட சங்கக்க டையில் தான் வாங்க முடியும்.

சங்கக் கடை மனேச்சர் தெய்வம்; சங் கக்கடையில் வேலை செய்பவர்கள் பரி வார மூர்த்திகள். செல்லையாண்ணை தெய்வம்; அப்பரண்ணை, நாகராசா, கோபாலண்ணை பரிவார மூர்த்திகள்.

''மனேச்சரண்ணை இந்தக் கிழமை கூப் பனுக்கு என்னென்ன சாமான் வந்தி ருக்கு...'' பாறிக் கிழவி கேட்பாள்.
''முன்னுக்குப் போட்டிலை போட்டி ருக்கு இஞ்சை வந்து ஏன் கழுத்தைய றுக்கிறாய்?'' மனேச்சர் எரிந்து விழு வார்.
செத்தல்மிளகாய், கொத்தமல்லி, சீர கம், வெந்தயம், கடுகு, மிளகு, சீனி, கருவாடு, மா, அரிசி, ரயர், ரியூப் யாவும். யாவும் கூப்பனுக்குத்தான். கூப்பனை மீறிய பொருட்கள் இல்லை. பாண் கூட கூப்பனுக்குத்தான். கிழ மைக்கு இரண்டு தரம் பாண் தருவார் கள். திங்கள், வெள்ளி அல்லது புதன், சனி அல்லது செவ்வாய், வியாழன் என்று மாறி மாறித் தருவார்கள். இரு வர் மட்டும் உள்ள குடும்பத்துக்கு ஒரு றாத்தல் பாண். நால்வர் மட்டும் உள்ள குடும்பத்துக்கு ஒன்றரை றாத்தல் பாண். நால்வருக்கு மேற்பட்ட குடும் பத்திலுள்ளோருக்கு இரண்டு றாத்தல் பாண்.

பனிக்குளிரில் விடிய மூன்று மணிக்குச் சென்று கியூவில் நின்றதுண்டு. மழை பெய்து கொண்டிருக்கிற பின்நேரத்தி லும் கியூவில் நின்றதுண்டு. கோடை வெய்யிலைப் பொருட் படுத்தாது. மத் தியானப் பொழுதிலும் கியூவில் நின்ற துண்டு.

கிடைக்கிற பாண் புழு நிறைந்தது. அவி யாதது. தொட்டால் உதிர்வது. மேல் பக்கம் கருகியது.
ஒரு துண்டு பாணுக்காக ஆலாய்ப் பறந் தோம்.
ராசம்மாக்கா சங்கக் கடையில் பாண் வாங்கி வருகிற போது யாரோ ஒரு வன் சைக்கிளில் வேகமாக வந்து அத னைப் பறித்துக் கொண்டு ஓடி விட் டான். ராசம்மாக்கா நடுறோட்டில் பெருங்குரலெடுத்து கத்தினார். திட்டி னார். பிறகு வெம்பி வெம்பி அழுதார். ''இரண்டு நாளாச் சாப்பிடேல்லை...'' என்று சொல்லி அழுதார். பள்ளிக்கூ டத்தால் வரப்போகிற ஆறு வயதுப் பாலகனுக்கு எதனைக் கொடுப்பேன் என்று சொல்லி வெம்பினார்.

ஒரு துண்டு பாண் கொடுக்க யாரினால் இயலும்? ராசம்மாக்காவுக்காகக் கவ லைப்படுவதனைத் தவிர யாரினால் என்ன செய்ய முடியும்?
வாழ்க்கை அப்படியே கசந்து கொண்டு போகிறது.
சீனி இல்லை. கூப்பனில் 72 சதத்துக்கு ஒரு கிலோ சீனி ஒரு மாதத்திற்குத் தரு வார்கள். தேனீர் நக்கிக் குடிக்க வேண் டும். கையை நக்கி நக்கி கைரேகை அழிந்து விட்டது. மேலதிகமாக வாங் குவதென்றால் ஆறுரூபா. யாரினால் வாங்க இயலும்?

பழந்தண்ணி குடித்து விட்டுத்திரிகிற வல்லிபுரமண்ணைக்கு, கிடைக்கிற சீனியை விற்பதனால் கொஞ்சக் காசு கிடைக்கிறது.
தாய்ப்பால் இல்லாத குழந்தைகள் நலிந்து போனார்கள்.
பசிக்கிறது. துடிக்கிறார்கள். சாப்பாடு இல்லை. சோறு கிடையாது.
சுதந்திரம் பற்றி என்ன சொல்ல?

**அ. டேவிட் நந்தகுமார்**

---

## தமிழ்த்தின விழா 1994:
# என்னே எம் தலைவிதி!

வழமை போல இவ்வருடமும கல்வியமைச்சு தமிழ்த்தின விழா வினை பாடசாலை, கோட்ட, மாவட்ட, மாகாண, நாடுரீதியாக நடத்தத்திட்ட மிட்டுள்ளது. இவ்விழாவிற்காக அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்த சுற்று நிருபம் சில கேள்விகளை எழுப்பு வதாக உள்ளது.

எழுத்து, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, கவிதை, சிறுகதை, இசை, வாய்ப் பாட்டு, விவாதம், நாடகம், நடனம் முதலான நிகழ்ச்சிகளில் நான்கு பிரிவு களுக்கிடையில் போட்டிகள் நடைபெ றுவதுண்டு. இப்போட்டிகள் அமைச்சு அனுப்புகிற சுற்று நிருபத்தின் அடிப்ப டையிலேயே நடைபெறும். சொந்த மான, சுதந்திரமான படைப்பாக்கத் துக்கு இச்சுற்று நிருபத்தில் வழி செய் யப்பட்டிருக்கவில்லை.

வழமையான சுற்று நிருபத்திலிருந்து இம்முறை மாறுபட்டிருந்தது. சமூக நாடகம், புராண, இலக்கிய நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டிய நாடகம் என்று நாடகத்தின் பல்வேறு வடிவங்களுக்கி டையில் போட்டிகள் நடைபெறுவ துண்டு. இம்முறை சமூக நாடகம் இப் போட்டியிலிருந்து விலக்கப்பட்டிருக்கி றது. வழமையாகவே சமூக நாடகப் போட்டியின் போது அரசியல் கல வாத, யார் மனதையும் புண்படுத்தாத நாடகங்கள் மேடையேற்றப்பட வேண் டும் என எச்சரிக்கப்படுவதுண்டு. இம் முறை சமூக நாடகமே மேடையேற்ற முடியாது.

இதற்கான காரணம் யாவருக்கும் தெரிந்தது. சென்ற முறை 'வெளிச்சம் வெளியே இல்லை' எனும் சமூக நாட கம் அகில இலங்கை ரீதியாக முதலாமி டம் பெற்றிருந்தது. ஆனால் அதற்கா கப் பரிசுகளோ விருதுகளோ வழங்கப் படவில்லை. காரணம்; அந்நாடகம் தொண்டமானை அவரது அரசியல் செயற்பாடுகளைத் தாக்குகின்றது எனக்கூறப்பட்டது. அந்நாடகத்தை வேறு இடங்களிலும் மேடையேற்று வது அனுமதிக்கப்படவில்லை. தொண் டமானை மாத்திரமல்ல; அவரைப் போன்ற போலியான அரசியல்வாதி கள் எவரையும் அந்நாடகம் சுட்டிருக் கும். இதற்காக அந்நாடகம் தடை செய் யப்பட்டிருந்தது.

அதே காரணத்துக்காக இம்முறை சமூக நாடகம் எனும் பிரிவே நீக்கப்பட்டிருந் தது. சமூக நாடகம் எனும் பெயரில் இன்னும் எவ்வளவு போலிகளினது தலை உருளுமோ என அரச நிர்வாகம் அஞ்சியதால், இப்பிரிவு இல்லாதொ ழிக்கப்பட்டது. அதிகார நிர்வாக அமைப்பு எப்போதும் தனக்கெதிரான கருத்துக்கள் வெளிவருகிற படைப்புக ளின் பக்கத்தை இப்படித்தான் அடைத்து விடுவதுண்டு.

இதனால் நிகழ்ந்த அனர்த்தம் வேறா னது. என்னவென்றால், ஒவ்வொரு பாடசாலையும் தமிழ்த்தினவிழாப் போட்டிக்காக நாடகத்தை அனுப்புகிற போது புராண, இலக்கிய நாடகத்தை அனுப்ப வேண்டி உள்ளது. இதனால் மாணவர்களுக்குச் சம்பந்தமில்லாத பல விடயங்கள் மாணவர்களிடம் திணிக்கப்படுகின்றன. மாணவர்களி டம் மோசமான கருத்துக்கள் பரப்பப்ப டுகின்றன. வாய்க்குள் நுழைய முடி யாத செந்தமிழ்ச் சொற்களை மிகச் சிர மப்பட்டு உச்சரிக்கிறார்கள்.'' மண்ணா, மண்ணா....'' என்று வாயிற் காவலன் அரசனை அழைக்கிறான். (மன்னா, மன்னா) இலக்கியப் பாத்திரமான அனுசுயா ''கள்ளானாலும் கணவன். புல்லானாலும் பொருஷன்...'' என்கி றாள். (கல்லானாலும் கணவன் புல்லா னாலும் புருஷன்) மாணவி தலைவிரி கோலமாக வந்து கண்ணகி யாக வழக்குப் பேசுகிறாள். 12 வயது மாணவி குந்தியாக வந்து தனக்கும் சூரி யனுக்கும் பிறந்த கர்ணனைப்பற்றி வாதம் செய்கிறாள். கர்ணனின் பிறப் புப் பற்றி ஒன்றும் தெரியாத வயது. பெண்ணை அடிமைப்படுத்தும் கருத் துத் தொடர்கிறது. உடை அலங்காரத் துக்கும் மேடை அமைப்புக்காகவும் நிறையச் செலவழிக்கிறார்கள்.

சமூக நாடகம் எனும் பிரிவு இருந்தால் இத்தகைய அனர்த்தம் நிகழ வழி இல்லை. மாணவர்கள் தங்களுக்கு இய லுமான பாத்திரத்தில் இயலுமான வச னம் பேசி நடிப்பார்கள். முக்கியமாக மாணவர்களின் படைப்பாக்க உந்துத லுக்கு வழி செய்யப்பட்டிருக்கும்.

பொதுவில் கல்வியியல் கோட்பாட் டின் படி, மாணவன் தன் வயதுக்கு மேற்பட்ட பாத்திரங்களை ஏற்று நடிப் பது, அவன் மனநிலையை பாதிக்கும் எனும் கருத்துக் கூறப்படுவதுண்டு. இதற்காக பாடசாலை அரங்கு (School theatre) சிறுவர் நாடகம் (Children Play) முதலியனவே பாடசாலையில் நிகழ்த்தப்பட வேண்டிய அரங்குகளா கும் இதனாலேயே மாணவர்களின் உளப்பாங்கு விருத்தி பெறும். அவர்க ளின் படைப்பாக்கம் வலிவு பெறும்.

தாய்மையின் உணர்வைச் சற்றும் உண ராத, பிள்ளை பெறுவது எப்படி என்று தெரியாத 12 வயதுச் சிறுமி குந்தியாக எப்படி நடிக்க முடியும்? தாய்மை உணர்வை எவ்வாறு விளக்க முடியும்? மாணவர்களின் பிரச்சினைகளை அவர்களின் இடர்ப்பாடுகளை, அவர்க ளின் எதிர்காலத்தைக் கூறுகிற அரங் கொன்றாலேயே அவர்கள் வளம் பெற முடியும்.

இவ்வாறெல்லாம் நிறையக் கேள்வி கள், சிக்கல்கள் இருந்த போதிலும், தமிழ் மக்களின் தனிப்பெரும் தலை வன், மலையகத் தனித்துவத் தலைவன் தொண்டமானின் ஒரு சுண்டு விரல் அசைப்பில், இம்முறை சமூக நாடகப் போட்டிக்கான பிரிவு இல்லாமல் போய்விட்டது.

என்னே, எம் தலை விதி?

**அருணன்**

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும் -6

ஈழ மாக்ஸிஸ்டுகள் பலர் இந்தியா மீது இன்றும் கொண்டிருக்கும் அசைக்க முடியாத பற்றுதல் என்பது தமிழ் தேசிய இனப் பிரச்சினையின் வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாகும். இந்தியா இராணுவ ரீதியாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிட்டுச் செயல்பட முற்பட்ட போது அதற்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி ராஜீவ் காந்தியும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் இணைந்து தயாரித்த மாகாணசபையில் அரசேறியவர்கள்; இடதுசாரி இயக்கமாகத் தம்மை இனங்காட்டிக் கொண்ட E.P.R.L.F இனரே.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபைக்கு முதலாவது முதலமைச்சராகியதும் பேரினவாத அரசின் மீது சிங்கக் கொடியேற்றிப் பேசியதும், தன்னைத் திட்டவட்டமாக ஒரு மாக்சிஸ்ட் எனக் கூறிக் கொண்ட நண்பர் வரதராஜப் பெருமாள் அவர்களே.

அவர் இன்றும் காலம் கனியுமென்று இந்தியாவில் விசேட கரும்பூனைப் படையின் பாதுகாப்பில் இராணுவக் குடியிருப்பு ஒன்றில் வாழ்கிறார் என நாம் அறிகிறோம்.

அவர் மீதும், அவரது அமைப்பு மீதும் டெல்லி ஆட்சியாளர் கொண்டிருக்கும் ஒரு விசேட வாஞ்சையின் வெளிப்பாடா இதுவெல்லாம் என்ற வியப்பு பலருக்கும் தோன்றாமலில்லை. வியப்படைவது மட்டுமல்ல பலர் இன்றும் இந்தியாவிற்கு ஒரு விசேட வாஞ்சையுண்டு. ஆகவே என்றோ நமக்கு மீட்சி கிடைக்கும் என மிகத் தீவிரமாக நம்புவது கண்கூடு.

ஈழத்து இடதுசாரிகள் பலர் இந்தியா மீது கொண்ட பிரேமையின் கொள்கையளவிலான அடித்தளம் எதுவாக இருந்தது என்பதனைச் சென்ற இதழில் பார்த்தோம்.

அண்டை நாடுகளில் தன் நலன்களை நிலைநிறுத்திக் கொள்ள இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளில் அந்நாட்டில் உள்ள உண்மையான மாக்ஸியவாதிகளை என்ன கண்ணோட்டத்துடன் அணுகுகிறது என்பதற்கு நேபாளத்தின் அண்மைக்கால அரசியல் வரலாறு நல்ல உதாரணமாகும்.

கம்யூனிஸ்டுகளின் தலைமையில் வெடித்துக் கிளம்பிய மாபெரும் தெலுங்கானாப் போராட்டமும், பின்னர் வங்காளத்தின் நக்சல்பாரி எனும் கிராமத்திலிருந்து இந்தியாவின் கிராமப் புறங்களெங்கிலும் பரவிய 'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மாக்ஸிஸ்ட் -லெனினிஸ்ட்) இன் ஆயுதக் கிளர்ச்சியும் இயல்பாகவே டெல்லி ஆட்சியாளர் மனதில் இடதுசாரிகள் மீதான சந்தேகத்தையும் குரோதத்தையும் வலுப்படுத்தியிருந்தன.

இவ்விரு கிளர்ச்சிகளும் அவற்றிலிருந்து உருவெடுத்த பல கருத்தலைகளும் இந்தியாவின் அண்டை நாடுகளில் செயல் பட்டு வந்த பல இடதுசாரிகள் மத்தியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன எனில் மிகையாகா. பொதுவாகவே மாலைதீவு, பூட்டான் தவிர்ந்த இந்தியாவின் அனைத்து அண்டை நாடுகளிலும் ரஷ்ய சார்பற்றிருந்த பெரும்பாலான இடதுசாரிகள் அதிலும் குறிப்பாக மாவோவின் கொள்கைகளைப் பின்பற்றியவர்கள்- தெலுங்கானாப் புரட்சியையும் சாரும ஜும்தார் தலைமையில் நடைபெற்ற நக்சல்பாரி ஆயுதக் கிளர்ச்சியினையும் தமது புரட்சிகரப் பாதைக்குப் பெரும்படிப்பினையாகவும் வழிகாட்டலாகவும் கொள்ளலாயினர். இதனை இந்திய மத்திய அரசும் கவனிக்கத் தவறவில்லை.

நக்சல்பாரி இயக்கத்தின் பாதிப்பினால் இந்தியாவின் அண்டைநாடுகளில் இருந்த மாவோவின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இடதுசாரிகளின் உலக நோக்கில் டெல்லி ஆட்சியாளர் உழைக்கும் வர்க்கத்தின் எதிரிகள் என்ற எண்ணம் ஊடுபாவாக ஓடியிருந்தது. தவிர்க்க முடியாதபடி!

தன் அண்டை நாடுகளில் இருந்த இவ்வாறான மாக்ஸிஸ்டுகளை இந்தியாவும் எதிரிகளாகவே கணித்து வந்தது. தன் வட கோடியில் இருந்த நேபாளம் தொடக்கம் தென்கோடியிலிருந்த இலங்கை வரை இவ்வகையான இடதுசாரிகளின் நடவடிக்கைகளைப்பற்றி அந்தந்த நாடுகளில் தலையிட்ட வேளைகளில் கவனமாக இருந்தது. ஈழ மாக்ஸிஸ்டுகள் மத்தியில் மாவோயிஸ்டுகள் ஆற்றிய பங்கு என்ன? தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியாவின் பங்கு என்ன? என்பது பற்றி அவர்கள் முன்வைத்த பல சிந்தனைகள் எங்ஙனம் ஈழத் தமிழ்த் தேசிய விடுதலைப் போரின் பாதையில் கொள்கையளவிலேனும் முக்கிய மைல்கற்களாய் அமைந்தன என்ற பல விடயங்களைப் பார்ப்பதற்கு முன்னர், இந்தியா தொடர்பாக நேபாள இடதுசாரி- இயக்கத்தின் அனுபவத்தைச் சிறிது நோக்குவோம். இவ்வாறு நாம் நோக்குவதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது நேபாளத்தில் இந்தியத் தலையீடு நடைபெற்றது மிக அண்மையில் அதாவது 1989 - 1992 என்பது. இரண்டாவது நேபாளப் பிரச்சினையை பிரதானமாகக் கையாண்ட றோ அதிகாரி சந்திரசேகரன் என்பது (இவரே ஈழ விடுதலை இயக்கங்கள் அனைத்தையும் கையாண்டவர்)



நேரு முதல் ராவோ வரை : ஒரே கொள்கை

## நேபாளப் பிரச்சினையிலிருந்து சில படிப்பினைகள்

# இடதுசாரிகளைக் கருவறுக்கும் இந்தியா!

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து நேபாளத்தின் முடிக்குரியவர்களாக இருந்த மன்னர்களைக் கைப்பொம்மைகளாக்கி விட்டு, அந்நாட்டை ராணா (RANAS) வம்சத்தவர் எனப்பட்டோர் ஆண்டு வந்தனர். இது 1950 வரை தொடர்ந்தது. இவர்களது கொடுங்கோல் ஆட்சிக்கெதிராக 1950இல் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சியொன்று தொடங்கிற்று. இவ்வாயுதப் போராட்டத்திற்கு இந்தியா ஆதரவும் கருவிகளும் வழங்கிற்று. இதில் நேபாளத் தேசியக் காங்கிரசும் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியும் தலைமை வகித்தன. பல தீவிரப் புரட்சிகர இந்திய இடதுசாரிகளின் செல்வாக்கின் பாதிப்பினாலும் அவர்களின் அனுசரணையுடனும் 1949 இல் கல்கத்தாவில் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இரு இயக்கங்களும் இந்திய மண்ணில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட தளங்களிலிருந்தே நேபாளத்தினுள் சென்று ஆயுதப் போரில் ஈடுபட்டு வந்தன. ராணா ஆட்சியாளரின் கைம்பொம்மையாக இருந்த அன்றைய நேபாள மன்னர் 'திரிபுவன்' இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்தார். கிளர்ச்சியாளரின் போராட்ட உக்கிரத்தைக் கண்டு அஞ்சிய ராணா குடும்பத்தவர் இந்தியாவுடன் பேரம் பேச முற்பட்டனர். பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட டெல்லி ஆட்சியாளர், மன்னர் திரிபுவனை ஆட்சியிலிருத்தினர். நேபாளத் தேசியக் காங்கிரசையும் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியையும் புறக்கணித்தனர். ராணா அரசை கவிழ்க்கும் தறுவாயில் இருந்த போராளிகளை ஆயுதங்களைக் கீழே போடுமாறு வற்புறுத்தினர். அங்ஙனம் போட மறுத்தவர்கள் இந்திய அரசினால் தடுத்து வைக்கப்பட்டனர். ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்ட நேபாளத் தேசியக் காங்கிரஸ் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றின் மகா எதிரியான ராணா அரசுடன் டெல்லி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பயனாக மன்னர் திரிபுவனின் ஆட்சியே நேபாளத்தின் மீது திணிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் முன்னின்று நடாத்தி முடித்தவர் அன்றைய பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களே. அன்னார் அன்று வகுத்து வைத்த வழியிலேயே அவருடைய பேரன் ராஜீவும் இலங்கைத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையில் நடந்து கொண்டார் என்பது இங்கு சொல்லாமலே புரியும்.

நேருவின் ஆசியுடன் ஆட்சியைத் தனதாக்கிக் கொண்ட மன்னர் திரிபுவனுக்குக் கீழ் ராணா வம்சத்தவருடன் ஒரு கூட்டு அரசை அமைக்க நேபாளத் தேசியக் காங்கிரஸ் இந்தியாவினால் நிர்ப்பந்திக்கப்பட்டது. யாருக்கெதிராகப் போராடுவதற்கு இந்தியா ஆயுதம் வழங்கியதோ பின்னர் அவர்களுடனே கூட்டை ஏற்படுத்தும் படி இந்தியாவே நேபாளத் தேசியக் காங்கிரசை வற்புறுத்திய போது மறுக்க முடியவில்லை. ஆனால் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியோ இந்தத் துரோகத்தனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக நேபாளத் தேசியக் காங்கிரஸின் கைக்கூலித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கிற்று. கூட்டரசு நீண்டகாலம் வாழவில்லை. அரசர் திருபுவனின் மகன் 'மகேந்திர' பதவிக்கு வந்த பின்னர் கட்சிகளுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச ஜனநாயக வடிவங்களும் காயடிக்கப்பட்டன. கம்யூனிஸ்டுகள் தலைமையில் மன்னருக்கு எதிராக 1959இல் மீண்டும் கிளர்ச்சி தொடங்கிற்று. இதில் நேபாளத் தேசிய காங்கிரசும் இணைந்தது. இதன் விளைவாக பாராளுமன்றத் தேர்தலுக்கு மன்னர் இசைந்ததன் பேரில் நேபாளத் தேசியக் காங்கிரஸ் B.P.கொய்ராலாவின் (தற்போதைய பிரதமர் G.P.கொய்ராலாவின் மூத்த சகோதரர்) பிரதமராகக் கொண்ட ஒரு அரசு தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆனால் 1960இல் நேருவின் ஆசிகளோடு மன்னர் இவ்வாறு தேர்தலினூடாக வந்த அரசைக் கலைத்தார். கொடுங்கோலனாயினும் மன்னர் மகேந்திராவைப் பலப்படுத்த வேண்டிய தேவை அன்று நேருவுக்கு. பிரதான காரணம் நேபாளத்தில் பரவலாகக் கிளம்பி வந்த கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு. இவர்களூடாகச் சீனா தன்னை அந்த நாட்டில் நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்பது அவரது பயம்.

72 இல் பதவிக்கு வந்த மன்னர் மகேந்திராவின் மகன் பிரேந்திரா மெதுமெதுவாக தன் நாட்டிற்கெனத் தனிப்பாதை வகுக்கத் தொடங்கலுற்றார். இதன் முதற்படியாக சீனாவுடன் உறவுகளை வளர்க்க அவர் முற்பட்டார். இதற்குப் பிரதான காரணம் நேபாளத்தின் அனைத்து வெளியுலக வர்த்தக, போக்குவரத்துத் தொடர்புகளும் இந்தியாவினால் கட்டுப்படுத்தப்பட்ட எல்லைப் புற நுழை பாதைகளினூடாகவே அமைந்திருந்தேயாகும்.

பிரேந்திராவின் தன்னிச்சையான போக்கை முட்டுப்படுத்த இந்தியா திட்டமிட்டது. 1989 இல் நேபாளத் தேசியக் காங்கிரசின் தலைவர் கணேஸ் மான்சிங் நேருவின் பிறந்த தினத்தில் இந்தியாவை மன்னர் நேருவின் பிறந்த தினத்தில் இந்தியாவை மன்னர் பகைத்து வருகிறார் என்றும் அது கண்டிக்கத்தக்கது என்றும் பேசிய பேச்சுடன் மன்னராட்சியைத் தூக்கியெறிவதற்கான ஒரு பரந்து பட்ட மக்கள் இயக்கத்திற்கான அடித்தளம் போடப்படலாயிற்று. இதில் இடதுசாரிகள் முக்கிய பங்கை வகித்தனர். இந்தியா மன்னராட்சிக்கு எதிரான இவ்வியக்கத்திற்கு வெளிப்படையாகத் தன் ஆதரவைத் தெரிவித்தது. இந்த இயக்கம் பரவுவதற்கான புறச் சூழ்நிலையை உருவாக்க இந்தியா ஒரு நிச்சயமான வழியைக் கையாண்டது.

**டி. சிவராம்**

அதாவது நேபாளத்தில் தனக்குச் சாதகமான ஆட்சி நிலவிய காலத்தில் வரையப்பட்ட, வியாபார மற்றும் போக்குவரத்து உடன்படிக்கைகளைக் காரணம் காட்டி அந்நாட்டுக்கான அனைத்துத் தரைவழிப் பாதைகளையும் பல மாதங்கள் முற்றாக மூடி விட்டது. நேபாள மக்கள் கடும் இன்னலுக்காளாகினர் இதனால். மன்னரின் இந்திய விரோத நடவடிக்கைகளின் காரணமாகவே இந்த நிலை தோன்றியது என மக்கள் மத்தியில் டெல்லியின் தூண்டுதலுடன் நேபாளத் தேசிய காங்கிரஸ் பிரச்சாரம் செய்தது. மக்களும் ஆத்திரமுற்றனர். நேபாளத் தேசியக் காங்கிரஸ், நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதிலிருந்து கிளைவிட்ட 12 பல்வேறு இடதுசாரி இயக்கங்கள் என்பனவும் இணைந்து ஜனநாயக மீட்புக்கான இயக்கம் எனும் பொது அணியை உருவாக்கிக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதில் றோ முழுக்க முழுக்க நேபாளத் தேசிய காங்கிரஸிற்கு நிதியுதவியும் வழிகாட்டலும் வழங்கிற்று. இம்முறை ஆயுதங்கள் வழங்கப்படவில்லை. ஆயுதம் வழங்கினால் கிளர்ச்சி இடதுசாரிகளின் கைக்குள் முற்றாகப் போய் விடும் என்ற றோவின் பயமே இதற்குக் காரணம். நேபாளத் தேசிய காங்கிரஸின் தலைவராக கணேஷ் மான்சிங் என்பவர் இருக்க றோ பிராமணரான G.P.கொய்ராலாவையே பிரதானமாக ஒரு அரசியல்வாதியாக வளர்த்தெடுத்துப் பலப்படுத்தியது. கிளர்ச்சிக்கு மன்னர் பிரேந்தியா அடிபணிந்து நேபாளத்தின் அரசியல் அமைப்பை மாற்ற சம்மதித்தார். அதுகாலவரை தடை செய்யப்பட்டிருந்த அனைத்துக் கட்சிகளும் மீண்டும் இயங்க அனுமதிக்கப்பட்டன. தேர்தல்கள் நடந்தன. தேர்தற் பிரச்சாரத்தில் நேபாளத் தேசிய காங்கிரஸ் இந்தியாவின் கைக்கூலியாகி விட்டதாகவும், எனவே நாட்டின் நலன்களை அது டெல்லி ஆட்சியாளரிடம் தாரை வார்த்துவிடப் போகிறது எனவும் இடதுசாரிகளின் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

ஆட்சியமைத்தவுடன் அவர்கள் கூறியது போலவே பிரதமரான G.P கொய்ராலா 1991 மார்கழியில் பாராளுமன்றம் விடுமுறையில் இருந்த போது நீர்வளப் பகிர்வு, வர்த்தகம், போக்குவரத்து என நேபாளத்தின் உயிர்நாடியான பல விடயங்கள் தொடர்பாக இந்தியாவுடன் அதற்கு மிகச் சாதகமான முறையிலும், தன் நாட்டிற்குப் பாதகமாகவும் அமைந்த பல நன்நம்பிக்கை உடன்படிக்கைகளில் (Memorandom of Understanding) கைச்சாத்திட்டார். இவை நேபாள அரசியல் அமைப்பிற்கு முற்றிலும் முரணானவகையில் பாராளுமன்றத்திற்கு தெரியாமல் செய்யப்பட்டவை என இடதுசாரிகள் கொய்ராலாவிற்கு எதிராக நாடளாவிய கிளர்ச்சிகளில் இறங்கினர். (இன்னொரு நாட்டுடன் உடன்படிக்கையில் ஈடுபடுவதானால் நேபாள அரசியல் யாப்பின்படி பாராளுமன்றத்தில் அதற்கு 2/3 பெரும்பான்மை வேண்டும்) கொய்ராலா இந்தியாவிற்குத் தாரைவார்த்தவற்றில் 'தனக்பூர்' நீர் மின்சாரத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட மெகக்காளி ஆற்றுப்பகுதியும் ஒன்று. 92 இல் இடது சாரிகள் நடத்திய கிளர்ச்சிக்குப் பெருகிய ஆதரவை கண்டு இந்தியா அஞ்சிற்று.

இது தவிர டெல்லி ஆட்சியாளருக்கு இன்னொரு சிக்கலும் ஏற்கனவே கொய்ராலா விடயமாக ஏற்பட்டிருந்தது. கொய்ராலாவை றோ பிரதானமாக வளர்த்தெடுத்ததற்கும் முதன்மைப்படுத்தியதற்கும் கட்சிக்குள் கடும் எதிர்ப்பு இருந்தது. ஆனால் றோவிற்குப் கொய்ராலாவே சிறந்த ஆளாகப் பட்டது. ஒன்று; அவர் எதற்கும் தலையாட்டக்கூடியவர், பிராமணப் பொதுநலம் பார்ப்பவர். அத்துடன் றோவின் பிரதம (இலங்கை, நேபாளம் அதிகாரி சந்திரனுக்கு நெருங்கியவர். இரண்டு; ஒரு எழுத்தாளர் அண்மையில் கூறியது போல அவர் "நீண்டகாலமாக கம்யூனிஸ்டுகளின் மிகக்கடும் எதிரிகளில் ஒருவர்" (Long Among the Communists' Staunchest Foes"). றோ கொய்ராலாவிற்கு வழங்கிய ஆதரவைக் கண்டு எரிச்சலுற்ற நே.தே.கா இன் தலைவர் மான்சிங் 91 செம்டம்பரில் அவரை இராஜினாமாச் செய்யுமாறு வற்புறுத்தினார். உறவினருக்கு சலுகை காட்டியது. பிராமணீயம் சார்பாக செயல்பட்டு வந்தது என்பன கொய்ராலாவின் மீது மான்சிங் சுமத்திய குற்றச்சாட்டுகள் எனினும் பல திரைமறைவு முயற்சிகளின் ஊடாக இச்சிக்கலிலிருந்து கொய்ராலாவை றோ காப்பாற்றிற்று.

→ 15

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு :

# கல்வியில் ஒதுக்கப்படுகிற கிராமங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி நிலையை இரண்டு பிரிவுகளாக பிரித்து நோக்குவதன் மூலமே கல்வியின் இன்றைய உண்மை நிலையை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

1) நகரம் சார்ந்த கல்வி நிலை
2) நகரம் சாராத கஷ்டமான பிரதேசக் கல்வி நிலை

பொதுவான நிலைகளை உற்று நோக்கும் போது நகரம் சார்ந்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்விரீதியாக முன்னேறுவதற்கு அதிக சந்தர்ப்பங்களைக் கொண்டவர்களாகவும், ஏனையோர் கல்வியில் முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையிலுமே இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கூட கிராமப் புறப்பாடசாலைகளுக்கு செல்வதற்கு மறுத்து நகரப் பாடசாலைகளில் கல்விகற்பிப்பதும் இன்று மிகச் சாதாரணமான ஒரு விடயம். உதாரணமாக மட்டக்களப்பு நகரத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளினதும் தேவையை விட அங்கு அதிகமான ஆசிரியர்கள் உள்ள நிலையில் வாகரையில் உள்ள ஒரு பாடசாலையை ஒரு ஆசிரியரே நடாத்தும் நிலையும் உள்ளது. அரசியல் செல்வாக்கினாலும் கல்வித் திணைக்கள உயரதிகாரிகளின் செல்வாக்கினாலும் இன்று வரை மாற்றம் செய்யப்படாமல் உள்ள ஆசிரியர்களின் தொகை உண்மையில் 50ற்கு மேற்பட்டதாகவே உள்ளது. இது ஆசிரியர்கள் அனைவரும் ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டியது உடனடி நடவடிக்கையாக இருந்தும் இன்று வரை அது அமுல் செய்யப்படாமலிருப்பதைக் காட்டுகிறது..

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என்று கூறும் போது அது பொதுவாக படுவான்கரைப் பிரதேசத்தையும், வாகரைப் பிரதேசத்தையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதில் கல்வித் திணைக்களம் பாராமுகமாகவே இருக்கின்றது. படுவான்கரையில் உள்ள பாடசாலைக்குக் கல்வி கற்பிக்கச் செல்லும் ஆசிரியர்கள் 10 மணிக்கு பாடசாலைக்குச் சமூகம்தருபவர்களாகவும் 12 மணிக்குத் தங்களுக்குத் தேவையான மரக்கறி, தேங்காய், அரிசி என்பவற்றை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் செல்பவர்களாகவுமே பெருமளவில் காணப்படுகின்றனர். சில சமயங்களில் ஆசிரியர் பாடசாலைக்குச் சென்றிருக்கமாட்டார். ஆனால் அவர் கடமைக்குச் சமூகம் தந்ததாக அவரது கையெழுத்து காட்டும். இது மட்டக்களப்புக் கல்வித் திணைக்களத்திற்கும் நன்கு தெரிந்த ஒரு விடயம். இதேவேளை கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் பின்வரும் குறைபாடுகள் பெருமளவில் காணப்படுகின்றன.

1) ஆசிரியர்கள் பற்றாக்குறை.
2) கட்டிடங்கள் அற்ற நிலை.
3) தளபாடங்கள் அற்ற நிலை.

இவ்விடயங்கள் தான் இன்று இப்பிரதேசத்தின் கல்வி முற்று முழுதாகப் பிற்படுத்தப்பட்டமைக்கான பிரதானமான காரணங்களாகும். கடந்த கால வன்செயல்களின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணி விடலாம். இன்னும் சில இடங்களில் பாடசாலைக் கட்டிடங்களின் அத்திவாரங்கள் கூட எடுக்கப்பட்ட நிலையில் பாடசாலைகள் காணப்படுகின்றன. முறக்கொட்டாஞ்சேனை என்னும் கிராமத்தில் உள்ள பாடசாலையில் கடந்த 5 வருட காலமாக இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். இன்று இப்பிரதேசத்து மாணவர்கள் ஓலைக் கொட்டில்களிலும், மரங்களின் கீழும் நிலத்தில் இருந்து பாடம் படிப்பதைக் காணும் போது இப்படியொரு அவலம் இந்த மாணவர்களுக்கு ஏன்? என்று எண்ணவே தோன்றும். வாகரைப் பிரதேசம், மற்றும் படுவான்கரைப் பிரதேசப் பாடசாலைகளிலும் இந்த நிலைமையே இன்று காணப்படுகின்றது.



கடந்த காலங்களில் இதை நிவர்த்தி செய்வதற்காக அந்தந்தப் பகுதிகளில் கடமையாற்றிய அப்பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் என்னும் திட்டம் அமுல்படுத்தப்பட்ட போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அது அதன் நோக்கத்தை இழந்ததாகவே காணப்படுகின்றது.

உண்மையில் தங்கள் கிராமம் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற நோக்கோடும் தங்களுக்கு எதிர்காலத்தில் நல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்ற எண்ணத்தோடும் தன்னலமற்ற கடமை செய்த உண்மையான தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டு நகரங்களில் இருந்த மிக வசதியான, தங்கள் வாழ்நாளில் கூட கஷ்டப் பிரதேசங்களைப் பார்த்தறியாத எத்தனையோ இளைஞர், யுவதிகளுக்கு இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கஷ்டப் பிரதேசப் பாடசாலை அதிபரிடம் லஞ்சம் கொடுத்து தான் அப்பாடசாலையில் குறைந்தது ஐந்து வருடங்களாகவேனும் கல்வி கற் பிப்பதாகக் கடிதம் எடுத்துத் தமது செல்வாக்கினால் கல்வித் திணைக்கள அதிகாரிகளைக் கொண்டு உறுதிப்படுத்தி ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் தான் அதிகம். மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் கடமைபுரியும் ஒரு உயர் அதிகாரியின் மூன்று மக்கள் இவ்வாறு நியமனம் பெற்று, உடன் இடமாற்றமும் பெற்று இன்று நகரப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றனர். அவர்களுடைய காலடி கூட அக் கஷ்டப் பிரதேசத்திற்பட்டிருக்காது. இறுதியில் கஷ்டப் பாடசாலைகள் அப்படியே இருக்க நகரப் பாடசாலைகளில் ஆசிரியர் தொகை கூடியதுதான் மிச்சம்.

மறுபுறத்தில் சேதமடைந்த பாடசாலைகளின் கட்டிடத்தைப் புனரமைப்பதிலும் கல்வித்திணைக்களம் அக்கறையற்றே காணப்படுகின்றது. நகரப் பாடசாலைகளில் இரண்டுமாடி, மூன்று மாடி எனக்கட்டிடங்கள் உயர, இந்தப் பாடசாலைகள் ஓலைக் கொட்டில்களில் இருந்து மர நிழல்களை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது.

ஆனால் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் மட்டக்களப்பு கல்வியில் முன்னேறுகின்றது என்று கூறுகின்றார். இவர் மட்டக்களப்பு என்று நினைப்பது மட்டக்களப்பில் உள்ள உயர்தரக் கல்லூரிகளைத் தான் போல் தெரிகின்றது. அதேசமயம் கடந்த காலங்களில் பின்தங்கிய பிரதேச மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்ளாமல் தடுத்து, அவர்களுடைய முன்னேற்றத்தைப் பாதித்ததிலும் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தின் பங்கு கணிசமானதென்றே கூற வேண்டும்.

இதன் மறு பக்கத்தில் பார்க்கும் போது நகரப் பாடசாலைகளை நோக்கி ஆசிரியர்கள் வருவதற்கு இன்னுமொரு காரணம் ரியூசன் கொடுக்க முடியும் என்பதுதான். இன்று உண்மையான படிப்பு, பாடசாலைகளை விட ரியூசன் வகுப்புகளில் தான் இருக்கின்றது. ஆசிரியர்கள் ச ப் பாடசாலையில் கற்பிப்பதை விட ரியூசன் வகுப்புக்களில் கற்பிப்பதில்தான் கூடிய கவனம் செலுத்துகின்றனர் இதன் காரணமாக வசதியற்ற மாணவர்கள் பாடசாலைகளில் கூட ஒழுங்கான கல்வியற்ற நிலையிலும், ரியூசனுக்குச் செல்வதற்கு பணம் அற்ற நிலையிலும் அல்லல்பட்டு இறுதியில் படிப்பைக் கைவிடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றுது.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை தெய்வத்திற்கு நிகராக ஒப்பிடும் இவ்வேளையில் அத்தெய்வங்கள் பணம்தான் எங்களுக்குத் தெய்வம் என்று ஓடிக் கொண்டிருக்கின்றன. பாவம் மாணவர்கள்!!

**சத்தியேந்திரா**

# கிழக்கின் கோணல் மாணல்கள்

கிழக்கில் அரசபடைகளுடன் சேர்ந்து காட்டிக் கொடுத்தும் ரயர் போட்டும் அரசு போட்ட பிச்சையை நக்கிக் கொண்டு திரிந்தவர்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் மக்களை வெருட்டியும், கள்ளவோட் போட்டும் கதிரைகளைப்பிடித்த சந்தோஷத்தால் அடுத்த தேர்தலுக்காக விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி மேடை போட்டு, அரசியல் பேசி தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் செழியன் பேரின்பநாயகம் இல்லாமல் ரெலோ இல்லை; ரெலோ இருக்க வேணுமென்றால் செழியன் பேரின்பநாயகம் இருக்க வேணுமென்ற நிலை இருக்கிறாற் போல தெரிகிறது. முன்னர் பிரஜைகள் குழுத்தலைவராக இருந்த அவர் தன்னை ஒரு சராசரி அரசியல்வாதியாக மாற்றி வருகிறார். இதற்காக மேடைப் பேச்சுக்களையும், நடையையும், உடையையும் மாற்றி வருவது அசலான ஒரு விற்றுப்பிழைக்கும் அரசியல்வாதியாக அவர் மாறி வருகிறதைப் புலப்படுத்துகிறது.

இருந்தும் ரெலோவினால் மேயர் செழியன் பேரின்பநாயகம் மீது பலதரப்பட்ட கட்டுப்பாடுகள். வெளியில் என்ன பேசினாலும் கருணாகரம் எம்.பிக்கு கட்டுப்பட்டே நடக்கிறார். அண்மையில் மேயருக்கு தெரிந்த ஒருவருக்கு சில கொன்ராக் வேலைகளை கொடுக்கமுற்பட்ட போது கருணாகரம் எம்.பியால் மேயர் நன்றாகவே கடிந்து கொள்ளப்பட்டாராம். "எனக்குத் தெரியாமல் எதுவும் செய்யக்கூடாது. உமக்கு என்ன சொல்லி மேயர் பதவி கொடுத்தனாங்களென்று தெரியும் தானே" என நினைவுபடுத்தினாராம் கருணாகரம் எம்.பி.

கிழக்கில் ரெலோவினர் தாம் கதிரை பிடித்த இடங்களிலெல்லாம் கொன்ராக் வேலைகளுக்கு எவ்வளவு கொமிசன் கிடைக்கும் என்பதில் தான் மும்முரமாக இருக்கிறார்கள்.

இதைவிட அண்மையில் மட்டக்களப்பில் விஞ்ஞான கைத்தொழில் அமைச்சின் இடம்பெயர் கண்காட்சி ஒன்று இடம் பெற்றது. இதில் மேயர் செழியன் பேரின்பநாயகம், அரச அதிபர் மோன குருசாமி, பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனா, கருணாகரம் எம்.பி, பிரின்ஸ் காசிநாதர் எம்.பி ஆகியோர் உட்பட மட்டக்களப்பின் அனைத்து உயரதிகாரிகளும் நிரம்பியிருந்தார்கள். நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் கால் வலிக்க வலிக்க வெயிலில் வரிசையாக காத்து நின்றார்கள்.

**எம். மைதிலி**

நிகழ்ச்சி நிரலின் ஆரம்பம் சிங்களத்திலேயே தொடங்கியது. நிகழ்ச்சி முடியும் வரையும் சிங்களப் பாடல்களே ஒலிபரப்பப்பட்டது. மாணவர்களுக்கோ பிச்சிக் கொண்டு ஓடவேணும் போல் இருந்தது. ஆனால் உள்ளே கதிரைகளில் அமர்ந்திருந்த அந்த அதிகாரிகளோ எம்.பிமாரோ அதைப்பற்றி கவலைப்படவேயில்லை.

அதைவிட ஒருபடி மேலே மேயர் செழியன் பேரின்பநாயகம் சிங்களப்பாடல்களை கேட்டு தன்னை மெய்மறந்து கால்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்தார். பார்த்துக்கொண்டு வெளியே நின்றவர்களுக்கோ மேயரின் மேல் கோபத்தை விட அனுதாபம் தான் வந்தது. "பாவம் மனிசன் எத்தனை வருஷமாக இந்தக் கதிரைக்கு அலைஞ்சி அலைஞ்சி இப்பதான் கிடச்சிருக்கு கவனமாக வைச்சிருக்கவேணுமெல்லோ" என்று அங்கிருந்தவர்கள் முணுமுணுத்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லீம் கிராமங்களை அண்டியுள்ள தமிழ்க்கிராமங்கள் வாரத்தில் ஒரு தடவையாவது குறைந்தது பொலிஸாரால் சுற்றிவளைக்கப்படுகிறது. சுற்றிவளைப்புக்கு வரும் பொலிஸார் முன்னர் இந்தியப்படைகள் நடந்துகொண்ட மாதிரி பெண்களிடம் முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்களாம்.

பாண்டிருப்பு தமிழ்க்கிராமம் போன மாதம் மட்டும் ஐந்து தடவைகள் சுற்றி வளைத்து, சோதனையிடப்பட்டுள்ளது. ஆண்களைப் பொது இடங்களுக்கு போகச்சொல்லிவிட்டு பெண்களிடம் குறிப்பாக பொலிஸார் மிகவும் மோசமாக நடந்து கொள்கிறார்களாம்.

மண்டூர், வெல்லாவெளி, பாலையடிவெட்டை போன்ற இடங்களில் முகாமிட்டுள்ள அரசபடையாளர் முகாம்களுக்கு அருகே செல்பவர்களை கூட்டிச் சென்று முகாம்களை துப்புரவு செய்தல், கிடங்கு வெட்டுதல், புல்வெட்டுதல் போன்ற வேலைகளை செய்யும்படி, வற்புறுத்தி வேலை வாங்குகின்றனர். இது படையினரின் அன்றாட நடவடிக்கையாக இப்போது இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் எனக்கூறிக் கொள்ளும் யாரும் வாய் திறப்பதாக வேயில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



## பாலம்

இலங்கையின் சிறுபான்மை இனக்குழுக்களைப் பற்றி பேரினவாதிகளும், பேரினவாதக் கட்சிகளும் கொண்டுள்ள நிலைப்பாடு எவருக்கும் அப்பட்டமான ஒன்று. இந்நிலைப்பாட்டையே சிங்களத்தினதும், ஆங்கிலத்தினதும் Mainsteam பத்திரிகைகள் மக்களிடம் காவிச் செல்கின்றன. இதற்கு மாற்றாக சிறுபான்மை இனக்குழுமங்களின் பிரச்சினைகளைப் பற்றி சிங்களத்தில் எழுதிவரும் பத்திரிகைகளிலொன்று யுக்திய. இப்பத்திரிகையில் எழுதி வரும் நிஷாந்த தென்னிலங்கையின் அரசியல் போக்குகளையும், சிறுபான்மை இனக்குழுமங்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஊடாடும் பல்வேறு கருத்தும் போக்குகள் தொடர்பாகவும் இப்பத்தியில் தொடர்ந்து எழுதுவார்.

ஆ-ர்

# பிரிந்து போவது ஐக்கியத்திற்கான முதற்படியே !

– நிஷாந்த



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர் மட்டப்பதவிகளுக்காக அண்மையில் அக்கட்சிக்குள் நடாத்தப்பட்ட தேர்தல், இந்நாட்டின் சிறுபான்மை இனங்கள் குறித்த அக்கட்சியினது அணுகுமுறை எப்படிப்பட்டது என்பதை ஆராய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது! தமது கட்சியின் மத்திய கமிட்டிக்கு தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவரை தெரிவு செய்ய முடியாதளவுக்குத்தான் அக்கட்சியின் நிலைமை இருந்திருக்கிறது என்பது இத்தேர்தலின் போது தெளிவாகியுள்ளது. இத் தேர்தல் பற்றி 24.05.94 'திவயின' பத்திரிகை வெளியிட்ட செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது.

''தர்மசிறி பண்டாரநாயக்காவின் கோரிக்கைக்கிணங்க எட்டுப்பேர் கட்சியின் உதவித் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் கே.பி.ரத்னாயக்கா, மைத்திரிபால சேனநாயக்க, டி.எம்.ஜயரத்தின, றிச்சார்ட் பத்திரண, ஆனந்த திசநாயக்க, டி.பி விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச, அல்வி மௌலான ஆகியோரே அவ் எண்மருமாவார். உதவித் தலைவர்களில் இன்னும் ஒருவரை சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக தெரிவு செய்வதென முடிவு செய்யப்பட்டது''

இதனை ஒரு தற்செயல் நிகழ்வாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் சிறிலங்கா சு.கட்சி நாட்டிலுள்ள இரு பெருமளவு பிரதிநிதித்துவத்தைக் கொண்ட கட்சிகளில் ஒன்று. 1951இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி ஏற்கனவே 43 வருட வரலாற்றைக் கண்டுவிட்டது.

இந்த 43 ஆண்டு காலத்துள் இலங்கை அரசியலைப் பொறுத்தவரை அவர்களது பொருளாதார சீர்திருத்தத்தை நோக்கிய பங்களிப்புகள் கணிசமானவையாக இருந்த போதும், மக்களது உரிமைகள் மற்றும் நலன்கள் என்று பார்க்கையில் அவர்கள் செய்ததென சொல்லக்கூடியதாக எதுவும் இல்லை. எரிகின்ற பிரச்சினைகள் குறிப்பாக தேசிய சிறுபான்மை இனங்களது பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான திட்டமோ அதற்கான உணர்வோ இல்லாத வரலாற்றுப் பின்னணியை இவர்கள் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும்! உண்மையில் தேசிய சிறுபான்மையினங்களின் உரிமைகள் மற்றும் நலன்களையிட்டு அது அவ்வளவாக அக்கறை கொண்டிருக்கவில்லை. அதனது தத்துவார்த்த மையமானது முதலாளித்துவமாகவும், பிரபுத்துவ எச்ச சொச்சங்களால் சூழப்பட்டதாகவும் இருப்பதால் அதனது இந்த அக்கறையீனம் இயல்பானதே. உதாரணமாக இக்கட்சி இந்த நாட்டின் இனப்பிரச்சினையை எவ்வளவு குறைவாக மதிப்பிடுகின்றது என்பதை கீழ்வரும் இந்தக் கூற்று தெளிவாகக்காட்டும்.

''எங்களது அரசாங்கம் இருந்த காலப் பகுதியில் (1970-1977) நாங்கள் யாழ்ப்பாணத்து விவசாயத்தை ஊக்குவித்தோம். அவர்களது வெங்காயம், மிளகாய் என்பனைவற்றிற்கு நல்ல விலை கொடுத்தோம்.''

உண்மைதான் பிற நடுத்தர வர்க்கத்தினருடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்து விவசாயி இன்றைய காலத்தை விட அதிகளவு நன்மைகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்களை மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் கொண்டிருந்தது உண்மைதான்.

ஆனால் ஒரு இனத்தின் உரிமைகளும் நலன்களும் நிலவும் அரசியல் ஜனநாயகத்தால் அளவிடப்படுகிறது போல பொருளாதார ஜனநாயகத்தால் அவ்வளவாக அளவிடப்படுவதில்லை. வர்க்க அடிப்படையிலான சமூகங்களை நீண்டகாலமாக கொண்ட முதலாளித்துவ நாடுகளில் கூட, பல்வேறு தேசிய இனங்கள் அரசியல் ஜனநாயகத்திற்காக குரலெழுப்புவதும் அது சூறாவளியாக உலக முழுவதும் பரவி வருவதும் யாரும் அறியாததல்ல.

நிலவும் இன அடையாளம், சுதந்திரம், தனிமனித சட்டவுரிமைகள் என்பன வற்றையே கேள்விக்குள்ளாக்குகின்ற மேலும் மேலும் சுயநிர்ணய உரிமைக்கான குரல்கள் எழுப்பப்படுகின்ற இன்றைய நிலையில் சி.ல.சு.கட்சி தேசிய இனப்பிரச்சினையை ஒரு எதிர்நிலையில் பார்த்திருக்கின்றது. அவர்களது குறுகிய கண்ணோட்டத்தால், கட்சி தொடங்கி 43 ஆண்டுகளுக்குப் பின்னும் கட்சிக்குள் அல்பிரட் துரையப்பா என்ற இக்கட்சி அரசியல்வாதியின் மறைவுக்குப் பின் சிறுபான்மையினங்களை பிரதிநிதித்துவப்படுத்த ஒருவரை தெரிவு செய்வதற்கேற்றவிதத்தில் தமது கட்சிக் கொள்கைகளை வளர்த்தெடுக்க முடியவில்லை.

இதற்கான பிரதான காரணம், தமிழர்கள் மத்தியில் ஆயுதமேந்திய கிளர்ச்சி ஆரம்பமானதல்ல. மாறாக இக்கட்சியின் தீவிரமான இனவாத இயல்பேயாகும். இந்த முரண்பாடாக அணுகுமுறையானது இக்கட்சியின் அண்மையில் வெளியிட்ட அரசியல் அறிக்கை மூலம் தெளிவாகிறது.

அவர்கள் இவ்வாறுதான் தமது கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள்:

- "மாகாண சபைகள் கலைக்கப்படும்.சமூக அரசியல், பூகோள இன மற்றும் கலாசார நிலைமைகளை கணக்கிலெடுத்து அதற்கேற்றவிதத்தில் புதிய நிர்வாக அலகுகள் தீர்மானிக்கப்படும். அதற்கேற்ற விதத்தில் அதிகாரம் பரவலாக்கப்படும்."
- "அதிகாரப் பரவலாக்கமானது ஒற்றை ஆட்சி அமைப்புடன் பொருந்துவதாக அமைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்."
- "வடக்கையும் கிழக்கையும் இணைப்பதை நாம் ஏற்கவில்லை. எமது முன்மொழிவுகள் நடைமுறைப் படுத்தப்படும் போது இப்பிரச்சினை எழப்போவதில்லை."

பல்வேறு காரணங்களால் இந்தக் கொள்கை அறிக்கை ஒரு கவர்ச்சியான ஒன்றாகத் தெரியக்கூடும். ஆயினும், சாரத்தில் இது சி.சு.கட்சியின் நிலப்பிரபுத்துவ -இனவாத அணுகுமுறையையே படம்பிடித்துக் காட்டுகிறது!

அதிகாரப் பரவலாக்கல் என்பது நிலவுகின்ற இலங்கையின் அரசியல் நெருக்கடியின் மத்தியில் ஒரு மிகச் சிக்கலான விடயமாகும். அத்துடன் அதுவே இன்னமும் அடையப்பட வேண்டிய ஒன்றாகவும் உள்ளது. இன்றுவரை இங்குள்ள எந்தக் கட்சியும் குறைந்தபட்சம் அதிகாரங்களைப் பரவலாக்கும் ஒரு சமஷ்டித் திட்டத்தைக் கூடத் தயாரிக்க முடியாததாக உள்ளதால் அது இன்னமும் ஒரு அடையப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது. இத்தகைய சிக்கலான நிலையிலும் சி.ல.சு.க, போன்ற நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ கட்சிகள் வடக்கு கிழக்கு இணைந்த ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே பிரச்சினையைத் தீர்த்து விட முடியும் எனக் கருதுகின்றன.

அதிகாரப் பரவலாக்கம் குறித்த மரபுவாத அணுகுமுறையானது அப்பரவாலாக்கம் எப்போதும் ஒற்றை/தேசிய அரசு அமைப்புக்களுக்குள் அமைய வேண்டும் என்றே கருதுகிறது. ஆனால், இன்று அப்படியான ஒரு அரசியல் ஒருமையை முதலாளித்துவ வழியில் மட்டுமல்ல, மிதவாத அமைப்புக்குள் கூட நடைமுறைச் சாத்தியமாக்கி விட முடியாது!

இப்படியானதொரு நிலையில் என்ன தான் செய்ய வேண்டும்?

உண்மையில் நாம் ஒற்றை அரசியல் அமைப்பு என்ற கண்ணோட்டத்திலிருந்து விலகிச் சென்றாக வேண்டும். ஆகக்குறைந்தது, பிரான்ஸ் போன்ற நாடுகளில் செய்யப்பட்டது போன்று (அங்கு இது வெற்றிகரமாக சாதிக்கப் பட்டுள்ளது) இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதை அடிப்படையாக கொண்ட ஒரு தீர்வினையாவது முன்வைக்க வேண்டும். இத்தகைய ஒரு திட்டத்தின் அடிப்படையில் மொத்த அரசாலும் பிளவுற்றுள்ள தனித்துவ அரசியல் போக்குகளாலும் உருவாகியுள்ள நெருக்கடியை தெளிவாக நடைமுறையில் இனங்காண முடியும்.

ஆனால், தீவிர சிங்கள தேசியவாதப் பிரிவினரோ இத்தகைய ஒரு அரசியல் அமைப்பு வடிவம். நாடு பிளவுண்டு போகவே வழிவகுக்கும் என்று தமது அச்சத்தை வெளிக்காட்டுகின்றனர். உண்மையில் இது ஒரு வெறுமையான கற்பனையே. மார்க்சிய வார்த்தைகளில் சொல்வதானால், உண்மையில் அவர்கள் காணத் தவறுவது இதைத் தான்:

'ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பிரிந்துபோதல் என்பது, ஐக்கியத்தை நோக்கிய பயணத்தின் ஒரு படியே. அதற்கேற்றபடி இது ஜனநாயக அடிப்படையில் அமைந்த ஒரு அரசியல் பொருளாதார மயமாக்கலாக அமையும்'

('அயர்லாந்துக்கு நீதி' தொடர்பான கடிதங்கள் கார்ல்மாக்ஸ் (1866 - 1867))

அரசியல் கட்சிகள் குறிப்பாக சி.ல.சு.க, ஐ.தே.க என்பனவற்றுக்கு இலங்கையின் அரசியல் முனைவாக்கம் எவ்வாறு மாறி வருகின்றது என்பதை புரிந்துகொள்ளும் அறிவோ கொள்கையோ, திட்டமோ கிடையாது. இதன் முடிவு ஒரு அராஜக அரசியல் நிலையின் உருவாக்கத்திலேயே கொண்டு போய் விடும்.

இப்போது, இந்த இரு கட்சிகளும் கோட்பாட்டு ரீதியில் தேசிய இனங்களின் இயற்கையான பாரம்பரியங்களை மறுப்பதில் கூட்டுச் சேர்ந்துள்ளன. எனவே தமிழ் முஸ்லீம் சிறுபான்மை இனங்கள் பாதிக்கப்பட்டவர்களாக அவமானப்படுத்தப்பட்டவர்களாக, நிகழ்வுகளால் ஆத்திரமூட்டப்படப்பட்டவர்களாக இருப்பதில் எந்த வித ஆச்சரியமும் இல்லை. இவர்களின் நோக்கமெல்லாம் தமிழ் பேசும் மக்களை தமது சொந்த தந்திரங்களைப் பாவித்து வெற்றி கொள்வதும் அவர்களுக்கு முழுமையான அரசியல் ஜனநாயகத்தை வழங்க மறுப்பதுமேயாகும்.

---

# நாட்டை அழித்து காட்டை வளர்ப்போம் டும்...டும்.. டும்..!

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிஉத்தம ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க 26.05.94 அன்று நுவரெலியாவில் பேசிய போது ''எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக காடுகளையும் ஏனைய உயிர் இனங்களையும் பாதுகாக்க வேண்டும். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் அதற்காக அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது'' என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறியதன் மூலம் தன்னை எதிர்காலச் சந்ததியின் மீது அக்கறை உள்ள முற்போக்கு சிந்தனையாளனாக காட்டிக் கொள்ள முற்படுகிறார்.

இதே ஜனாதிபதி மூன்று மாதங்களிற்கு முன்னர் பேசிய போது ''நாம் வெளிநாடுகளில் வேண்டுவது நீண்டகாலக்கடன் 50 வருடங்களின் பின் கடன் வாங்கியவனும் செத்துப் போவான். கடன் கொடுத்தவனும் செத்துப் போவான்'' என்று தனது குறுகிய கால தேர்தலை நோக்காகக் கொண்ட தத்துவத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதிக்கு உண்மையிலேயே எதிர்காலச் சந்ததியினரின் மீது அக்கறை இருந்தால் இப்படிக் கூறியிருக்க மாட்டார். முன்னுக்குப் பின் முரணாகப் பேசி மக்களை ஏமாற்றுவதில் ஐ.தே.கவிற்கு 17 வருட அனுபவம் உண்டு.

60 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். நாடே யுத்தத்தால் அல்லலுறுகிறது. மக்கள் பொருளாதார கொள்கையினாலும் போரினாலும் கஷ்டப்படுகின்றனர். நிகழ்காலப் பிரச்சினையை தீர்க்காமல் தேர்தலில் வென்றால் சரியென்று நிற்கும் குறுகிய நலன் கொண்ட ஜனாதிபதி வருங்காலச் சந்ததியினரிற்காக காடு வளர்க்கிறாராம்.

வருங்காலச் சந்ததியினரின் மீது அதிகளவு அக்கறை கொண்ட இதே ஐ.தே.க இரணவிலவில் 1200 எக்கர் தென்னங்காணியை அமெரிக்காவின் இராணுவத்தளம் அமைக்க கொடுத்துள்ளது. அங்கு நின்ற 5000தென்னை மரங்கள் சாய்க்கப்பட்டு விட்டன. இன்னும் 15,000 தென்னை மரங்களைச் சாய்ப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு அணுமின் சக்தி நிலையம் அமைக்கப்படுகின்றன.

வருங்கால மக்கள் வல்லரசுகளிற்கிடையேயான யுத்தத்தில் தாக்கப்பட சாத்தியமுண்டு. அணுமின் நிலையத்தில் இருந்து கதிர்வீச்சு ஆபத்துக்களும் உண்டாகலாம். ஜனாதிபதி இவற்றைப் பற்றி வாய் திறப்பதில்லை.

கண்மூடித்தனமான பொருளாதாரக் கொள்கையால் வெளிநாட்டுக் கம்பனிகட்கு நாடு விற்கப்பட்டு விட்டது. உலக வங்கியின் உத்தரவின் கீழ் மக்கள் கொல்லப்படுகின்றனர்.

இதற்குக் காரணம் கடன் வேண்டியமை, போர், வீண்விரயங்கள், ஊழல் என்பனவாகும். ஐ.தே.கவின் மக்களிற்கான திட்டம் நீண்டகால நோக்கில் பெருந்துரோகம். மகாவலித் திட்டத்தின் கீழ் காடுகள் பயிர் நிலங்கள் அழிக்கப்பட்டன. மண்சரிவுகள், வெள்ளப் பெருக்கு ஏற்பட வழிவகுத்தது.

உல்லாசப் பிரயாணம் என்று வருபவர்களிற்காக இளம் சிறார்கள் விபச்சாரத்திற்கு விடப்படுகின்றனர். 'எயிட்ஸ்

→ 15

# இலங்கை அரசியலமைப்புகளும் இன்ப்பிரச்சினையும்- 12

"–1920 - 1930 காலப்பகுதியில் வேறுபட்ட தேசிய சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளே முதிர்ச்சி பெற்றன. இவ்வாறான பிளவுகள் வெடித்துப் பெருக ஒவ்வொருவருக்கும், தமது சொந்த இனத்தை ஒழுங்கமைப்பதே முதற்காரியமாகத் தோன்றிற்று. ஒவ்வொரு இனமும் மேலும் மேலும் தம்மை மையமாக வைத்தே செயற்பட்டதுடன் புதிதாக உருவான தன்னுணர்வினை உத்வேகத்துடன் வளர்த்துக் கொண்டன. சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை மறைய அவ்வச் சமூகத்தை சேர்ந்தவர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டது: இனவாதம் இதனால் மேலும் மேலும் நிலைநிறுத்தப்பட்டது. 1927ம் ஆண்டு டொனமூர் குழுவினர் வருகைதந்த பொழுது இனவாதம் நிறுவனமயப்பட்டுவிட்டது. சிறுபான்மையினர் மிகவும் உத்வேகத்துடன் இனரீதியான பிரதிநிதித்துவத்தைக் கோரினர்." பிரபல சிங்கள சமூகவியல் ஆய்வாளரும் "மாவத்த" சஞ்சிகையின் ஆசிரியருமான சுனில் விஜயசிறீவர்த்தனா 1920 - 1930 காலப்பகுதியைப் பற்றி மேற்கண்டவாறு கூறினார்.

இக்கருத்துக்கள் அக்காலப் பகுதியைப் பற்றிய சரியான எடைபோடலாக இருந்தன. 1920 களின் இறுதிப்பகுதியில் தேசிய காங்கிரசில் அங்கம் வகித்த எஞ்சிய தமிழர்களும் கூட தமிழர் அமைப்புகளில் சேர்ந்து கொண்டனர். இடைக்காலத்தில் தேசிய காங்கிரசையும், தமிழர்களையும் இணைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் எதுவித பயனும் தராமல் சிதைந்து போயின.

சுனில் விஜயசிறீவர்த்தனா கூறியது போலவே 1920 களின் பிற்பகுதியில் பேரினவாதம் நிறுவனமயப்பட்டு விட்டதால் பெரும்பான்மை இனமும், சிறுபான்மை இனங்களும் தத் தம் நலன்களின் அடிப்படையிலேயே கோரிக்கைகளை முன்வைத்தன. பெரும்பான்மை இனத்தைப் பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தை தமது கைகளில் எடுத்துக் கொள்வதே அதனது பிரதான நோக்கமாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே முழுமையான பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம், பொறுப்பாட்சி என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். சிறுபான்மையோரைப் பொறுத்தவரை சிறுபான்மையோரின் பாதுகாப்புக்கே அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். பொறுப்பாட்சிக்கான செயற்பாடுகள் வளரவளர அவர்கள் இது தொடர்பாக மேலும் அச்சம் கொண்டனர். இதனால் இனவாரிப்பிரதிநிதித்துவம் என்ற விடயத்தையே தமது பிரதான கோரிக்கையாகக் கொண்டனர்.

1927 இல் அரசியல் சீர்திருத்தம் செய்வதற்காக டொனமூர் விசாரணைக் குழுவினர் இலங்கைக்கு வந்த போது இருதரப்பினரும் மேற்கண்டவாறான கோரிக்கைகளையே முன்வைத்தனர். டொனமூர் குழுவினர் பிரித்தானியர்களின் நலன்களுக்கு என்றுமே உதவக்கூடியவர்களாக இருப்பவர்களும், சுதந்திரத்தை நோக்கிய பயணத்தில் ஆட்சி அமைக்கத் தகுதி பெற்றவர்களாக இருப்பவர்களுமான பெரும்பான்மை இனத்தவர்களின் கோரிக்கைகளை புறக்கணிக்க விரும்பவில்லை. சிறுபான்மை இனத்தவர்களின் கோரிக்கைகளிலும் பார்க்க பெரும்பான்மை இனத்தவர்களின் கோரிக்கைகளை புறக்கணிப்பது அவர்களுடைய நலன்களுக்கும் ஆபத்தானதாக இருந்தது. இதனால் பெரும்பான்மை இனத்தவர்களின் கோரிக்கைகளை ஓரளவுக்காவது ஏற்பதற்கு முன் வந்தனர். இதன் அடிப்படையிலேயே முழுமையான பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தையும் கட்டுப்பாட்டுடன் கூடிய பொறுப்பாட்சியையும் சிபார்சு செய்தனர்.

உண்மையில் அன்று சிறுபான்மையோரின் கோரிக்கை இனவாரிப் பிரதிநிதித்துவமாக இருந்திருக்கக் கூடாது. 64சத வீதம் அளவில் பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் ஒருநாட்டில் அவர்களும் சமமாக பிரதிநிதித்துவம் கோருவது 'கோரிக்கையின்னை இலகுவாக தட்டிக் கழிப்பதற்கும், சிங்களமக்கள் மத்தியில் இனரீதியான பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கும் வழிசமைத்துவிடும். மாறாக சிறுபான்மையோர் பிரதேசங்களை வரையறுத்து அவ்விடங்களில் ஆட்சி அதிகாரத்தையும், மத்திய மட்டத்தில் அதற்கான பாதுகாப்பையுமே கோரியிருந்திருக்க வேண்டும். மக்களுக்கு தெரிந்த அரசியல் வார்த்தையில் கூறுவதாக இருந்தால் சமஸ்டி ஆட்சிக் கோரிக்கையை முன் வைத்திருக்க வேண்டும். கண்டிய சிங்களமக்கள் அதற்கான வாய்ப்பை கொடுத்த போதும் தமிழ்த் தலைமைகள் அதனைத் தவறவிட்டு விட்டன.

> "இந்தியருக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்ப்பதற்கு முன்வராதவர்கள் துரோகிகளே"
>
> - C.W.W. கன்னங்கரா

கண்டிய சிங்கள மக்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் ஒரு பகுதியினராக இருந்த போதும் தங்களைச் சிறுபான்மையினத்தவர்களாக கருதிக் கொண்டமையால் தங்களுடைய பிரதேசத்தில் பாதுகாப்பு கருதி 1920ம் ஆண்டில், "இன்றைய அரசியலும் கண்டியர்களின் உரிமைகளும்" என அவர்களால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் கண்டிய மாகாணங்களுக்கு

## முஸ்லீம்களையும் இந்திய வம்சாவழியினரையும் கூட ஒதுக்கிய டொனமூர் திட்டம் !

சுயாட்சி அமைப்பு தேவை என வற்புறுத்தினர். தொடர்ந்து வந்த சீர்திருத்தங்களின் போதும் அதனையே வலியுறுத்தினர். இக்கோரிக்கையின் பிரதான ஆதரவாளராக விளங்கிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா இதனை ஆதரித்து பத்திரிகைகளில் பல கட்டுரைகளையும் எழுதியிருந்தார். 1926ம் ஆண்டில் இது தொடர்பான இவரது கட்டுரை "சிலோன் மோர்னிங்ஸ்ரார்" பத்திரிகையில் எழுதுவதற்கு புறம்பாக இதனை ஆதரித்து பிரச்சாரக் கூட்டங்களையும் நடாத்தியிருந்தார். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திலும் இது தொடர்பான கூட்டங்களை நடாத்தியிருந்தார். ஆனால் தமிழ்த் தலைமைகள் இதனை ஏறெடுத்தும் பார்க்காமல் விட்டதோடு அதற்கு கண்டனங்களையும் தெரிவித்திருந்தன. தமது பொருளாதார நலன்கள் கொழும்பை மையமாகக் கொண்டிருந்ததினாலேயே இவர்கள் இக்கோரிக்கையில் கவனம் செலுத்தவில்லை. இவர்கள் இதனை ஆதரிக்காததால் டொனமூர் குழுவினருக்கு அக்கோரிக்கையைத் தட்டிக்கழிப்பதும் இலகுவானதாக இருந்தது.

### டொனமூர் குழுவினரின் சிபார்சுகளும் விளைவுகளும்:

டொனமூர் குழுவினர் பெரும்பான்மையினத்தவர்களின் கோரிக்கைகளை புறக்கணிக்க விரும்பாமல் அவர்களுக்கு சார்பாகவே சிபார்சுகளை முன்வைத்தனர் என்பதை முன்னரே பார்த்தோம். இச்சிபார்சுகள் சிறுபான்மை இனங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான வாய்ப்புகளையும், ஓரளவு பொறுப்பாட்சியையாவது பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் அவர்களுக்கு கொடுத்திருந்தன.

இதனாலேயே டொனமூர் அரசியல் திட்டம் சிங்களவர்களுக்கு கிடைத்த எதிர்பாராத அதிர்ஷ்டம் என ஜி.ஜி. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

இத்திட்டம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றவும், அமுல்படுத்தவும் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கியது.

இந்தவகையில் டொனமூர் சிபார்சுகளில் மூன்று விடயங்கள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு பாதகமானதாக இருந்ததோடு பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பேரினவாதத்தை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புகளையும் கொடுத்திருந்தது.

இதில் முதலாவது சிறுபான்மை இனத்தவர்களில் ஒரு பிரிவினராக இருந்த இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமை கட்டுப்படுத்தப்பட்டமையாகும்.

டொனமூர் குழுவினர் சர்வஜன வாக்குரிமையை சிபார்சு செய்த போது இதனூடாக இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதை பெரும்பான்மை இனத்தவர்கள் விரும்பவில்லை. இதனால் சிங்களத் தலைவர்கள் இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதை காரசாரமாகக் கண்டித்தனர். இது தொடர்பாக சட்டசபையில் விவாதம் நடைபெற்ற போது காரசாரமான கண்டனங்களை தெரிவித்திருந்தனர். அக்கண்டனங்கள் அனைத்தும் இனவாத தொனியிலேயே காணப்பட்டன.

டி.எஸ்.சேனநாயக்கா இதுபற்றிப் பேசும் போது: இந்தியர் பெரிய நாட்டைப் பெற்றிருக்கின்றார்கள். சிங்களவர்களுக்கு இச்சிறிய நிலமே உள்ளது. இதனை இந்தியர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும்" என்றார்.

பிரான்சீஸ் மொலரே என்பவர், 'இந்தியர்கள் வாக்குரிமை பெற்றால் லிட்டனின் தேயிலைத் தோட்டம் எனப் பெயர் பெற்ற இலங்கை எதிர்காலத்தில் இந்திய ஆலமரம் என அழைக்கப்படலாம்" என்றார்.

சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்காரா இன்னும் ஒருபடிமேலே சென்று "இந்தியருக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்க்க முன்வராதவர்கள் நாட்டின் துரோகிகளாக கருதப்பட வேண்டும்" எனக்குறிப்பிட்டார்.

சிங்கள தலைவர்களின் இவ்வாறான எதிர்ப்பினால் டொனமூர் திட்டத்தையே இவர்கள் புறக்கணித்து விடுவார்கள் என டொனமூர் குழுவினர் அஞ்சி இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வர முடிவு செய்தனர். இதன்படி இந்திய வம்சாவழியினரைப் பொறுத்தவரை குறைந்தது ஐந்து வருடமாவது இலங்கையில் தொடர்ச்சியாக வசிக்காவிட்டால் அவர்களுக்கு வாக்குரிமை இல்லை எனக்கூறப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் தமது குடும்பத்தவர்களையும் உறவினர்களையும் பார்ப்பதற்கு இந்தியா சென்றுவரும் வழக்கத்தினை பலர் கொண்டிருந்தனர். இவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை மறுக்கப்பட்டது. இந்நிலைமை இந்திய வம்சாவழியினருக்கான பிரதிநிதித்துவ எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்தது.

1931ம் ஆண்டு தேர்தலில் கண்டியச் சிங்களவர்கள் மத்திய மாகாணத்தில் 43வீதமாகவும் ஊவா மாகாணத்தில் 53.5வீதமாகவும் இருந்து 10 உறுப்பினர்களைப் பெற்றிருந்தனர். ஆனால் இந்திய வம்சாவழியினர் மத்திய மாகாணத்தில் 40 வீதமாகவும் ஊவா மாகாணத்தில் 34.5 வீதமாகவும் இருந்த போதும் கூட 2 உறுப்பினர்களையே பெற்றிருந்தனர். தலவாக்கலை தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எல்.பி.வைத்திலிங்கமும், ஹட்டன் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பெரி-சுந்தரமுமே இந்தியர்களின் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொண்ட இருவருமாவர்.

டொனமூர் சிபார்சுகளில் இரண்டாவது பாதகமான விடயம் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் ஆகும். எற்கனவே 1920 களில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட போதே சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவத்தில் வீழ்ச்சி காணப்பட்டது. எனினும் இனவாரிப் பிரதிநிதித்துவமும் அறிமுகப்படுத்தப் பட்டதால் ஒரு சமநிலை காணப்பட்டது. டொனமூர் அரசியல் திட்டத்தில் முழுமையாகவே பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம் காணப்பட்டதால் சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவத்தில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. 1931ம் ஆண்டு தேர்தலில் பெரும்பான்மை இனத்தவர்கள் 38பேர் தெரிவு செய்யப்பட சிறுபான்மை இனத்தவர்களிலிருந்து 6 பேரே தெரிவு செய்யப்பட்டனர். இலங்கைத் தமிழர்-3, இந்தியத்தமிழர்-2, முஸ்லீம்- 1 என்றவாறே அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (யாழ்ப்பாணத்தில் தேர்தல் பகிஸ்கரிக்கப்பட்டதால் 4 தமிழர்கள் தெரிவு செய்யப்படவில்லை) 1936ம் ஆண்டு தேர்தலில் 11 பேர் சிறுபான்மை இனத்தவர்களின் சார்பில் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கைத் தமிழர்- 8, இந்தியத் தமிழர்- 2, முஸ்லீம்- 1 என்றவகையில் அவர்கள் காணப்பட்டனர்.

உண்மையில் சனத்தொகை வீதாசாரத்தின்படி பார்த்தால் கூட 17 பிரதிநிதித்துவம் சிறுபான்மையோருக்கு கிடைத்திருக்க வேண்டும். ஏனெனில் அன்றைய காலகட்டத்தில் சிறுபான்மையினத்தவர்கள் 36 வீதத்தினர் நாட்டில் இருந்தனர். ஆனால் 11 பிரதிநிதித்துவம் மட்டுமே கிடைத்தது. இந்தியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமையும், சிங்களவர்களுக்கு சார்பாக தொகுதிகள் பிரிக்கப்பட்டமையுமே இதற்கு காரணங்களாகும். இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லீம்களும் இந்திய வம்சாவழியினருமே ஆவர். முஸ்லீம்கள் அப்போது மொத்த சனத்தொகையில் 10.2 வீதமாக இருந்தனர். இதன்படி அவர்கள் ஐந்து பிரதிநிதித்துவத்தை பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஒரு பிரதிநிதித்துவத்தை மட்டுமே பெற்றிருந்தனர். இந்திய வம்சாவழியினர் அப்போது 13 வீதத்தவராக இருந்தனர். இதன்படி அவர்கள் 6 பிரதிநிதித்துவத்தை பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் 2 பிரதிநிதித்துவத்தையே பெற்றனர்


இவ்வாறு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அமைப்பு நிலையிலும் சிறுபான்மையோருக்கு பாதகமானதாகவே அமைந்தது. எனினும் இதன் ஆபத்தான அம்சம் அதன் அரசியற் தாற்பரியத்திலிருந்து பெரிதும் எழுச்சியடைந்தது.

மக்களின் வீதாசாரப்படி பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழுங்கு செய்திருந்தாலும் கூட அதன் அரசியற் தாற்பரியத்தின் மூலம் எழுகின்ற ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. இது எவ்வாறு டொனமூர் அரசியல் திட்டத்தில் இருந்தது என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

(வரும்)

செம்பாட்டான்

## பயத்திலிருந்து...



நேற்றிரவு முழுவதும்
பயமுறுத்திக் கொண்டிந்த
அந்த ஜன்னலோரத்து மரக்கிளைகளை
வெட்டியாயிற்று
அந்த இடத்தின்
வெறுமைக்குள்ளும்
ஏதோ இப்போ பயங்காட்டுது,

வானம் கறுப்பாகி
அழுது கொண்டிருக்க
குளிர்காற்றில்
நடுக்கம் வேறு

இன்னும் திரும்பாத
'ரூம்மெட்' டும்
எப்போதாவது வருவான்

நான்
பயம்வராதபோது
நம்பிக்கையோடு விழித்திருக்கிறேன்
தனிமையும், இருட்டும்
என்னைப் பயங்காட்டத்தொடங்குகையில்
எதையாவது எழுதத் தொடங்குகிறேன்
பயத்தில்
அது ஒரு கவிதையாக
முடிந்து போகிறது!

-எம்கேஎம்ஷகீப்.

30. 05. 1994

நன்றி - நூலகத்திட்டம்



# குயில்களும் கூடுகளும்



**கலைச்செல்வன்**

எந்த முட்டாள் சிகரெட்டை அணைக்க மறந்து போய் படுக்கைக்குப் போனானோ தெரியவில்லை. அந்த விடிந்தும் விடியாத வேளையில் பேரோசை கிளப்பிக் கொண்டு போன 'பொம்பியே'யின் (தீய ணைக்கும் படை) சத்தத்தால்தான் பரமலிங்கம் தூக் கம் கலைந்தார் என்றில்லை. அவர் எப்போதோ விழித்து விட்டிருந்தார். நினைவில் அவரது தாயின் கடிதம் வயலின் வாசித்துக் கொண்டிருந்தது. அவ ரோகண லயத்தில்.

''தம்பி பரமு, காசு கழஞ்சி கையிலை இல்லை; உன் னைத்தான்ரா நம்பியிருக்கிறன்; நான் சாகும் முன் னம் ஒருக்கா உன்னைப் பார்க்க ஆசை. முடிஞ்சா வந்திட்டுப் போடாமோனை.''

பரமலிங்கம் பலதட்வை ஊருக்குப் போய்த் தாயைப் பார்த்து விட்டுவர முயற்சித்தார் தான். அவர் கையி லைய்யும் காசு கழஞ்சு இல்லை. வயசு வளர முன்னம் நஞ்சை விழுங்கி நரையும் விருந்திட்டுது. ஏதோ இருக்கிறதைக் கொண்டாவது போய்வருவம் என் றாலும் இயந்திர மனிதர்கள் நடமாடும் நாடு என்று நெஞ்சில் ஒரு பிசாசுப்பயம் ஏறுகின்றது.

ஒன்றும் வேண்டாம் போகட்டும், அம்மா ஊரில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பதற்கா வது ஏதாவது அனுப்பிக் கொண்டிருப்பதே போதும் என்று அங்கலாச்ச மனசுக்கு அறைந்து ஒரு பூட்டுப் போட்டுப் பூட்டிவிட்டார். அதற்குள் அம்மா அந்த மருமோனை அங்கை கூப்பிடு, இந்த மருமோனை இஞ்ச கூப்பிடு. இருந்தா இதுகளும் இல்லாமல் போயிடும் என்று எழுதிக் கொண்டுதான் இருக்கிறா. எப்படியாவது இன்றைக்கு காசு அனுப்ப வேண்டும் என்ற தன் முடிவுக்கு பெருமூச்சு முத்தாய்ப்பு வைத் துவிட்டு மங்களம் பக்கம் திரும்பினார். மங்களம் எப்போதோ எழும்பியிருக்க வேண்டும். முகட் டைப் பார்த்துக் கண்ண்ண அடிக்கடி வெட்டிக் கொண்டிருந்தாள். ''உனக்கென்ன யோசனை?'' சற்று செருமிக் கொண்டு கேட்டார்.

எப்போதும் பொறுப்பும் யோசனையும் ஆம்பிளை யளுக்கு மட்டும்தான் வரும் என்ற macho எண்ணம் பதினைந்து வருடகால பாரிஸ் சீவியத்தைப் பண் ணிப்பார் என்றது.

''இல்லை இன்றைக்கு சுபாங்கியின் பிறந்த நாள் எல்லோ?'' மெல்லிய உவகை முகத்தில் மின்னியது. ம்..கூட்டிய பரமலிங்கம் எதுவும் பேசவில்லை. ''அ வள் இன்று வருவாளா?''

''ம்...வருவாள்'' அவர் தன் மகளைப் பற்றி நிறை யவே நினைத்துக் கொண்டாலும் எதையும் மங்களத் தோடு பெரிதாகப் பகிர்ந்து கொள்வதில்லை. மக ளைப்பற்றி எது கதைத்தாலும் இறுதியில் தான் அழு வதோடுதான் கதைமுடியும் என்பதால் மங்களமும் பெரிதாக ஒன்றும் எதிர்பார்ப்பதும் இல்லை.

நாங்கள் அக்காலத்து ஆட்கள். பிள்ளைகள் இக்கா லத்துப் பிள்ளைகள்.

எங்கள் நாடு இலங்கை, பிள்ளை பிரான்ஸ்.

நாங்கள் தமிழ்(?) கலாசாரம், பிள்ளை பிரஞ்சுக் கலாசாரம்.

நாங்கள் தமிழ், பிள்ளை பிரெஞ்ஷ். இது பரமலிங்கத் தின் விவாதம்

என்னதான் இருந்தாலும் பிள்ளை எங்கட பிள்ளை. எங்களுக்கு என்றொரு கலாசாரம் இருக்கு. அதில தான் வளர வேணும். பிள்ளை, கலாசாரத்தின் பிள்ளை. இது மங்களம் பக்கம்.

இந்த விவாதங்களுக்குள் எப்பவும் சுபாங்கி அகப்ப டவே இல்லை. தமிழுக்காகவோ - கலாசாரத்திற்காகவோ, அக்காலத்திற்கோ இக்காலத் திற்கோ எதிலும் அவளுக்கு அக்கறையில்லை. அந்த லிஸ்ரில் அம்மா அப்பாவும் அடக்கம்.

மங்களம் கட்டிலைவிட்டு எழுந்து போய் விட்டாள். அவள் தன் வழமையான சம்பளமில்லாத வேலை யைத் தொடங்கிவிட்டாள் என்பது குசினிச் சத்தத் தில் தெரிந்தது.

பரமலிங்கத்திற்கு எழும்ப மனமில்லை. இரண்டு தாய்களும் சுற்றிச் சுற்றி, மாறி மாறிக் கயிறிழுத்தனர். 'உன்னை நம்பித்தான்ரா இருக்கிறன்' -அம்மா இடையிடை அக்கா தங்கைகள்.

''பிள்ளையை இப்படியே விட்டால் நாளைக்கு நாங் கள் யாரை நம்பியிருக்கிறது'' -மங்களம்.

'நான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறன்.'

'ம்....இப்பவே பொண்டிபபோனியள் இனி யெங்கை!

தன்னை வித்து தமக்கைக்கும் கழுத்தில் மாட்டி நாலு வருஷம். இதற்கிடையில் மங்களத்தின் மடியில் சுபாங்கி.

எழுபத்தியேழுக் கலவரம்.

சுற்றம் சூழ உள்ள இளசுகளைப் போல் இயந்திரம் தின்ன பரமலிங்கம் பிரான்ஸுக்கு வந்தவர். வந்த வர் உழைக்க என்று சொல்லுறதை விட மற்ற இரு தங்கைகளையும் பிடிச்சுக் கொடுக்க வந்தவர் என்ப துதான் அதிகப் பொருத்தம். சின்ன வயசிலேயே தேப்பனைத்திண்டிட்டு ஒவ்வொரு கவளம் வாயில் போடேக்கையும் 'மூன்று குமரடா' என்ற தாயின் முனகலோடு வளர்ந்தவர்.

வந்ததுதான் வந்தவர், தூளோடு வந்தாரே! அப்படி வந்தவர்கள் எல்லாம் அப்பவே வீடும் வாங்கி..... பரமலிங்கம் பன்னிரண்டு பேருடன் * கெத்தை (Gaite)யில் தங்கும் பாக்கியம்தான்.....

அது ஒரு தொடர் மாடிக்கட்டிடம். எந்த நேரத்திலும் இடிந்து விழலாம் மாதிரி!

தங்கியிருந்த எல்லாருமே 'ஆண்ட பரம்பரை'யின் வாரிசுள்! எல்லாருக்குமாகக் கீழ் மாடியில் ஒரே யோரு மலசலகூடம். காலமை கக்கூசுசடியில் இவர் களுக்காத் தண்ணீர் போத்தல்கள் கியூவில் தவமிருக் கும் நிலைமை. குடியிருந்த கட்டடத்தைக் 'கொண் டெம்' பண்ணி குண்டிக்கு அலவாங்கு கொடுத்துத் தெண்டியும் சனங்கள் எழும்பவில்லை.

'எலக்றிசிற்றி கட்' பண்ணி நடு அறையுக்கை பென் னம் பெரிய ஓட்டையள் போட்டும் ம்....ஊம். எங்கை போறது?

வீட்டுக்கு வீடு வாசற்படி -எவன் வீட்டுக்குப் போனாலும், அவன் அடுப்படியில் தலைவைக்கி றான்-இவன் கக்கூசுக்குள் கால் போடுகிறான். இப்ப டித்தான் இஞ்சை படுத்தெழும்புறாங்கள் என்று குந் தியிருந்து கோப்பி குடிக்கவும் சங்கடப்படுத்தி அனுப்பிப் போடுவாங்கள். வேறயெங்கை போறது. வேலை தேடப் போறது. பசிச்சா சுப்பமார்க்கெற்றுக் குள் சாமான் தேடுறமாதிரி எதையாவது கொறிச்சு coke கையும் குடிச்சிட்டு வெளியில வாறது. இப்படி யொருக்கா வருகிற போதுதான் எல்லாருடைய உடுப்பு பொக்கிஷங்கள் எல்லாம் அறையுக்கை இருக்கத்தக்கதாகவே பொலிசு கதவுக்கு கல்லடுக்கி மூடியே விட்டுப் போனது. அதோடை றோட்டுக்கு வந்தவர். தற்கொலை எண்ணம் கூடத் தலை நீட்டி யது. குசினிப்பொட்டுக்கை நாய் தலை நீட்டை யுக்கை தாயார் அங்கு மட்டையாலை அடிக்கிற மாதிரி, தாயில் இருந்து சுபாங்கி வரை எல்லாரு மாய்ச் சேர்ந்து தற்கொலைக்கு சணல் அடி. அவர்கள் எதிர்பார்ப்பு, வாழ்க்கை, கடவுள் எல்லாம் நிஜத்தில் நானே என்று மனசில் வைச்சிரம் காச்சி ஊற்றியவர் தான். இன்னும் அந்த வச்சிரம் பழுதாய்ப் போய்வி டவில்லை.

இடையில் வேண்டாம் இந்த பரி(சு)ஸ் கெட்ட வாழ்க்கை என்று நாட்டுக்குத் திரும்ப யோசித்த போது சுட்ட பன்றியைக்கூட இறந்த பின்பே கருக் கும் மனிதர்கள். மனிதர்களையே உயிருடன் கருக் கும் நிலைக்கு வளர்ந்திருந்தனர்.

பெடியன் வந்து இஞ்சை வேகவேணுமோ என நினைத்த தாய் -விசயம் இதுதான் என்று மங்களத் தையும் மகளையும் பிடிச்சு அனுப்பிவிட்டார். பதி னைஞ்சு வருசம். சிறைக்குள் இருந்த மாதிரி உழைச்சு உழைச்சு ஒரு மிச்சமும் இல்லை. சுபாங்கி மட்டும்....பார்த்தால் நெஞ்சில் ஒரு பெருமிதம் மிஞ் சும். அவ்வளவுதான்.

மங்களம் கோப்பியோடு வந்தாள்.

''இந்தக் கிழமை முழுக்க மகள் போன் பண்ண வில்லை. நீங்களாதல் ஒருக்கால் போன் பண்ணியி ருக்கிலாம்''

''ஏன் நீ பண்ணியிருக்கலாமே?....''

''இப்ப சொல்லுவியள். பேந்து அவளை ஏன் இடைஞ்சல் படுத்துகிறாய் என்பியள்''.

உண்மைதான். வளர்ந்த பிள்ளைகளுக்குப் பெற்றோ ருடன் கதைக்கப் பேசப் பெரிதாக எதுவும் இருப்ப தில்லை- ஆனால் இந்தப் பெற்றோருக்கு நிறைய வேதான் இருக்குமே- தன்பாட்டுக்கே நிறையக் கதைத்துக் கொண்டிருப்பார்கள்- பிள்ளைதான் முழு உலகமும் ஆகி.....

இரண்டு வரிக்கு மிஞ்சி அவளுடன் கதைக்க வெளிக்கிட்டால் ஏன் அம்மா அறுக்கிறீர்கள் என்று கேட்காத குறை, இனி அம்மா கொஞ்சம் நீட்டி நிமிர்த்தி, 'வேலைக்குப் போறியா? காசை என்ன செய்யிறாய்? -இரவு போன் பண்ணினேன் காணேல்ல''- என்றால்

''இது எல்லாம் என்சொந்த விசயம் இதையெல்லாம் ஏன் நீங்கள் கேட்கின்றீர்கள்'' என்ற கேள்வி வந்தா லும் வரலாம். அவள் வயசு அப்படி.

மங்களம் இதையெல்லாம் தாங்கிக் கொள்ள மாட் டாள். இதனால்தான் பரமலிங்கத்தார் அடிக்கடி போன் பண்ணுவதை விரும்பவில்லை. மங்களம் குசினிக்குள்ளேயே இருந்தாள். பரமலிங்கம் கோப் பிக் கப்போடு குசினிக்குள் நுழைந்த போது அந்த மாதிரி ஒரு சமையல் ஆயத்தமாகிக் கொண்டிருந் தது. ''இன்றைக்கு அம்மாவுக்கு காசு அனுப்ப வேணும். பாங்கிலை கிடக்கிறது காணுமோ தெரி யாது.''

முகம் கழுவியபடி முணு முணுத்த பரமலிங்கம்.

''சுபாங்கிக்குப் போன் பண்ணிக் கொஞ்சக் காசு கேட்டுப்பாருமன்'' என்றவர் உடனே

''வேண்டாம், அவளின் எடுப்புச் சாய்ப்புக்கே அவ ளின் சம்பளம் போதாது இதற்குள் நான் கேட்க! வேண்டாம் கிடக்கிறதை எப்படியும்.....''!

ரெலிபோன் மணியடித்தது. பரமலிங்கம் நகருமுன் மங்களம் ரிசிவரைத் தூக்கினாள். கதையில் சுபாங்கி தான் என்பது புலனானது. பறுவமாகிக் கதைத்தவள் தேய்பிறையாய் நழுவி சரி சரி என்ற முணமுணுப் போடு அமரவாசையாகி ரிசீவரை வைத்தாள்.

என்னவாம் என்பது போல் பார்த்தார் பரமலிங்கம்

''வேலைக்குப் போகிறாளாம் பின்னேரம் இஞ்சை வருவாளாம்''

''வாறாள் தானே பேந்தென்ன'' என்று முணுமுணுத் துக் கொண்டாலும் பரமலிங்கத்திற்கு மங்களத்தின் நிலை விளங்காமல் இல்லை.

''உதிலை பாங்கிற்கு ஒருக்கா இறங்கியிட்டு வாறன் '' பரமலிங்கம் படியிறங்கினார். தாயும் மகளும் வந்த போதும் அவர் இப்படியொரு ஆறாம் மாடி யில்தான் இருந்தார். அது ஒரு குஞ்சு அறை. பதி னைந்து சதுரமீற்றரும் தேறாது. குசினி குளியலெல் லாம் அதற்குள்தான். மங்களம் சுபாங்கியை வளர்க்க மிகவும் கஷ்ரப்பட்டார். அவளுக்கும் எட்டு வயசுவர இந்த வீட்டுக்கு வந்தார்கள்.

தலையை நீட்டிப்பின்ன கழுத்தோடு வெட்டு என்று தொடங்கிய சண்டை, சங்கீதம் பழக ஜாஸ் (jazz) பழகி, வீணை பழக கிற்றார் பழகி பரதநாட்டியம் பழக டிஸ்கோ பழகி நீண்டது.

மங்களமும் ''லா சப்பெலில்' (la Chappelle) எத்த னையோ சேலைகள் வேண்டிப்பார்த்தாள். அவள் ஒரு நாள் கூடக் கட்டிப்பார்த்ததில்லை. மங்களம் எவ்வளவோ செய்து பார்த்தும் அவளிடம் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பைக் கண்டு பிடிக்கவும் முடிய வில்லை. இறுதியில் இந்தச் சண்டை அப்பா அம்மா ஒருநாட்டுப்புறத்தாக்கள் என்று கருதத்தான் வைத் தது.

அவள் விரும்பியதெல்லாம் செய்து கொடுக்க முடிந் தவரை கஷ்ரப்பட்டார் பரமலிங்கம்.

அவளைச் சந்தோசப்படுத்த வேண்டும் என்ற நோக் கம் மட்டுமல்ல, பிரெஞ்சு மொழியும் பிரெஞ்சு வாழ்க்கை முறையையும் தெரியாப் பாமரத்தனமும் தான். மகள் கேட்பதெல்லாம்சரி பிழைக்கப்பால்

''பிரெஞ்சு பிள்ளைகள் இப்படித்தான் இருப்பார்க ளாம்'' என்று விட்டு விட்டார். பிள்ளையும் வளர பிரச்சினைகளும் வளர்ந்தன. பிரெஞ்சில் படித்து வளர்வதால் தமிழில் சரளமாகப் பேசக் கஷ்டப் பட் டாள். உற்சாகமாக இருக்கும் போதும் உணர்ச்சி வசப்படும் போதும் பிரெஞ்சில் கதைத்தாள். அப்பர் அம்மாவிற்கு விளங்குவதில்லை என்பதால் நாள டைவில் கதைப்பதும் குறைந்து விட்டது. ஒரு வகை ஊமை உறவு. ஊமை வாழ்க்கை. வெளியில் சென் றால் நண்பர்களை வீட்டுக்கு கூடிவர முடியவில்லை. 'பூபெல்' தளபாடங்களில் நிரம்பியது தான் தன் வீடு என்ற தாழ்வு மனப்பான்மையை விட, அப்பர் அம் மாவின் பிரெஞ்சுக் கடலில் அவள் தற்கொலை செய்து கொள்வாள்.

இதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொண்ட பரமலிங்கம் ஒருநாள் மங்களத்திற்கு சொல்லிக் கொண்டார். ''ஊரில எங்களுக்கு ஆயி ரம் உறவுகள். அண்ணன் தம்பி மச்சான் -மச்சாள் சித்தப்பா-பெரியப்பா, மாமா-மாமி... உரிமை கொண்டாட ஊரெல்லாம் உறவுகள். அவளுக்கு யார்? இங்கே அவளுக்கு நல்ல நண்பர்கள்தான் உறவுகள். அதற்கு நாம் ஒரு போதும் இடைஞ்சலாக இருக்கக்கூடாது.

வயசும் பதினாறாத ஒரு 'கொப்பனும்' நெருக்கமா னது. வெள்ளி பகல் நீண்டது. சில இரவுகளுக்கும் வீடு இல்லாமல் போனது. பரமலிங்கத்தாரும் எவ்வ ளவோ சொல்லிப்பார்த்தார். மங்களமும் மன்றாடிப் பார்த்தாள். அவர்களைப் பொறுத்தவரை கற்புடன் ஒரு கலியாணம் காட்சியை பார்த்து விட வேண்டும் என்ற ஆவல்தான். சுபாங்கி முடிவாகச் சொல்லி விட்டாள்.

''நான் உங்களை எல்லோருக்கும் மேலாக நேசிக் கின்றேன். அதை விட என் சுதந்திரம், என் சந்தோ ஷத்திற்கும் ஏன் உங்கள் சந்தோஷத்திற்கும் மிக முக் கியமானது. நானே ஒரு நல்ல துணையை உருவாக் குகின்றேன். நீங்கள் தயவு செய்து இடைஞ்சல் செய் யாதீர்கள்.''

மங்களம் இதற்கு மிஞ்சி மூச்சும் காட்டவில்லை. பரமலிங்கமும் அடங்கிவிட்டார், சற்று நாட்களுக்கு முன் சார்சலில் (Sarcelles) நடந்த அந்தச் சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. மாடி வீட்டிற்குள் அடக்கி வைக்க முனைந்தால் வெளியில் பாய்ந்து கோமா வில் இருக்கும் அந்தப் பதினெட்டு வயதுப் பெண்.

இரண்டு வருஷங்கள் பாரிசில் இருந்து தூர உள்ள யூனிவர்சிற்றியில் இருந்தாள். பாரிஸ் வந்ததும் தன் 'கொப்பன்' உடன் தங்கிவிட்டாள். பரமலிங்கத்தார் நூலில் தொங்கும் உறவு அறுந்து போகக் கூடாது என்று அவள் இஷ்டப்படியே விட்டு விட்டார் அவர். புறம்பாக இருந்தாளேயொழிய மற்றும் படி அவளுக்குத் தங்கள் மேல் இருந்த பாசம் குறைந்த மாதிரித் தெரியவில்லை. ஆரம்பத்தில் அடிக்கடி வந் தாள். இப்போது இடையிடையே வருகிறாள். வரு கிற போது தன்வீடு மாதிரியே எல்லாம் பண்ணிக் கொண்டு சில வேளைகளில் இங்கேயே தங்கியும் விடுகிறாள்.

எல்லாம் நாம் ஒரு குடும்பம் மாதிரியே காட்டிக் கொண்டாலும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை இடைஞ்சல் செய்வதில்லை அவ்வளவுதான். தாய் பிள்ளை உறவின் முழுப்பரி மாணங்களும் இவ்வளவுதான் என்பது போலாகி விட்டது. பரமலிங்கம் வீடு திரும்பிய போது அந்த மாதிரிச் சமையல் அரைகுறையாகியிருந்தது.

அது இரவுக்கு இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

மாலை மகள் வந்தாள். பெரிய அழகிய பூங் கொத்தை தாயிடம் கொடுத்தாள். இருவரையும் ஆசையாகக் கொஞ்சினாள். அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்று தாய் செய்து வைத்திருந்த 'கட்லற் 'றை அடிக்கடி சாப்பிட்டாள். அவள் முகத்தின் மலர் வையே தான் பெற்ற பாக்கியம் என்று அவளையே வலம் வந்து கொண்டிருந்தாள் மங்களம்.

பரமலிங்கம் வாங்கி வந்த 'கத்தோ' வை வெட்டி ஒரு கோப்பியும் குடித்த கையுடன் சுபாங்கி எழுந்தாள். ''இரவு கொப்பனோடு ரெஸ் ரோறன்றுக்கு போகி றேன்'' என்று மிக இயல்பாகவே சொல்லி விட்டு மீண்டும் மீண்டும் அழுத்திக் கொஞ்சி

''நீங்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்'' என்று வாழ்த்திப் போய் விட்டாள்.

ஆசையாகச் செய்த புரியாணி மேசையில் அலட்சிய மாகச் சிரித்தாலும், விக்கித்துப் போய் நின்ற மங்க ளத்தை தாங்கி அணைத்துக் கொண்டு உள்ளே போகிறாரே பரமலிங்கம்!

ஓ! அவள் மீண்டும் வருவாள்!

**சார்செல்- Sarcelles:**
**பாரிசின் நகர்ப் பகுதிகளில் ஒன்று. அல்ஜீரியர்கள், ஆபி ரிக்கர்கள், இலங்கைத் தமிழர்கள் போன்ற வெளிநாட்ட வர்ள் செறிந்து வாழும் பகுதி.**

**லா சப்பெல் La Chapelle:**
**பாரிஸ் நகரின் ஒரு பகுதி. தமிழர்தெரு என்று கூறும் அளவுக்கு சகல விதமான பொருட்களையும் விற்பனை செய்யும் தமிழ்க்கடைகள் நிறைய உண்டு.**

**கெத்தே- Gaifte:**
**இப்பெயரில் ஒரு மெட்ரோ க்ரேசன் உண்டு. இந்தப் பழைய தொடர் மாடிக்கட்டிடங்கள் இடிக்கப்பட்டு இப் போது அந்த இடத்தில் புதிய அழகிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.**

**கத்தோ -Cake-கேக்**
**கொப்பன்- Copain -காதலன் (Boy friend)**
**பூபெல் -Poubelle- குப்பைவாளி**

நன்றி: அ.ஆ.இ சிறுகதைச்சிறப்பிதழ்

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்

## தொழிற்சங்கங்களின் தோற்றம்



வி. ரி. தர்மலிங்கம்

சரிநிகருக்காக சிறையிலிருந்து வி. ரி. தர்மலிங்கம் அவர்கள் எழுதிய "மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புக்கள்" என்ற கட்டுரை தொடரை சரிநிகர் கடந்த இதழில் பிரசுரிக்க ஆரம்பித்திருந்தது. இது இரண்டாவது பகுதி.

ஆனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறையில் அடைத்து வைத்த அவரை அரசு இம்மாதம் 6ஆந் திகதி பிணையில் விடுதலை செய்திருக்கிறது.

அவரது விடுதலையை சரிநிகர் மகிழ்வுடன் வரவேற்கிறது.

ஆ-ர்

### 'மலையக சமூகம் உருவாகின்றது''

நில பிரபுத்துவ சமூக அமைப்பில் தென்னிந்திய மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருந்தனர். காலச்சூழ்ச்சிநிலையால் வறுமை அவர்களை வாட்டியது. அந்த வறுமைக்கு ஈடுகொடுக்க முடியாத மக்கள் தவித்து எங்கு வாழ வழி இருக்கின்றதோ அங்கு சென்று உழைத்து தங்களைக் காத்துக் கொள்ள தயாராய் இருந்தனர். நிலப்பிரபுகட்கு சேவகம் செய்து கொண்டும் வயல்களில் கூலி வேலைகள் செய்து கொண்டும் அரைப்பட்டினியாய் வாழ்ந்து வந்த இவர்களின் வாழ்க்கையில் வெள்ளையர்களின் தரகர்களான கங்காணிமாரின் அழைப்பு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

இலங்கையின் மத்திய மலைநாட்டின் வரலாற்றிலேயே முதன் முதல்காலடி எடுத்து வைத்த இவர்கள் காடுகளை அழித்தனர். மிருகங்கள் வாழ்ந்த பிரதேசங்களை அழித்து மக்கள் வாழும் பிரதேசங்களாக உருவாக்கினர். காற்று, மழை நோய் நொடிகளை எதிர்த்து, காலநேரம் பார்க்காது உழைத்தனர். துரைமாரிடம் நற்பெயர் வாங்குவதற்காக கங்காணிமார், ஒருநாளைக்கு 12 மணித்தியாலங்கள் கூட வேலை வாங்கினர். ஆண்களும் பெண்களும் வேதனையுடன் வேலை செய்து வாயில்லாப் பூச்சிகளாக வாழ்ந்தனர் என்பதை அக்கால நாட்டுப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியாவில் பட்டினியால் வாடும் தங்களின் குடும்பங்களைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையுடன் நல்வாழ்வு நாடி ஓடோடி வந்தனர். தங்கள் குடும்பங்களை காப்பதற்காக வேதனைகளையும் மறந்து வேலை செய்தனர். வந்தவர்கள் திறந்த வெளிச்சிறைக்குள் அடைபட்டு பணயக் கைதிகளாக வாழ்ந்தனர். தங்களை அழைத்து வந்த கங்காணிமாரிடம் தாங்கள் அடிமைப் பட்டுவிட்டதை உணர்ந்தனர். அவர்களின் உழைப்பிற்கு கூலியாக உணவுப் பொருட்களும் லயக் காம்பராவும் கங்காணிமார் மூலம் வழங்கினர். சம்பளம் கையில் கிடைப்பதற்குப் பதிலாக கடன் என்று ஏட்டில் எழுதும் நிலையே இருந்தது. கங்காணியின் உத்தரவு இல்லாமல் தோட்டத்தை விட்டு வெளியேற முடியாத நிலை உருவாக்கப்பட்டது. உழைக்க வந்தவர்கள் திரும்பிச் செல்ல முடியாதவாறு ஊமைகளாக்கப்பட்டனர். வேதனைகளை சகித்துக் கொண்டு வாழும் நிலைக்கு தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு வாழ்ந்தனர்.

ஒரே வீட்டில் பலர் குடும்பம் நடத்தும் நிலையில், போதிய வைத்திய வசதி இன்றி ''மலேரியா''வினால் பலர் மாண்டனர். தூண்டிலில் அகப்பட்ட மீனைப்போல் கங்காணிமாரின் பிடியில் அகப்பட்டு மக்கள் துடிதுடித்தனர். இவர்களின் நாடிபிடித்துப் பார்த்துக் காப்போர் அன்று யாரும் இருக்கவில்லை. பல வழிகளிலும் துண்டிக்கப்பட்டு, தனிமைப்படுத்தி வைக்கப்பட்டனர்.

தோட்டத்துள் தனி ராச்சியமே நடைபெற்று நிருவாகத்திற்கு ஏற்றாற் போல் தொழில் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. தட்டிக்கேட்போர் இல்லாத காரணத்தினால் தோட்டத்துரையும் கங்காணிமாரும் இணைந்து இவர்களை வதைத்து வேலை வாங்கினர். மக்கள் பயந்து கொண்டே தங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தனர். கட்டிவைத்து சாட்டையால் அடித்து தண்டனை வழங்கினர்வெள்ளையர் மிருகங்களை அடக்கி வதைப்பது போல் வதைத்து வேலை வாங்கினர். பெண்கள் பாலியல் பலாத்காரம் மூலம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு மருட்சியுடன் வாழ்ந்தனர். தங்கள் உடலையே உருத்தெரியாமல் ஆக்கிக் கொண்டு உழைத்த இம் மக்களின் நல்வாழ்வைப்பற்றி எவரும் சிந்திக்கவில்லை. அவர்களின் உழைப்பினைக் கொள்ளையடிப்பதில் காட்டிய ஆர்வத்தினை அவர்களின் நல்வாழ்வைப்பற்றிச் சிந்திப்பதில் காட்டவில்லை. தோட்டத் தொழில் துறையோடு தொடர்புடைய ஒரு புதிய தொழிலாளர் சமூகம் உருவாகியது. இச்சமூகமே மலையக சமூகம் என்று நினைக்க உள்ளம் வேதனையால் துடிக்கின்றது.

### தொழிற் சங்கங்களின் தோற்றம்:-

லங்கையில் தோட்டங்கள் உருவாகியதால் முதன் முதல் தொழிலாள வர்க்கம் உருவாகியது. இதனையொட்டி துறைமுகத் தொழிலாளர்கள், அச்சுத் தொழிலாளர், ரெயில்வே தொழிலாளர்கள், நகர்ப்புறத்து பல துறைகளுக்குமுரிய தொழிலாளர்கள் உருவாகினர். தோட்டத் தொழிலாளர்கள் ஒரு கூட்டமாக ஒரே இடத்தில் அதிகமானோர் சேர்ந்து வாழக்கூடிய நிலை இருந்ததால் விரைவாக ஆங்கில நிர்வாகத்திற்கு எதிராக எதையும் செய்யக் கூடும் என்ற காரணத்தினால் அவர்களை தனிமைப்படுத்தி வைப்பதில் ஆங்கிலேயர் மிகவும் கவனமாக இருந்தனர். இதனால் தோட்டத் தொழிலாளர்கட்கும் மற்றைய தொழிலாளர்களுக்குமிடையே எவ்வித தொடர்பும் ஏற்படாமல் துண்டிக்கப்பட்டே வைக்கப்பட்டிருந்தனர். இதனால் இத்தொழிலாளர்கள் அறியாமையில் மூழ்கி வேதனையுடன் வாழ்ந்தனர். அதே வேளையில் நகர்ப்புறத் தொழிலாளர்கள் விழிப்படைத்தனர். நகர்ப்புறங்களில் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கட்கும் நிர்வாகத்திற்கும் முரண்பாடுகள் ஏற்பட்டன. அது தொடர்பான 'கிளர்ச்சிகள்' எழுந்தன. வேலை நிறுத்தப் போராட்டங்கள் தோன்றின. அவர்கள் நல்வாழ்வுக்கென அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தனர். தொழிலாளர்களின் தொழில் உரிமைக்காக போராடுவதற்கு தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

1893ம் ஆண்டில் முதன் முதலில் அச்சகத் தொழிலாளர்கள் தங்களின் தொழிற் சங்கத்தை உருவாக்கினர். தொழிலாளர் சமூகம் உருவாகி ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குள் நகர்ப்புறத் தொழிலாளர்கள் தங்களுக்கென தொழிற்சங்கங்களை உருவாக்கிக் கொண்டனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் ஏறத்தாழ 90 ஆண்டுகள் வரை தங்களைப்பற்றியோ, தங்கள் உரிமைகளைப்பற்றியோ சிந்திக்கத் துணியவில்லை.

இம்மக்களின் அவலநிலையைக் கண்டு, அன்று ஓர் உள்ளம் துடித்தது. 'இவர்களின் வேதனை நிறைந்த வாழ்வினைப்பற்றி' ஆங்காங்கே நடந்த கொடூர செயல்களைப்பற்றி இந்தியப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புவதன் மூலமும் தோட்டத் தொழிலாளர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறுவதன் மூலமும் அவர்கள் மத்தியில் அவ்வுள்ளம் நடமாடத் தொடங்கியது. தோட்டத்துரையும், கங்காணிமாரும், ஆங்கில அரசும் உருவாக்கி வைத்திருந்த இரும்புத்திரையை உடைத்துக் கொண்டு தோட்டத்துள் நுழைவது அவ்வளவு இலகுவான காரியமாக அமையவில்லை. அந்த இரும்புத் திரையை சம்மட்டியால் அடித்து உடைத்துக் கொண்டு தொழிலாளர் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும் நோக்கத்தோடு நுழைந்தார். அந்த துணிவுமிக்க வீரரை மக்கள் வரவேற்றனர். அவர் தான் திரு.கோ.நடேசய்யர் அவர்கள்.

### தோட்ட மக்களின் ஒளி விளக்கு:-

அடிமைகளாய், பஞ்சைகளாய், பராரிகளாய் தோட்டங்களில் வாழ்ந்து மடிந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில், ஓர் ஒளிவிளக்காக திரு.கோ.நடேசய்யர் தோன்றினார். இந்திய வம்சாவளி மக்கள் நலனில் தன் கவனத்தைச் செலுத்தியதன் மூலம் இலங்கையில் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். இவரை பெரிய கங்காணிமார் தங்களின் நலன்களுக்காக பயன்படுத்திக் கொள்ள மலைப்பிரதேசத்திற்கு அழைத்து வந்தனர்.

மலைத் தோட்டங்களில் மக்களின் அவலத்தை நேரில் கண்டு மனம் புழுங்கினார். இவர்களின் அவல நிலைக்கு தோட்டத்துரையும் பெரிய கங்காணிமாருமே காரண கர்த்தாக்கள் என்பதை உணர்ந்தார். நல்வாழ்வு தேடி வந்தவர்கள், வெறும் கூலிகளாக அல்லப்படுவதைக் கண்டு பொறுக்க முடியாமல் கலங்கினார்.

இந்திய வம்சாவளியினரின் நலன் காக்க ஏற்கனவே பல அமைப்புகள் உருவாகின. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் நலனைக்காக்க யாருமே முன்வரவில்லை. 1912 ம் ஆண்டில் **இலங்கை இந்திய சங்கம், இந்திய சங்கம்-** இலங்கை போன்ற அமைப்புகள் உருவாகி நகர்ப் புறத்தில் வாழ்ந்த மக்களின் நல்வாழ்வுக்கு உதவின. இந்த அமைப்புகள் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. இவர்கள் அவலநிலையை எடுத்துச் செல்ல நாதியில்லை. இந்த நிலையில்தான் திரு.கோ.நடேசய்யர் தோட்டத் தொழிலாளர்களின் சார்பாக குரல் எழுப்புவதற்கு 1922ம் ஆண்டில் திரு.ஏ.ஈ.குணசிங்க அவர்கள் அமைத்த **'உழைப்பாளர் சங்கத்துடன்'** இணைந்தார். அதில் உபதலைவர் பதவி வழங்கப்பட்டது. இதன் மூலம் தோட்டங்களில் தொழிற் சங்கத்தை அறிமுகப்படுத்தி தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைக்காக குரல் எழுப்பினார்.

அனாதையாக வாழ்ந்த மக்களை அரவணைத்து அவர்களின் நல்வாழ்விற்காக முழுமூச்சுடன் முனைந்தார். அரசியல் மூலம் மக்களின் நல் வாழ்விற்காக வழி வகுக்க முடியும் என்றார். ஆனால் அரசாங்கத்தையே ஆட்டிப்படைக்கும் சக்திவாய்ந்த தோட்டத்துரைமாரும் தோட்ட முதலாளிகளும் அக்காலத்தில் திகழ்ந்தனர். எனவே முதலில் தோட்டத்துரைமாருக்கு உதவியாகவும் அவர்களின் நிர்வாகத்திற்கு ஒரு தூணாகவும் நின்று தொழிலாளர்களைப் பல வழிகளிலும் வதைத்துக் கொண்டிருக்கும் பெரிய கங்காணிமார்களின் அதிகாரத்தை அழிக்க அத்திவாரமிட்டார். இவரின் காலத்திலேயே பெரிய கங்காணிமாரின் அதிகாரம் ஆட்டங்காணத் தொடங்கியது. பெரிய கங்காணிமார்களின் பரம்பரை, தோட்டங்களில் தொடர்ந்து கங்காணித்தனம் செய்ய முடியாதிருக்க சட்டத்தின் மூலம் வழிவகுத்தார்.

இவர் தோட்டத் தொழிலாளர் மீது பற்று வைத்திருந்ததினால் அநீதிகளைக் கண்டு சீறியெழுந்தார். தோட்டத்துரைமாருக்கும், பெரிய கங்காணிமாருக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். துரைமார், கங்காணிகள் மூலம் அவரைப் பழிவாங்கத் துடித்தனர்.

மக்களின் அறியாமையினாலும், துணிவின்மையாலும், ஏமாற்றுபவர்களைக் கண்டு மயங்கியமையினாலும் திரு.கோ.நடேசய்யரின் பல முயற்சிகள் வெற்றியடையவில்லை. இவரின் காலத்தில் உயர்வடைந்திருக்க வேண்டிய சமூகம் நல்லவைகளையும், தீயவைகளையும் எடைபோட்டு செயற்பட முடியாதவாறு அறியாமையில் மூழ்கியிருந்ததால் இவரின் முயற்சி தோல்வியைத் தழுவியது. அன்று அடைந்த தோல்வியை மீட்டுக் கொள்ள முடியாமல் இன்றும் மக்கள் அல்லல்படும் அவலத்தைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆங்கில அரசு 1924ல் உருவாக்கிய சட்ட நிருபண சபையில் அங்கத்துவம் பெற்று அங்கே தோட்டமக்களின் நல்வாழ்வுக்காக குரல் எழுப்பினார். இவர் சார்ந்திருந்த அமைப்பின் தலைமை இந்தியத் தொழிலாளர்கள் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டியதை எதிர்த்தார். இதனால் அந்த அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டார். வெளியேறியதும் தோட்டத் தொழிலாளர்களுக்காக **'இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் சங்க சம்மேளனம்'** என்ற தொழிற்சங்க அமைப்பை உருவாக்கினார். இந்த அமைப்பின் மூலம் தொழிலாளர் உரிமைக்காக நிர்வாகத்துடன் போராடினார். இவர் சிங்கமாகச் சீறியதைக் கண்டு துரைமார் நடுங்கினர். இவரின் அரசாங்க சபை அங்கத்துவம், தொழிலாளர்களின் அவல நிலையை அடிக்கடி ஆட்சியாளர்கட்கு எடுத்தியம்ப உறுதுணையாக இருந்தது. இவரின் முயற்சிகள் தொடரவில்லை. இவரின் மறைவு தொழிலாளரின் வாழ்வில் படர்ந்திருந்த இருளை அகற்றும் பணியில், தேக்கத்தை ஏற்படுத்தியது.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# நாலு வார்த்தை எழுதவிடு

## இலங்கைச் சிறப்பிதழ் -சுபமங்களா

சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் இலங்கைக்கு வந்து போன உடன் மே மாத இதழை இலங்கைச் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளார். வழமையாக அழகுடன் வெளிவருகிற அட்டை அமைப்பு இம்முறை 'கோழி கிளறியது' போல இருந்தது. கோமல் இங்கு வந்த போது அவருக்கு 'நெருக்கமாகி' இருந்த அனைவரினதும் புகைப்படங்களும் அட்டையில் இடம் பெற்றுள்ளது. பேரா.சிவத்தம்பியுடனான நேர்காணல் யாவற்றுக்கும் சிகரம் என சுபமங்களா நினைத்திருக்கிறது என்று தோன்றுகிறது.

இத்தகைய நேர்காணல்களில் ''சொன்னதொன்று; வந்ததொன்று'' போன்ற பிழைகளும், இடப்பிரச்சினை, ஆசிரியத்துவம் (Editing) போன்றவற்றால் ஏற்பட்டிருக்கக் கூடிய குறுக்கல், திரிபுகளுக்கான சாத்தியங்களையும் மனதில் கொண்டாலும் சில அடிப்படைக் 'குழறுபடி'களைப் பற்றி எழுத வேண்டியிருக்கிறது.

மகாகவி பற்றிக் குறிப்பிடும் போது பேராசிரியர் ''டானியல், டொமினிக் ஜீவா, முருகையன், ரகுநாதன் இவர்களைப் பற்றிப் பேசிய அளவுக்கு மகாகவியைப் பற்றிப் பேசவில்லை'' என்றும் ''மகாகவியை நாங்கள் புறக்கணித்ததாக எங்களுக்குத் தெரியாது'' என்றும் கூறுகிறார்.

ஈழத்தின் கவிதை வரலாற்றில் மகாகவியைத் தவிர்த்து கவிதை பற்றிப் பேச முடியாது. ஆனால் உண்மையில் கைலாசபதியும், சிவத்தம்பியும் மகாகவியை இருட்டடிப்பே செய்தனர். அது மட்டுமன்றி வாய்ப்பாட்டுத்தனமாக இடதுசாரி சுலோகங்களை முழங்கிய மற்றும் தம்முடன் சார்ந்த கவிஞர்களையும் இலக்கியதாரரையும் உயரத்தூக்கியும் வைத்தனர். இவர்களை மீறி வரலாறு முன்னே போய்விட்டபடியால் இப்போது சமாளிப்பு மனோபாவத்துடன் அமைதி காண முனைவதன் மூலம் இவற்றை மறந்துவிட முடியாது.

சிறுகதைகள் பற்றி வருகிற போது ''ரஞ்சகுமார் என்கிற பையனுடைய சிறுகதைகள் இக்காலகட்டத்தின் மாற்றங்களை அற்புதமாக எடுத்துக்காட்டுகிற வகையில் உள்ளது'' என்று சொல்கிறார். (அது என்ன ''பையன்'' என்கிற வாத்தியார்த்தனமான விளிப்பு?) ரஞ்சகுமார் என்கிற அற்புதம் திடீரெனத் தோன்றியதல்ல. மனம் போனபடி நாலு வார்த்தை கிறுக்க அவர் ஒரு பையனுமல்ல. ஒரு வளர்ச்சியின் இன்னொரு பரிமாணம் ரஞ்சகுமார். அவருக்கு முன் நந்தினி சேவியர், சாந்தன், அ.யேசுராசா, சட்டநாதன், உமா வரதராஜன், சிறிதரன் போன்றோர் இருக்கின்றனர். இவையும் உண்மையை மறைக்கிற செயல் தான்.

ஏனைய இனங்களை, அல்லது பிரதேசரீதியான வேறுபாட்டை இளைஞர் இயக்கங்கள் காட்டுவதில்லை என்று குறிப்பிடுகிறார். ''இந்த இளைஞர் இயக்கங்கள் அந்தக் கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டதாகக் காணமுடிகிறது'' என்கிறார். பேராசிரியர் யாழ்ப்பாணத்திலிருக்கிற போதுதான் முஸ்லீம் மக்கள் புலிகளால் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்டார்கள் என்கின்ற உண்மை பேராசிரியருக்கு எப்படித் தெரியாமல் போனது?

ஈழத்தின் நாடக அரங்க வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகிற போது தாசீசியஸைப்பற்றிப் பேராசிரியர் குறிப்பிடத் தவறி விடுகிறார். நாடகத்துறையைச் சார்ந்த பேராசிரியரே இத்தவறைச் செய்தால், சாமானியரைப் பற்றி என்ன சொல்ல? ஈழத்து நாடக அரங்க வளர்ச்சியை தாசீசியஸை விட்டு விட்டு எழுத முடியாது. தாசீசியஸ் பன்முக ஆளுமை கொண்டவர். கூத்தும் அவருக்குத் தெரியும். (கந்தன் கருணை, பொறுத்தது போதும்) மொழிபெயர்ப்பு நாடகத்திலும் முத்திரை பதித்தவர். (பிச்சை வேண்டாம்) கவிதை நாடகத்தை பரிசோதனையாகச் செய்து வெற்றி கண்டவர். (கோடை, புதியதொரு வீடு). ஈழத்துக்கவிதையில் மகாகவி எவ்வளவோ முக்கியமோ அதே போல ஈழத்து நாடக ஆக்க வரலாற்றில் தாசீசியஸ் முக்கியம் பெற்றவர்.

இத்தகைய தவறுகளைச் செய்து விட்டு ''நாங்கள் முன்னர் தவறு செய்து விட்டோம்'' என்று கூறுவது நியாயம் ஆகாது.

''இங்கே நடந்து கொண்டிருப்பது யுத்தம். தினம் தினம் எங்கள் இளைஞர்கள் இந்த மண்ணில் தங்கள் உயிரை விதைக்கிறார்கள். யுத்தத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று கருதப்படுபவர்களைத் தண்டிக்க வேண்டும் தானே?'' என்று ஒருவர் கூறியதை ஆசிரியர் தலையங்கத்தில் மேற்கோள்காட்டி விடுதலைப் புலிகளின் கருத்தை முன்வைக்கும் கோமல் மாற்றுக் கருத்துள்ளோரையும், புலிகளை விமர்சிப்பவர்களையும் கொன்று அல்லது நாட்டை விட்டு துரத்திய புலிகளின் கருத்தியலையும் நடைமுறையையும் கண்டிக்கும் மற்றைய பார்வையை முன்வைக்கத் தவறிவிடுகிறார். ஒரு கட்சி ஆட்சியும், தலைமை பற்றிய வீரவழிபாடும் பேச்சு எழுத்துச் சுதந்திரமும் இல்லாத யாழ்ப்பாணத்தில் குற்றவாளி யார், துரோகி யார் என்று தீர்மானிப்பதில் அராஜகம் தான் நிலவுகிறது என்பதை கோமல் லாவகமாக மறைத்து விடுகிறார்.

புதுவை இரத்தினதுரை பற்றி கோமல் குறிப்பிடுகிற போது ''அற்புதமான கவிஞர் அவர்.... பாரதியும் பாரதிதாசனும் இணைந்த சுவையான கலவை அவருடையது'' என்கிறார். இது ஒருவகையில் சரி தான்! பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிறகு தமிழ்க்கவிதை வேறு பல பரிமாணங்களாக வளர்ந்து விட்ட பிற்பாடும் ''பழைய'' படியே எழுதிக் கொண்டிருக்கிறார் புதுவை என்று தான் ஒருவேளை கோமல் சொல்கிறாரோ என்று தோன்றுகிறது. என்றாலும் புதுவை இரத்தினதுரையின் 'இருளிலிருந்து எழுக' கவிதையை வாசிக்கிற போது அற்புதத்தையும் காண்வில்லை; கலவையையும் காணவில்லை. அதே கோஷம் முன்னர்,

**''கஞ்சிக்கும் வழியின்றி**
**கட்டவொரு துணியின்றி**
**பிஞ்சுக் குழந்தைகளே**
**பேமென்றில் தூங்குகையில்...''**

என்று எழுதிய அதே கைகள் தான் இப்போதும்

**''எள்ளி நகைப்பவரை**
**ஏளனங்கள் செய்துவிட்டு**
**புள்ளியெனச் சுற்றும்**
**பூமியினை வெற்றி கொள்ளு...''**

என்று எழுதுகிறது. இரண்டிற்கும் பெரிய வித்தியாசமில்லை. முன்னது இடதுசாரி சுலோகம். பின்னையது தேசியவாத சுலோகம். முன்னது கொம்யூனிஸ்ட் கட்சிக்கு; பின்னையது புலிகளுக்கு.

நந்தினி சேவியர் இல்லையென்றால் சிறுகதையும் கையைக் கடித்திருக்கும். 'தொலைந்து போனவர்கள்' எனும் நந்தினி சேவியரின் சிறுகதை நன்றாயிருக்கிறது. முன்னரே வாசித்த கதைதான். பின்னர் சுபமங்களாவில் வாசிக்கிற போதும், இதமாயிருக்கிறது. ஒரு அழியுண்ட நகரைப் பற்றி, அதனை நினைவுகளில் லயித்து, ஏக்கப் பெருமூச்சு விடுகிற கதை. நந்தினி சேவியர் தனது இயல்பான, அழகான நடையால் கதைக்கு உருவம் கொடுக்கிறார்.

என்.சண்முகலிங்கனின் வீடுபேறு, மு.சிவலிங்கம் எழுதிய, 'என்னைப் பெத்த ஆத்தா' ஆகியன நல்ல சிறுகதைகள் எனக் கூறமுடியவில்லை. தேர்ந்த சுவைஞர்களுக்கு உணர்வையும் கதையையும் தொற்ற வைப்பதில் அவை தோல்வியுறுகின்றன..

சுபமங்களாவில் வந்த இலங்கைப் படைப்புகள் அவ்வளவு திருப்தியாக இல்லை. இலங்கை, யாழ்ப்பாணப் பயணங்கள் பற்றி இரண்டு தொடர்கட்டுரை 'கோமல் எழுதுகிறார். அதுபற்றிப் போகப் போக....

சூர்யா

# இலக்கியப் பாரத்துக்கு எத்தனை மண்டையோடுகள் தேவை?

ஈழத்தில் முற்போக்கு இலக்கியத்தின் பிதாமுகர்களில் ஒருவர் என்று வர்ணிக்கப்படுபவரும், கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக வெளி நாட்டுவாசியாக மாறிவிட்டவருமான எஸ்.பொ. அவர்கள் (எஸ்.பொன்னுத்துரை) தற்போது இலங்கை வந்துள்ளார். அவரது இலக்கிய நண்பர்கள் ஆங்காங்கே அவரை அழைத்து கருத்தரங்குகளை -ஒன்று கூடல்களை நடாத்திவருகிறார்கள்.

இம்மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'அறிவோர் கூடல்' அரங்கில் எஸ்.பொ.வுடன் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது.

'21ம் நூற்றாண்டில் புலம் பெயர்த்தோர் இலக்கியங்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு முன்னோடியாகத் திகழப் போகின்றன' என்று குறிப்பிட்ட எஸ்.பொ. அது வேரோடும் தன்னைப் பிணைத்துக் கொண்டு வெளிவரும் போதுதான் ஒரு நிறைவைப் பெறமுடியும் என்றும் அதன் ஓர் அம்சமாகவே தாம் இங்கு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் தாம் எழுதிக் கொண்டிருக்கும் நூல்களையும், வெளிவரவிருக்கும் நூல்களையும் பட்டியல் போட்டுக் காட்டினார். அத்துடன் அரங்கில் கூடியிருந்தவர்கள் எழுப்பிய வினாக்களுக்கும் அவர் விடைகள் அளித்தார். ஒரு சமயத்தில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் ஒரு தேர்ந்த படைப்பாளியாக இருந்தும் படைப்பு முயற்சிகளில் ஈடுபடும் தாங்கள் இலங்கைத் தமிழரது சமகாலப் போராட்ட வரலாற்றை அடிப்படையாக வைத்து ஒரு வரலாற்றுப் படைப்பை ஏன் எழுதவில்லை? அது அடுத்தடுத்த தலை முறைகளுக்கும் ஒரு பதிவாக அமையுமல்லவா என்று கேட்டார்.

அதற்கு ஒரு அசட்டுச் சிரிப்போடு பதில் சொல்ல வந்த எஸ்.பொ.''அது ஒரு சிக்கலான விசயம். எதைச் சொன்னாலும் ஒரு பக்கத்தால் பிரச்சினை தான் வரும்'' என்று கூறியதோடு நில்லாமல் நான் ஒன்றைப் படைப்பதாயிருந்தால் அது என்னைப் பாதிக்க வேண்டும். இங்கு நடைபெறும் பிரச்சினைகள் என்னைப் பாதித்து எனது நெஞ்சில் பாரமாக அழுத்த வேண்டும். அப்போதுதான் ஒரு படைப்பு உருவாகும். அப்படி ஒரு பாரம் எனக்கு ஏற்படவில்லை' என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து இன்னொருவர் அவரும் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தான்- 'இங்கு எத்தனையோ அழிவுகள் இடம் பெற்றன. வந்தாறுமூலையில் கூட அகதிகள் முகாம் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்து பலர் கொண்டு போகப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இவைகள் உங்களுக்கு ஒரு பாரத்தைத் தரவில்லையா? என்று கேட்டார்.

இக் கேள்விக்கு எஸ்.பொ.அளித்த பதில் இது.

''நான் அவுஸ்ரேலியாவில் இருந்து கொண்டு பல்வேறு நாடுகளில் இடம் பெறும் நிகழ்ச்சிகளையும் அறிகிறேன். சோமாலியாவில் நூற்றுக்கணக்கானவர்கள் சாகிறார்கள் என்று அறிகின்ற போது இலங்கையிலும் ஒரு பத்துப் பதினைந்து என்று கேள்விப்படுகிறேன். அதனால் இது பெரிதாக என்னைப் பாதிக்கவில்லை'' என்று பதிலளித்தார்.

இந்த இலட்சணத்தில் இவர்கள் 'வேர்களோடு' தம்மை எப்படிப் பிணைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை முனைப்புப் பெற்ற 1983ம் ஆண்டிலிருந்து இன்று வரை இருபத்தியையாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இறந்துள்ளார்கள் என்றும் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் எழுபத்தையாயிரத்துக்கு மேற்பட்டோர் புலம் பெயர்ந்துள்ளனரென்றும், பல கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட தமிழர் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் ஒரு புள்ளி விபரம் கூறுகிறது.

நிச்சயமாக இந்த எண்ணிக்கையை விட அதிகமாகவே இழப்புக்கள் நேர்ந்துள்ளன. எஸ்.பொ.வுக்குப் 'பாரம்' வரத் தேவைப்படும் மண்டை ஓடுகளின் எண்ணிக்கையைச் சொல்வாரானால் கணக்கு வைக்க இலகுவாயிருக்கும்.

இதுவரை சோமாலியாவோடும், எதியோப்பியாவோடும் கணக்குப் பார்த்தவர் இனி றுவாண்டாவோடும் பார்ப்பார். அங்கு மிகக் குறுகிய காலத்துள் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது இலங்கைத் தமிழர்களின் உயிர் அவருக்கு வெறும் தூசாகவே இருக்கும். ஆகவே அவருக்குப் பாரம் வரவே வராது.

திருமேயன்

# பண்பாட்டுப் பவனி

## மாயன்

சித்திரைப் புத்தாண்டு தினத்தின் முன் பின்னாக இருபது நாட்கள் (சித்திரை 6ம் திகதி -20ம் திகதி) **'பண்பாட்டுப் பவனி' (Cultural Caravan)** ஒன்று நிகழ்ந்தது.

கிளிநொச்சி, வன்னி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் பண்பாட்டுப் பவனி இடம் பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடன் **நாடக அரங்கக் கல்லூரி**யும் இணைந்து இப்பவனியை மேற்கொண்டது. **க.சிதம்பரநாதன்** இப்பவனியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

பொய்க்கால் நாடகம் (நெறியாளர்: க.சிதம்பரநாதன்) இப்பவனியின் குவிமையமாக இருந்தது. ஆயினும் சிறு சிறு களப்பயிற்சிகள், சந்திப்புகள், தெருவெளி அரங்குகள் (Street Play) என்பனவும் இதன் அங்கங்களாக இருந்தன.

வன்னிக் கிராமங்களில் ஆர்வம் கொண்டவர்களுடன் **சமூகம்** பற்றி உரையாடுவது? அவர்கள் கருத்துக்களைச் சேகரிப்பது. அரங்கச் செயற்பாடுகளூடாக அவர்களை ஈடுபாடு கொள்ள வைப்பது, அவர்களுக்கு ஒரு நாள், இருநாள் களப்பயிற்சிகள் கொடுப்பது- என்றெல்லாம் இப்பவனியின் பயன் தெரிந்தன.

ஈடுபாடு கொண்டவர்கள் மிக ஆர்வத்துடன் யாவற்றிலும் பங்கு கொண்டார்கள். ஏனையோரிடமும் கூட ஆர்வம் துளிர்த்தது. சிதம்பரநாதன் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் ''ஒரு பண்பாட்டுச் செயல் வேலைகளில் இது இன்னொரு பரிமாணம் எனலாம். நல்ல பலனைத் தந்தது என்று தான் நான் கூறுவேன். உற்சாகமூட்டுவதாய் இருந்தது. நமது மக்களுக்கு இது புதிய வடிவம்'' என்றார்.

இப்பவனியில் 30 பேர் பங்கு கொண்டனர். ஆண்கள், பெண்கள் என இரு பாலாரும் இதனுள் அடங்கினர். கிராமிய நிகழ்வுகள் இதில முக்கியத்துவம் பெற்றன. மக்களுடன் கலந்துரையாடல்- அவர்கள் பிரச்சினையை இனங்காணல்- பிரச்சினைகளுக்கான தீர்வை வழிகாட்டுதல் ஊடாக மக்களே தெரிவு செய்தல் என்பதும் ஒரு வேலையாக அமைந்தது. இத்தகைய அரங்கச் செயற்பாடானது இறுக்கமானதாக அல்லாமல் ஒரு 'தளர் நிலை' (Relax) கொண்டதாக அமைந்தது. ஒரு புறத்தில் மக்களைத் தயார்படுத்தல் -தமது பிரச்சினைகளுக்காக -எனும் அம்சத்தைக் கொண்டிருந்தது. மக்கள் மத்தியில் அதற்குப் பெரும் ஆதரவு இருந்ததனைக் காணமுடிகின்றது.

பவனி தொடர்பாக இன்னொரு விடயமும் உண்டு. இத்தகைய செயற்பாடுகள் ஒரு புறத்தில் புலிகளைப் பலப்படுத்துவதாக அமைந்து விடுகிற அபாயமும் உண்டு என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# வாத்தியார் வீட்டு குந்து



சின்னப் பொடி படலைக்கு மேலால் எட்டிப் பார்த்தான்.

குந்திலே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

எங்கே வாத்தியாரைக் கூடக் காணவில்லையே' என்று யோசித்தபடி சைக்கிளை வேலியில் சாத்திவிட்டு, படலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

குந்திலிருந்த வெற்றிலைத் தட்டமும், தட்டத்துக்குள்ளேயே இருந்த 'நெருப்புப் பெட்டியும்' வாத்தியார் 'உங்கினை தான்' எங்கேயோ நிற்கிறார் என்பதை அவனுக்கு உணர்த்தின.

மூலைக்கப்பில் சாய்வதற்கு வசதியாக குந்திலே உட்கார்ந்து கொண்டான் சின்னப்பொடி.

வெத்திலைத் தட்டத்தை எட்டி இழுத்து ஒரு வெத்திலையை எடுத்தான். அதை நெடுக்குப் புறமாக மடித்து காம்பை மட்டும் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டான்.

'வாத்தியாருக்கு கொழும்பு வெத்திலையெண்டாலே பிடிக்காது. ஊர் வெத்திலை தான் எப்பவும். கொழும்பு வெத்திலைக்கக்கான் காம்பே இருக்காதே'

'என்ன சங்கதி நீ தனிய வந்திருக்கிறாய்... எங்கை அவனைக் காணேல்லை'

வாத்தியார் பின் பக்கமாக வந்ததை சின்னப் பொடி கவனிக்கவில்லை.

'தெரியேல்லை... நான் நினைச்சன் இஞ்சை வந்திருப்பானெண்டு. இஞ்சை வந்தால் அவனையுங் காணேல்லை. உங்களையுங் காணேல்லை...'

'கன நேரமாய் வந்திருக்கிறியே... உப்பிடி நீ நசுக்கிடாமல் வந்திருந்தால் எனக் கென்னென்டு தெரியும். நான் பின்னுக்குப் போனாப் போலை பொன்னுத்துரையற்றை பெடியனைக் கண்டிட்டுக் கதைத்துக் கொண்டிருந்திட்டன். ஒழுங்கையாலை போனவன் என்னைக் கண்டுட்டு நிண்டாப் போலை... கதை வந்தால் தெரியாதே...'

வாத்தியார் குந்தில் வசதியாக காலை நீட்டி உட்கார்ந்தபடி பாக்குவெட்டியைத் தூக்கினார்.

'ஆர் முகுந்தனையே சொல்லுறியள்... அவன் எப்ப கொழும்பாலை வந்தவன்?'

'நேற்றுத்தான் வந்தவன்... நாளையிண்டைக்கு திரும்பப் போறானாம்'.

'என்ன அப்பிடி அவசரமாய்?' சின்னப்பொடியின் கேள்வியில் வெறும் விடுப்பு ஆர்வத்துக்கு மேல் எதுவும் இருக்கவில்லை. ஆனால் வாத்தியாருக்கு அந்தக் கேள்வி மிகவும் முக்கியமான கேள்வியாகப்பட்டது.

சீவிய பாக்குச் சீவல்களை வாயில் போட்டு விட்டு, வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவியபடி வாத்தியார் கேட்டார்.

'சின்னப்பொடி, அவன் ஏன் உப்பிடி அவசரமாய் வந்திட்டுப் போறான் எண்டு நினைக்கிறாய்?'

'தெரியேல்லை. அதுதான் கேட்டனான். நீங்கள் தானே கதைச்சிட்டு வந்தனிங்கள்'

வாத்தியார் சிரித்து விட்டு இடதுகையைக் குந்தில் ஊன்றி வலதுகை விரல்களை உதடுகளில் பொருத்தி எட்டித் துப்பினார்.

சின்னப்பொடி வாத்தியாரின் வாயைப் பார்த்தபடி இருந்தான்.

'கொழும்பிலை என்னவோ செய்யிறதுக்கு பெரிய அடுக்கு நடக்குது போலை கிடக்குது. அவன்ரை கதையைப் பார்த்தால் அப்பிடித்தான் தெரியுது'

வாத்தியார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரங்கன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

'எட... நீ இஞ்சை வந்திட்டியே... நான் உன்ரை வீட்டை போட்டு வாறன்' என்றான் அவன் சின்னப்பொடியிடம்.

சின்னப்பொடி ஒன்றும் பேசவில்லை. அவனுக்கு ஒரு கணம் எரிச்சல் கூட வந்தது. இவன் எதுக்காக வீட்டை வாறான்... இவன் வீட்டை வாற நாளெல்லாம் அம்மாவுக்கு மறுமொழி சொல்லி மாளேலாது.

'நீயேன் அங்கை போனனி... அவன் இஞ்சை வந்திருக்கிறான்...'

'நான் போயிருக்கமாட்டன் வாத்தியார்... சபாலிங்கத்தைத் தட்டியாச்சாம்... மேடேயிலண்டு, பாரிசிலை அவற்றை வீட்டிலை வைச்சு. அதுதான் இவனுக்கு சொல்லவெண்டு'

'என்ன... உனக்கார் சொன்னது..?' சின்னப்பொடிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

'உது எனக்கு அப்பவே தெரியும். சபாலிங்கத்தின்ரை 'பே'வேலைகளுக்கு உப்பிடி நடக்குமெண்டு. சபாலிங்கம் ஒண்டில் மற்றவையைப் போலை பேசாமல் இருந்திருக்கோணும். அல்லாட்டிப் போனால் பாதுகாப்பாகவாவது இருந்திருக்கோணும்'. வாத்தியார் சொன்னபடி ரங்கனைப் பார்த்தார்.

ரங்கன் ஆமோதிப்பதுபோல தலையை ஆட்டினான். பிறகு சொன்னான். 'இவங்கள் சபாலிங்கத்தைப் பெரியாளென்டு நினைச்சிட்டாங்கள் போலை.'

'இல்லை. அவங்களை பற்றி கதைக்க வெளிக்கிடேக்கை. அது பரிசெண்டாலென்ன, லண்டன் எண்டாலென்ன கவனமா இருந்திருக்கோணும். இவர் துப்பரவா கவனமில்லாமல் இருந்திருக்கிறார்.'

இந்த உரையாடல் சின்னப்பொடிக்கு அவ்வளவாக ரசிக்கவில்லை.

'சபாலிங்கம் செத்துப்போனதெண்டவுடனையே நீங்கள் அவரிலையெல்லோ குறை பிடிக்கிறியள். சுட்டவங்களைப் பற்றி ஒண்டும் கதைக்கிறியளில்லையே. சின்னப்பொடி கேட்டான்.

'அவங்கள் செய்யிற முதல் கொலை இதில்லையே. அவங்கள் இப்பிடி செய்வாங்கள் எண்டது தெரிஞ்ச விசயம் தானே.' என்றான் ரங்கன்.

வாத்தியார் ஆமோதிப்பது போல தலையை அசைத்தார்.

பின் தொடர்ந்தார்:

'சின்னனப்பொடி, இவங்கடை வேலையெல்லாம் இப்பிடித்தானெண்டது ராஜினி அம்மாவை சுட்ட நேரமே விளங்கியிருக்க வேணும். எப்பிடி எத்தினைபேரைக் கொண்டெண்டாலும் தாங்கள் நினைச்சதை செய்யிறதுதான் இவங்கடை பொலிசி... இப்ப முகுந்தன் சொன்ன கதை என்னன்டு தெரியுமே.. நான் அதைச் சொல்ல வாயெடுக்கேக்கை தான் ரங்கன் வந்தவன். அதோடை கதை மாறியிட்டுது.'

'என்னவாம் அவன்... அவனே ஒரு புலிதானே' என்றான் ரங்கன்.

'உனக்கு புலியளைத் திட்டாதவனெல்லாம் புலி. புலிக்கு தங்களைப் பாராட்டாதவனெல்லாம் எதிரி... ஒரு வகையிலை பார்த்தால் நீயும் ஒரு புலிதான்' சின்னப்பொடி ரங்கனை வெட்டினான்.

'என்னவாம் முகுந்தன்' - சின்னப்பொடியைச் சட்டை செய்யாமலே கேட்டான் ரங்கன்.

'தேடகம் வாசிகசாலையையும் எரிச்சுப் போட்டாங்களாம். கனடாவிலை'.

சின்னப்பொடி திடுக்கிட்டு எழும்பி நின்றான். எழும்பின வேகத்தில் பத்திவளை தலையில் இடிக்கவே, தலையைத் தடவிக் கொண்டு திரும்பவும் குந்தில் அமர்ந்தான். அவனுக்கு நடப்பவைகளைச் சரியாக உள்வாங்கிக் கொள்ளவே கஷ்டமாக இருந்தது. நெஞ்சில் கொதிப்பு ஏறி உடம்பு சூடாகுவதாக உணர்ந்தான்...

'அப்ப இனி வெளிநாடுகள்ளையும் தங்கடை கைவரிசையைக் காட்டுறதெண்டு வெளிக்கிட்டினம் இவை' ரங்கன் தனது கருத்தை சொன்னான்.

வாத்தியார் ஒரு சுருட்டை மூட்டினார்.

தேடகம் வாசிகசாலை எரிப்புப் பற்றிய செய்தி சின்னப்பொடிக்கு யாழ்ப்பாணம் நூல்நிலைய எரிப்பை ஞாபகமூட்டியது. சின்னப்பொடி வீட்டில் 86இல் அவனது அண்ணா சேர்த்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களை அவர்கள் ஒரு பிறவுண் நிற டெலிக்காவானில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனது ஞாபகம் வந்தது; தமையனை அவங்கள் தேடிக் கொண்டிருக்கிறாங்கள்... புடிச்சால் எந்த நேரமும் சுடப்படலாம் என்ற பயத்துடன் அம்மாவும் அப்பாவும் குசுகுசுத்தவைகள் ஞாபகத்துக்கு வந்தன; தான் எதுவும் செய்ய முடியாத கையாலாகாதவனாக பார்த்துக் கொண்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது...

'என்ன யோசிக்கிறாய்?' வாத்தியார் தான் கேட்டார்.

'இல்லை... இது எங்கைபோய் முடியப் போகுது எண்டு யோசிக்கிறன்' என்றான் சின்னப்பொடி.

வாத்தியார் மறுமொழி சொல்லவில்லை. ரங்கன் ஏதோ யோசித்தபடி உட்கார்ந்திருந்தான்.

விடுதலைப் போராட்டம் என்ற பெயரால், மக்கள் மீதும், தேசத்தின் மீதும் அக்கறையுள்ள அனைத்து சக்திகளும் பலியெடுக்கப்பட்டு வருவதையிட்டு சின்னப்பொடிக்கு என்னவென்று சொல்ல முடியாத எரிச்சல். இவர்களால் கொல்லப்பட்ட ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தேச மக்களின் விடுதலை பற்றி சிந்தித்தவர்கள்; அதற்காக தமது அறிவுக்கெட்டிய வரையில் சரியெனப் பட்டபடி இயங்க விரும்பியவர்கள்... ஆனால்... இத்தனை அறிவாளிகள் சிந்தனையாளர்கள், தேசபக்தர்கள் எல்லோரையும் பலியெடுத்துத் தான் புலிகளது தமிழீழம் அமையப் போகிறதென்றால்... அங்கே வாழப் போவது யார்? அந்தத் தமிழீழம் யாருக்காகத் தேவை... விடுதலைப் போராட்டமும், மக்களின் தியாகமும் வெறும் குறுகிய வெறிக்குள் அடக்கப்படுமானால்... அதனால் யாருக்கு என்ன பலன்..

வாத்தியார் அவனது சிந்தனையை தடுப்பது போல செருமிக் கொண்டு சொன்னார்;

'அழிவு காலம் பிறந்திட்டு தெண்டது மட்டும் தெளிவாகத் தெரியுது. இவங்கள் இன்னும் கனநாளைக்கு உந்தத் தர்பாரை நடத்த முடியாது...'

'எப்பிடிச் சொல்லுறீங்கள்' என்றான் ரங்கன்.

'புலிகளின் அரசியல் போக்கின் சுயஅழிவு தன்மையின்ரை வெளிப்பாடு தான் உது. தன்ரை காலையே வெட்டுகிற வேலைதான் உது..'

'அவர்கள் தங்கடை காலை வெட்டேல்லை.. அப்பிடி நினைக்கவும் இல்லை'- இது ரங்கன்

சின்னப்பொடிக்கு இந்த உரையாடலின் போக்கு பிடிக்கவில்லை. எழுந்து வெளியே வந்தான். பிறகு வாறன் என்று சொல்லியபடி சைக்கிளை தள்ளிக் கொண்டு நடந்தான். ஏறி உழக்க வேணும் போலக்கூட தோன்றவில்லை.

இதை இப்படியே எவ்வளது காலம் அனுமதிக்கிறது? இந்தப் பாதகச் செயல்களுக்கு எதிராக ஒருதரும் வாய் திறக்காமல் எத்தினை காலம்தான் இருப்பது? வாய்மூடி மௌனியாக இருந்து மரணிப்பதை விட இந்தப் போக்கைப்பற்றிப் பேசி கொல்லப்பட்ட சபாலிங்கத்தின் இறப்பு எவ்வளவு மகத்தானது? ஒவ்வொரு சபாலிங்கம் கொல்லப்படும் போதும் நூறுநூறாக சபாலிங்கங்கள் இந்த நாட்டில் உருவாகாதா? அந்தக்காலம் எப்போது வரப்போகிறது... அந்தக் காலம் வராவிட்டால் இந்தத் தேசம் விடிவது சாத்தியமே இல்லை...

சின்னப்பொடி சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். வேலியோரத்து பூவரசம் சருகுகளையும் புழுதிகளையும் அள்ளி வீசிபெடி ஒரு சுழிக்காற்று அவனுக்கு முன்னால் ஓடியது.




தூர்த்துத் துடைத்த
ஒரு கிராமத்தைப் போல்
வானம்
மிகவும் துப்பரவாக இருந்தது.

பறவைகள் பறப்பதை காணவுமில்லை.
மேகங்கள் ஓடுவதை காணவுமில்லை
நேற்றுப்பிறந்த
குழந்தையின் முகத்தைப் போல்
தெளிவாக தெரிந்தது வானம்.

சூரியன்
இருந்த இடமெல்லாம்
வானத்தின்
உடுதுணிகள் உலர்ந்தது.
வெள்ளிகள் எல்லாம்
பூமியில் கொட்டிக் கிடந்தது.

வானம்
எல்லை, எல்லையாக பிரிந்து கொண்டது
ஒவ்வொரு
எல்லைக்குள்ளும்
விதம், விதமான மணங்கள் வீசியது.

அழகான வானம்!
அள்ளிக் கொஞ்சினாலும்
ஆசை தீராது.

இனி-
வானத்திலிருந்து
மழையும் பெய்யாது
வெயிலும் வராது.

ஒன்றுமே இல்லாத
மலட்டு வானம்தான்.

முகமட் அபார்

நன்றி - நூலகத்திட்டம்



## அற்ப......

நடந்த மனித உரிமைகள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசதரப்பினர் இலங்கையில் இனப் பிரச்சினையே இல்லை என்று தெரிவிக்க இத் தேர்தலில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பங்குபற்றியதை சான்றாகக் காட்டினார்கள் என்றும், த.வி.கூவும் இத் தேர்தலில் பங்குபற்றியிருந்தால் இங்கு பிரச்சினையே இப்போது இல்லையென்று அடித்துக் கூறியிருப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மாகாணசபையைக் கைப்பற்றியிருப்போம்

பாராளுமன்றத் தேர்தலுக்கான தயாரிப்பில் இப்போது ஈடுபட்டுவரும் த.வி.கூவின் வடக்கு கிழக்கில் பரவலாக நடக்கும் கூட்டத்தொடர்களில் ஒன்றான இக் கூட்டத்தில் பேசிய திரு. தங்கத்துரை அவர்கள் தெரிவித்ததாவது: ''1983 முதல் நாங்கள் சென்னையில் எல்லோரும் சொல்வது போல் சும்மா இருக்கவில்லை. எமது முயற்சிகளின்பயனாகவே1987இல்இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்துக்குக் காரணமாக இருந்தவர்களான நாம் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் நிச்சயமாக மாகாண சபையைக் கைப்பற்றி இருப்போம். அப்போது நாங்கள் இளைஞர்களது தியாகங்களை மதித்துத் தேர்தல்களில் போட்டியிடவில்லை; இப்போதும் அவர்களது தியாகங்களை நாம் மதிக்கிறோம்.''

### சமஷ்டி முறையே எமது கோரிக்கை

த.வி.கூ எம்.பியான மாவை சேனாதிராசா அவர்கள் பேசுகையில் இன்றைய இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான மிகவும் வலுவான அரசியலமைப்பாகும் என்று தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது: ''இந்த ஒற்றையாட்சி அமைப்புக்குப் பதில் ஒரு சமஷ்டி ஆட்சி முறை ஒன்றையே நாம் கோருகின்றோம். உலகில் எல்குமே காண முடியாத அளவு மோசமானது இந்த அரசியலமைப்பு. இது ஏற்கனவே ஒப்பந்தங்கள் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களையும் பறித்தெடுத்து விட்டது'' என்றார் அவர்.

''இலங்கையின் அரசியலமைப்பு, ஆட்சி முறை, இந்த அரசாங்கம் என்பவையே எமது எதிரிகள். அரசியலமைப்பு ரீதியாக தீர்வொன்று எமக்கு கிடைக்கும் வரை எமது போராட்டங்களை அழிக்க முயலும் சக்திகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் எதிராகவே செயற்படுவோம். உரிமைகளைப் பெறுவதற்காக நடாத்தப்படும் எமது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல' என்றும் அவர் தெரிவித்தார்.

இக் கூட்ட இறுதியில் முன்னாள் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## இடது சாரிகளை .....

ஆனால் 92இல் அவர் இந்தியாவிற்கு நேபாள நலன்களை தாரைவார்த்துவிட்ட ஒரு இந்தியக் கைக்கூலி என்ற அடிப்படையில் இடதுசாரிகள் நாடளாவிய முறையில் மேற்கொண்ட கிளர்ச்சி கொய்ராலாவின் ஆட்சிக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்திற்று.

இக்கிளர்ச்சிகளுக்கெல்லாம் தலைமையேற்று நடத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசி மதன் பண்டாரி இரு கட்சித் தொண்டர்களுடன் மே 16.1993 இல் ஒரு வாகன விபத்தில் பலியானார். அவரது மரணம் விபத்தல்ல றோவின் திட்டமிட்ட சதியே எனவும் அதற்கு ஆதாரம் உள்ளதாகவும் உடனடியாக சுதந்திர ஆணைக்குழு ஒன்று நியமிக்கும்படியும் இடதுசாரிகள் கோரினர். கொய்ராலா அரசு விசாரணையை சடைவதாகப் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டது: ஜூன் மாதம் இடதுசாரிகள் மீண்டும் வேலைநிறுத்தம், கிளர்ச்சி என்ற கோதாவில் இறங்கினர். சிக்கல் தொடர்கிறது. இன்னும் நேபாளத்தில். எமது ஈழத்து மாக்ஸிஸ்டுகள் நேபாளம் தந்த பாடத்தையும் கவனமாகப் படிப்பார்களேயாயின் அவர்களுக்கும் அவர்கள் வழிநடத்த முயலும் மக்களுக்கும் பலனுண்டாம்.

(வரும்)

## ஒரு அருட்தந்தை ஆமிக்காரராகிறார் .........

இதற்கிடையில் ஏற்கனவே அந்தப் பாதர் ரெலிபோனில் சொன்ன பொலிஸ்காரர்களும் திடுதிடுப்பென வந்து பிரபாகரனை பிடித்து விட்ட சந்தோஷத்தில் இவர்களை முறைத்துப் பார்க்கிறார்கள். இறுதியில் அவர்கள் மூவரும் பொலிஸ்நிலையம் கொண்டு செல்லப்பட்டு ஓ.ஐ.சியிடம் பொலிஸ் பதிவு இன்ரவியூ சான்றிதழ் என்பனவெல்லாம் காட்டிய பின்னர் தான் ''உங்கட ஊர் மாதிரி நினைச்சுக் கொண்டு கண்டபடி எல்லா இடத்திலையும் இருக்கலாம் போகலாம் வரலாம் என்றதையெல்லாம் மறந்திடுங்கோ'' என அட்வைஸ் பண்ணப்பட்டுத்தான் அனுப்பப்பட்டனர்.

இதே போல் இந்த தேவாலயத்துக்குள் 'கொயின்ஸ்' போட்டு ரெலிபோன் கதைக்கும் பூத் ஒன்றும் இருந்தது. இதிலும் அனேகமாக பகலும் இரவும் எந்நேரமும் எங்கட சனங்கள் தான் நிண்டு கொண்டிருக்கும். 'பாஸ்போர்ட் சரியோ' 'ரிக்கட் என்னமாதிரி' 'அவர் நாளைக்கு சிங்கப்பூர் வாறார்' 'எனக்கு லண்டன் போக விருப்பமில்லை கனடாவுக்குப் போறன்' 'உங்கட வீட்ட மீன் குழம்போ' என்று போன் பேசும் இந்தத் தமிழரையெல்லாம் அந்தப் பாதருக்கு கொஞ்சமும் பிடிக்கயில்ல. தமிழர்களைக் கண்டதும் புறுபுறுத்துக் கொண்டிருந்த பாதர் அந்த ரெலிபோனைக் கழட்டி விட்டார்.

ஒரு சராசரி ஆமிக்காரனாகவோ பொலிஸ்காரனாகவோ ஆகியிருக்க வேண்டியவர் எப்படி பாதிரியார் ஆனார் என்பது தான் வியப்பாக இருக்கிறது. இப்பவும் காலம் போகயில்ல அங்கியைக் கழட்டினால் சரி.

## மட்டு செஞ்சிலுவைச் சங்கம் .........

வில்லை. மாறாக வைத்தியர், மருத்துவத் தாதி ஆகியோருக்கு சம்பளத்துடன் லீவு வழங்கப்பட்டது. ஏனைய செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் காரணம் கேட்ட போது அவசரமான சில பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக வாகனம் கொழும்புக்குச் செல்வதாகக் கூறப்பட்டது. ஆனால் கொள்வனவு உத்தியோகத்தரோ அல்லது வேறு உத்தியோகத்தரோ எவருமின்றி சாரதி மாத்திரமே வாகனத்தைக் கொழும்பிற்குக் கொண்டு சென்றுள்ளார்.

திட்டமிட்டபடி அவர்கள் மருத்துவ சேவைக்குச் செல்லாததால் கிராமமக்கள் நூற்றுக் கணக்கில் காலை எட்டு மணிமுதல் மாலை நான்கு மணி வரை காத்திருந்து விட்டு மருந்து கிடைக்காமலே வருத்தத்துடன் சென்றுவிட்டனர்.

மறுநாள் அக்கிராமத்தில் இருந்த கந்தசாமி என்பவர் உரிய நேரத்தில் சிகிச்சையளிக்கப்படாததால் நிலைமை மோசமாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உண்மையில் மருத்துவ சேவைக்குச் செல்ல வேண்டிய அம்புலன்ஸ் பொருட் கொள்வனவுக்காகக் கொழும்பு செல்லவில்லை. அது பொய்! தலைவரின் தனிப்பட்ட தேவை ஒன்றுக்காகவே அது நூற்றுக்கணக்கான கிராம மக்களை ஏமாற்றிவிட்டு செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுக்கும் பொய் சொல்லிவிட்டு கொழும்பிற்குச் சென்றிருக்கிறது. தலைவர் ஞானப்பிரகாசமே இவ்வேலையைச் செய்திருக்கிறார்.

மட்டு.மக்களுக்காக எவ்வளவோ சிறப்பான பணிகளை ஆற்றக்கூடிய, ஆற்ற வேண்டிய செஞ்சிலுவைச் சங்கம், ஊழலும், அதிகாரத் துஷ்பிரயோகமும், மோசடியும் நிறைந்த ஒன்றாக மாறியுள்ளது. இவ்வாறான ஒரு செஞ்சிலுவைச் சங்கம் அவசியம்தானா என்ற கேள்வியே மேற்கிளம்பியுள்ளது?

'பிந்திக் கிடைத்த தகவல்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடப்பாண்டிற்கான நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்தில் ஞானப்பிரகாசம் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு புதிய நிர்வாகக் குழு தெரியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன.

இனியாவது மட்டு.செஞ்சிலுவைச்சங்கம் உருப்படியாக மக்களுக்கு உதவுமா?

## நாட்டை அழித்து ..

நோய் நாட்டில் மிக வேகமாக பரவி வருகிறது. கடற்கரைகளில் ஹோட்டல்கள் அமைக்கப்படுவதனால் சவர்க்கார நீர் கடற்கரையில் தேங்கி முருங்கைக் கல் உருவாக முடியாது போய் மண் அரிப்பு உண்டாக வழிவகுக்கிறது.

இவையாவும் ஐ.தே.கவின் நீண்டகால நோக்கில் மக்களை கொல்லும் திட்டமேயாகும். ஐ.தே.கவை மட்டும் குறை கூறிவிட முடியாது. இதே கொள்கையை மூன் வைத்து தேர்தலை எதிர் பார்த்து நிற்கும் சுதந்திரக்கட்சியினரும் மக்களை கசக்கிப் பிழிந்தே ஆட்சி நடத்தினர். பின்னர் ஐ.தே.கவின் உலக வங்கி தலைமையிலான கொலைகளிற்கு ஒத்துப் போய் வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருந்தனர்.

இப்போது மனிதத்துவம் மிக்க திறந்த பொருளாதாரம் பற்றிப் பேசுகின்றனர். திறந்த பொருளாதாரமும், புதிய உலக ஒழுங்கும் முழு உலகையுமே புதைகுழி விளிம்பில் நிறுத்தி இருக்கும் போது அதனிடம் மனிதத்துவம் இருக்கும் என்று பசப்பும் இவர்களை என்னவென்பது?

**பேச இவர்களும், இவர்கள் பேச்சைக் கேட்டு கைதட்ட ஒரு கூட்டமும், ஏமாறப்படுவதற்கு மக்களும் இருந்து விட்டால் இவர்கள் காட்டில் மழை! பாவம் மக்கள்!!**

## மணிவாசகம்

### பருப்பு விலையும் யுத்தமும்!

''இதுவரை காலமும் ஆட்சியாளர்கள் கூறினார்கள் நாட்டை அபிவிருத்தி செய்ய இயலாதிருப்பதும், பொருட்களின் விலைவாசி உயர்வதும் யுத்தத்தினால் தான் என்று. அப்படியானால் இப்போது திடீரென பருப்பு விலை குறைந்தது யுத்தம் முடிவடைந்ததனாலா?

**சுதந்திரப் பத்திரிகையாளர் அமைப்பின் பிரதான அமைப்பாளர் லூஷியன் ராஜகருணாநாயக்க- லங்காதீபவில் 07.06.1994**

### வலதுக்கும் இடதுக்கும் செல்லாத ஜனநாயகம்

''வேண்டிய எவருக்கும் எமது கட்சியை விட்டு விலகுவதற்குச் சுதந்திரம் உள்ளது. கட்சியினுள்ளே இருந்து கொண்டு கட்சிக்கு எதிராகச் சதி செய்ய இடமளியோம். நாம் செல்வது நேரான அரசியல் பயணமாகும். கோஷ்டி வாதம் எம்மிடம இல்லை. மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு, கட்சியினுள் இன்னொன்றைச் செய்ய இடமளிக்க முடியாது. ஜனநாயகக் கட்சியொன்றாக நாம் செயற்படுவது வலதுக்கு அல்லது இடதுக்கு செல்லவல்ல. இந்நாட்டில் நிலவும் வறுமையை இல்லாதொழிக்கவும், வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கவும் ஆகும்.''

**இந்நாள் ஜ.ஐ.தே.மு.தலைவரும் ஸ்ரீ லங்கா வட-மேல் மாகாண சபையின் முதலமைச்சருமான ஜீ.எம்.பிரேமச்சந்திர -லங்காதீபவில்- 07.06.1994**

### யுத்தத்தை நிறுத்துதல் முடியுமோ?

''இன்று நாட்டினுள் நடைபெறும் யுத்தத்தைச் சிலர் 10 ஆண்டு காலமாக நடைபெறும் யுத்தமாகவே பார்க்கிறார்கள். ஆனால் அதன் சரித்திரம் 50 ஆண்டுகளை விடப் பழைமை வாய்ந்தது. அது எமது மனதுள் இருந்தது. மனதில் உள்ள அவ்யுத்தத்தை நிறுத்தும் வரை யுத்த களத்தில் நடைபெறுகின்ற யுத்தத்தை நிறுத்த முடியுமென நான் நினைக்கவில்லை.''

**சுதந்திரப் பத்திரிகையாளர் அமைப்பின் பிரதான அமைப்பாளர் லூஷியன் ராஜகருணாநாயக்க- லங்காதீபவில் -07.06.1994**

### இதோ இரண்டு மாதங்களில் திட்டம்!

''பசி, வேலையின்மை, வட-கிழக்கு யுத்தம், நாட்டிலுள்ள வேறு கொழுந்துவிட்டெரியும், பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வை உள்ளடக்கிய பொதுசன ஐக்கிய முன்னணியின் எதிர்கால செயல்பாடுகளுடன் கூடிய வேலைத்திட்டத்தை இன்னும் இரண்டு மாதங்களில் மக்கள் மத்தியில் வைப்போம்''

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண சபையின் முதலமைச்சரும், ஸ்ரீ.ல.சு.க. பிரதித் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க -லங்காதீபவில் -07.06.1994**

### ஹேமா சொன்னால் சரி!

''ஹேமா பிரேமதாச வேண்டுகோள் விடுத்தால் மட்டும் நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து எந்நேரமும் விலகத் தயார்.''

**ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பா.உ.காலிங்க ஒபேவங்ச -லங்காதீபவில -08.06.1994**

### அனைவரும் பொறுப்பு!

''வியட்நாமை விடுத்துப் பார்க்கையில் அதிகமான அரசியல் காரணங்களுக்காகக் கொலைகள் நடைபெற்ற நாடு இலங்கை என ஐக்கிய நாடுகள் உட்படச் சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. தமது கருத்தைப் பலாத்காரமாக மற்றவர்கள் மீது திணிப்பதற்கு முயன்றதினால் கடந்த காலங்களினுள் இளைஞர்களின் உயிர்கள் ஒரு இலட்சமளவில் பறிக்கப்பட்டன. இந்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் இதற்குப் பொறுப்பாகும்.''

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண முதலமைச்சர், ஸ்ரீ.ல.சு.கட்சிப் பிரதித் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க -திவயினவில் -09.06.1994**

### டைனமைட் சமூகம்!

''எமது நாட்டில் இன்று ஜனநாயகம் ஆட்சி செய்யும் சமூகமொன்று உள்ளதாகக் கூறப்பட்டாலும் அதனுள் உள்ளது சாதிவாதம், பிரபுத்துவ வாதம், அதிகாரிகள்வாதம் ஆகும். அதனால் இச் சமூக அமைப்பை டைனமைட் சமூக அமைப்பு என இனங்காட்ட முடியும்.''

**கூட்டறவு அபிவிருத்தி அலுவலர் சுரேந்திர டீ.புலத்சிங்கல- திவயினவில் -09.06.1994**

### மாகாணசபை - வெள்ளையானை

''இந்நாட்டில் மாகாண சபை முறை ஏற்படுத்தப்பட்டது வட- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக ஆகும். ஆனால் இன்று மாகாண சபை ஆட்சி அதிகாரம் இருப்பது அம் மாகாணங்களில் அல்ல. இயலாத விடயங்களைப் பலாத்காரமாக வைத்திருக்கத் தேவையில்லை. இந்த மாகாண சபைகள் முறையை நான் தனிப்பட்ட முறையிலும் எதிர்க்கிறேன். இதனை வெள்ளை யானை என நான் கூறுகிறேன்.''

**ஸ்ரீ லங்கா சுற்றாடல், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க -லங்காதீபவில் -10.06.1994**

### 'கில்' சொல்கிற பயங்கரவாதம்

''சட்டம், ஒழுங்கு வட-கிழக்குப் பிரதேசங்களில் இல்லாமல் போனதற்குக் காரணம் எல்.ரீ.ரீ.ஈயின் நடவடிக்கைகளாகும். இந்நாட்டில் இந்திய இராணுவம் இருந்த காலத்தில், அதன் இராணுவத் தளபதிகளிலொருவராக இருந்த கில் என்பவரால் புத்தகம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அதில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க உள்ள தடைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கில் உள்ளது இனப் பிரச்சினை அல்ல பயங்கரவாதம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கின் பிரச்சினைக்குத் தீர்வொன்றை வழங்கும் அதே வேளை பயங்கரவாதத்தை அடிவேரோடு இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

**கொழும்பு மாவட்ட ஐ.தே.கப் பா.உ ஸ்ரீ நாத் அலக்க குமாரசிங்க -திவயினவில் -10.06.1994**

சீ. சாத்தனார்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சரிநிகர்

# வானமே எல்லை

ஜூலை 15ம் திகதி வரை

பிற்போடப்பட்டுள்ளது

சரிநிகர் 50வது இதழ் வெளிவருவதையொட்டி உலகளாவிய அளவில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடக எழுத்துரு என்பனவற்றிற்கான போட்டியொன்றை சரிநிகர் நடாத்தவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழில் எழுதுகின்ற உலகில் எந்த மூலையிலும் வாழ்கின்ற எவரும் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம். போட்டியில் பங்கு பற்றுவதற்கு வயதெல்லை கிடையாது.

போட்டி விதிகள்:

1. ஆக்கங்களுக்கான கருப்பொருட்கள் தொடர்பாக எந்தக் கட்டுப்பாடும் இல்லை. -வானமே எல்லை.
2. ஆக்கங்கள் படைப்பாளியின் சொந்தப் படைப்பாகவும், இதற்கு முன் பிரசுரமாகாமலும் ஒலி/ஒளி பரப்பாகாமலும் இருக்க வேண்டும்.
3. மொழி பெயர்ப்புகள், தழுவல்கள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
4. எல்லா ஆக்கங்களும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டும்/தட்டச்சில் பொறிக்கப்பட்டும் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
5. ஆக்கப்பிரதியில் எழுதியவர் பெயர், முகவரி என்பன இடம் பெறக் கூடாது. அவை தனியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒருவர் எத்தனை போட்டியிலும் பங்கு பற்றலாம்.
7. ஆக்கங்கள் 1994 ஜூலை 15ம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கவிதை/ கட்டுரை/ சிறுகதை/ நாடக எழுத்துரு எனக் குறிப்பிடல் வேண்டும்.
8. ஆக்கங்கள் திருப்பியனுப்பப்பட மாட்டா என்பதால், ஆக்கதாரர் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது உகந்தது.
9. சரிநிகர்- மேர்ஜ் நிறுவனத்தில் வேலை செய்பவர்களும், அவர்களது உறவினர்களும் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.
10. சரிநிகர் நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

## மாணவர்களுக்கு:

இதே தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையிலான போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை அனுப்பும் போது அப்பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்படும் கடிதமொன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

ஏனைய மேற்கூறிய விதிகள் இவர்களுக்கும் பொருந்தும்.

பரிசு விபரம்:

முதல் பரிசு ரூபா 1000/=ம் சான்றிதழும்
இரண்டாம் பரிசு ரூபா 750/=ம் சான்றிதழும்
மூன்றாம் பரிசு ரூபா 500/=ம் சான்றிதழும்

முகவரி:

நடுவர்குழு,
'வானமே எல்லை,
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்ஸாய
கொழும்பு -05

# மட்டு . செஞ்சிலுவைச் சங்கம்:

## தகிடுதித்தங்கள் அம்பலத்தில்!

**அ. வாமதேவன்**

கொழும்பில் தலைமையகத்தை வைத்துக் கொண்டு செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களில் மட்டக்களப்பில் குறிப்பிடத்தக்க ஆளணி, வாகனங்கள், இதர வசதிகளோடு இயங்கிவரும் நிறுவனம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமாகும்.

இச்செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஞானப்பிரகாசத்தின் மோசடிகள் அம்பலத்துக்கு வர ஆரம்பித்துள்ளன. அண்மையில் ஜேர்மன் அரசாங்கம் 12 இலட்சம் ரூபாவை மட்டு.செஞ்சிலுவைச் சங்கங் கிளைக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தது. நீண்ட நாட்களாக இப்பணம் செலவிடப்படாமலே இருந்து வந்துள்ளது. கடைசியில் ஏன் இந்தப் பணம் பயன்படுத்தப்படாமலே வைக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்விகள் எழும்பவாரம்பித்தவுடன் ஒட்டமாவடி பிரதேச செயலகத்திற்கு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது. யாருடனும் கலந்தலோசிக்காமல் முடிவெடுத்து தலைவர் ஞானப்பிரகாசமே காசோலையை எழுதியிருந்ததானால் பொருளாளர் கையொப்பமிட தயங்கியிருக்கிறார் இதனால் செயலாளரிடம் கையெழுத்துப் பெற்று அனுப்பியிருக்கிறார் தலைவர்.

வாழைச்சேனையில் செஞ்சிலுவைச் சங்கக் கிளை ஒன்று இருக்கும் போது அதனுடைய தேவைக்குப் பணத்தை அனுப்பாமல் ஒட்டமாவடி பிரதேச செயலாளருக்கு பணத்தை அனுப்பியதை எவ்வாறு கொள்வது என்று செஞ்சிலுவைச் சங்க நிர்வாகக் குழு மட்டத்தில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இதே வேளை பணத்தைப் பெற்றுக் கொண்ட ஒட்டமாவடியில் பிரதேசச் செயலாளர் சின்னையா தரப்பட்ட முழுப்பணமும் செலவிடப்பட்டு விட்டதாக செஞ்சிலுவைச் சங்கத்திற்குக் கணக்கு சமர்ப்பித்திருக்கிறார்.

ஆனால் ஒட்டமாவடிக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்த செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் கொடுக்கப்பட்ட பணத்தில் 50 ஆயிரம் ரூபாவுக்குரிய வேலைகள் கூடச் செய்யப்படவில்லை என்று கூறுகின்றனர். அப்படியானால் கொடுக்கப்பட்ட ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் என்ன நடந்தது? இதில் ஒட்டமாவடிபிரதேசச் செயலாளர் சின்னையா மட்டு.செஞ்சிலுவைச் சங்கக் கிளைத் தலைவர் ஞானப்பிரகாசத்திற்கும் இடையில் உள்ள உறவு என்ன என்று எல்லா மட்டத்திலும் சந்தேகிக்கப்படுகிறது.

இதே போன்று 1990ம் ஆண்டு பிரச்சினைகள் உச்சக்கட்டத்தில் இருந்த போது மக்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக 15 லட்சம் ரூபா பெறுமதியான துணிவகைககள் மட்டு.செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த மாதம் வரை இத்துணிகள் எவருக்கும் கொடுக்கப்படாமல் இருப்பில் வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மூன்று லட்சம் ரூபா பெறுமதியான துணிவகை பழுதடைந்தது. பழுதடைந்த இத்துணி எவருக்கும் தெரியாமல் புதைக்கப்பட்டிருக்கிறது.

1990ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு பெருந்தொகையாக அகதிகளான சமயம் இத்துணி விநியோகிக்கப்படாமல் இன்று வரை வைத்திருக்கும் இவர்களின் மக்கள் மீதான கரிசனையை என்னவென்பது? இது தான் அவர்களது சேவை என்றால் மட்டு.மக்களுக்கு இப்படிப்பட்ட வேலை தேவை தானா? இப்படிப்பட்ட தாபனம் அவசியம் தானா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இது தவிர செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் சொந்தமான அம்புலன்ஸ் ஒன்று படுவான்கரைப் பகுதிக்கு நடமாடும் சேவை செய்வதற்கெனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் கடமைக்குச் செல்லும் வைத்தியருக்கு மாதச் சம்பளம் 7000/=, தாதிக்கு 5000/=.

அண்மையில் ஒருநாள் திட்டமிட்டபடி பின்தங்கிய பகுதிக்குச் செல்ல வேண்டிய இந்த அம்புலன்ஸ் அங்கு செல்ல

→15

## ஒரு அருட்தந்தை ஆமிக்காரராகிறார் !

**ஜே. செபஸ்ரியன்**

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரம். ஒல்லாந்தர் இலங்கையை அடிமைப்படுத்திய காலகட்டத்தில் கூடவே கொண்டு வந்த தனது மதத்தையும் இந்த மக்கள் மீது திணிக்க கிறிஸ்தவ தேவலாயங்களையும் நிர்மாணித்தனர். அந்தக் காலத்து பழம்பெரும் கிறிஸ்தவ தேவாலயம் தான் அது. முகத்துவாரத்தில் பிரசித்தி பெற்ற அந்த தேவாலாயத்தில் ஒவ்வொரு ஞாயிறும் அதிகாலையில் ஆண்டவருக்கு ஆராதனை நடைபெறும்.

அந்த ஞாயிறு அதிகாலையிலும் பாதர் பிரசங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆண்டவரைப்பற்றியா அல்லது அரசியலா என்று அங்கிருந்த யாரும் பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொண்டமாதிரி தெரியவில்லை.

''உங்களுக்கு தெரியாதவர்கள் அறிமுகமில்லாதவர்கள் யாருக்கும் உங்கள் வீடுகளை வாடகைக்கு கொடுக்காதீர்கள். இந்தப் பிரதேசத்தில் நிறைய அயலவர்கள் வருகிறார்கள். அவர்கள் இங்குள்ள விடுகளை வாடகைக்கு எடுத்து குடியிருக்கிறார்கள். அவர்கள் பற்றி நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்களுக்கு அவர்கள் பற்றி ஏதும் சந்தேகம் ஏற்பட்டால் என்னிடம் வந்து சொல்லுங்கள் அல்லது பொலிஸில் போய்ச் சொல்லுங்கள்.'' அந்தப் பாதர் இவ்வாறு அன்றைய தனது பிரசங்கத்தை முடித்துக் கொள்கிறார்.

சேர்ச்சிலிருந்து வீடு திரும்பிய பலர் தங்கள் வீடுகளில் வாடகைக்கு குடியிருக்கும் அயலவர்கள் என அந்தப் பாதரால் குறிப்பிடப்பட்ட தமிழர்களிடம் நீங்கள் எப்படியாவது உடனே வேற இடம் பாருங்கள். எங்கட பாதரே உங்களுக்கு வீடு கொடுக்க வேண்டாம் என்று சொல்லிப் போட்டார் என்றார்கள்.

பாவங்கள் மன்னிக்கப்படும் என்கின்ற கிறிஸ்தவ மதத்திற்குள் ஒரு பாதிரியாரே இவ்வாறென்றால் இந்த டிங்கிரி பண்டா விஜயதுங்கவையெல்லாம் நாம் எவ்வாறு கோபித்துக் கொள்வது அன்பையும் ஒற்றுமையையும் போதிக்க வேண்டிய ஒரு மதகுருவே இவ்வாறு துவேஷத்துடன் கல்வியறிவில் மிகவும் பின்தங்கிய இந்தப் பிரதேச மக்களுக்கு துவேச விதைகளை விழுங்கக் கொடுப்பாரெனில் இந்த நாட்டின் ஐக்கியமும் ஒற்றுமையும் எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கு கொஞ்ச நாட்களுக்கு முன்னரும் ஒரு தடவை இப்படித்தான். அந்த தேவாலயத்தின் முன்வெளி பெரியதும் அழகானதும் மதிய வேளைகளில் நிழலும் காற்றுமாய் சுகமாயிருக்கும். சில நேரங்களில் நிறையப் பேர் இந்த முன் வெளியில் ஊட்கார்ந்து காற்று வாங்கிக் கதை பேசிக்கொண்டிருபபாாகள.

இதற்கு அருகில் குடியிருக்கும் ஒரு தமிழ் கலைஞரும் அவரின் இருநண்பர்களும் அந்த தேவாலயத்தின் படிகளில் உட்கார்ந்து அன்று பின்னேரம் அதில் ஒருவருக்கு நடக்கப் போகும் இன்ரவியூ பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதை எப்படியோ தனது வேவுக்கண்களால் பார்த்து விட்டு பாதிரியார் அந்த இடத்திற்கு அவசர அவசரமாக வருகிறார். மூவரையும் பார்த்து கேள்விகளால் துளைத்தெடுக்கிறார். அந்த இளைஞர் சொல்கிறார் நான் உங்கள் தேவாலயத்துக்கு அருகில் தான் இருக்கிறேன். இவர்கள் என்னுடைய நண்பர்கள். இவர்களும் தற்போது கொழும்பில் தான் இருக்கிறார்கள். இன்று என்னுடைய வீட்டில் சாப்பிட வந்தவர்கள். பின்னேரம் இன்ரவியூ போக வேண்டிய லெட்டர்களையும் காட்டுகின்றார்கள். அதைவிட அந்த இருவரும் யாழ்ப்பாண யூனிவசிற்றியில் பட்டம் பெற்றவர்கள்.

மூன்று பேருடைய அடையாள அட்டைகளையும் வாங்கிப் பார்க்கிறார்கள். இவர்களும் இருவரும் யாழ்ப்பாணமும் வவுனியாவும் . நீ மட்டக்களப்பு. உங்களுக்கு எப்படி? உறவு கர்த்தரின் சிஷ்யன் ஒரு ஆமிக்காரனாகி கேள்வி கேட்டார். இதற்கிடையில் அவர்களைச் சுற்றி ஒரே கூட்டம். அதிலிருந்த அனேகம் பேர் அந்த இளைஞரைத் தெரியும் என்றும், அவர் ஒரு பிரச்சினையுமில்லாதவர் என்றும் சொல்கிறார்கள்.

→15

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

94/06/16